ஆபரண மாளிகை
நகைசேமிப்புத் திட்டத்தில் இணைந்து அதிஷ்டசாலிகள் ஆகுங்கள். அதிஷ்டசாலி தொடர்ந்து பணம் கட்டத் தேவையில்லை.
நியூ ரூபி
7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

NORD OPTICAL
லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய கண்ணாடி, லென்ஸ், என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture 2 4 5 B D E
Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30

ஐரோப்பிய பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 03 | 28 நவம்பர் – 11 டிசம்பர் 2017 | முழக்கம் 061

பிரான்ஸ் வாழ் வர்த்தகர்களே
உங்கள் வர்த்தக விளம்பரங்களை எமது தளத்தில் விளம்பரம் செய்து அதிக பயன் பெறுங்கள்
பரிஸ்தமிழ் .கொம்
www.ParisTamil.Com
பரிஸ்தமிழ்.கொம்மில் விளம்பரம் செய்ய தொடர்பு:
செல்பேசி: 06 64 96 80 79
தொலைபேசி: 09 70 40 50 71
www.paristamil.com



## தமிழர் வாழும் நாடுகள் எங்கும் மாவீரர்தின நினைவெழுச்சி தமிழர் தாயகத்தில் பேரெழுச்சி

## கானல்நீராகிப் போன புலிகளுக்கு பின்னரான அரசியல்

## தாயகத்திலேயே தமிழர்களை நிரந்தரமாக அடிமையாக்கப்போகும் புதிய அரசமைப்பு

## கிழக்கு மாகாணத்தில் தமிழ் இனத்திற்கான இருப்பு கேள்விக்குறி

## வேலியே பயிரை மேயும் கதையாக...

## தமிழ் ஊடகத் துறையின் விருட்சம் ஒன்று சரிந்தது

BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

Boulangerie - Pâtisserie
208 Rue du Faubourg Saint Denis - 75010 Paris
Tél: 01 42 05 00 00 / e-mail : hotbreads@hotmail.fr
Hot Breads
திருமணம், பிறந்தநாள் மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும் தேவையான கேக்குகள், சிற்றுண்டி வகைகள், பாண், பிஸ்கட்டுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்
Eggless கேக்குகள் எமது சிறப்புத் தயாரிப்புக்கள்

எங்கேயும்... எப்போதும்...
Kingstravels
A Better way to fly!
நியாயமான கட்டணம்....
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்...
30, rue Philippe de Girard - 75010 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
M°: La Chapelle / Gare du Nord email: kingstravels@orange.fr

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான்
சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்
64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

பரிஸ் லா சப்பலில்
AMBAAL STORE
பல் பொருள் அங்காடி
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris

விரைவில்...
TKTV.TV
TAMILKATHIR.COM
இணையத் தொலைக்காட்சி!
தொடர்புகளுக்கு
tktv.info@gmail.com

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

# ASCES

## 27 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

**BAC, BREVET பரீட்சைகளில் 100 வீத சித்தி எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்**

விபரங்கள் அறிய எமது இணையத்தளம் **www.asces.fr** **Tél : 07 82 88 59 16** E-mail : asces@free.fr

Le Blanc Mesnil இல் எமது புதிய 5வது கிளை
10, Avenue du Capitaine Fonck, 93150 Le Blanc Mesnil (Le Bourget விமான நிலையத்திற்கு அருகில்)

**Grande Section, CP, CE,CM, Collège, Lycée** வகுப்புகள்
**Maths, Français, Physique, Chimie, SVT, Histoire**

**பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்**

21-11--2017 செவ்வாய் வியாழன் மாலை 4 மணி 6 மணி
26-11-2017 ஞாயிறு காலை 10 மணி (1 நாள்வகுப்பு)
13-11-2017 திங்கள் செவ்வாய் காலை 9 மணி
12-11-2017 ஞாயிறு காலை 10 மணி (*Nationality* வகுப்பு)
20-11-2017 திங்கள் புதன் மாலை 5.30 மணி
புதன் பி.ப 3-7 மணி ( Le Blanc Mesnil )
23-11-2017 வியாழன் காலை 9..30 – 12.30 மணி

**LA COURNEUVE** இல்
**35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve**

**BOBIGNY**
**38, rue Gaston Crépin 93000 Bobigny**

**PARIS**
**3, place de Joinville 75019 Paris M° Crimée**

**Epinay sur seine** 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன
**BAC , BREVET** பரீட்சைகளில் 100வீத சித்தி
**Cambridge University** ஆல் நடாத்தப்படும்
**Starters, Movers, Flyers, Ket, Pet** பரீட்சைக்கான வகுப்புகள்

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

## Bridal makeup & cake icing

மணப்பெண் அலங்காரம்,
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்

---

## ஒலிம்பிக் அச்சகம்
### லாச்சப்பலில்...!

அழைப்பிதழ்கள் – விளம்பர பிரசுரங்கள்
அனைத்தும் அழகாக – மலிவாக – விரைவாக
அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள
அச்சுப்பதிப்பு வேலையில் நீண்டகாலம்
அனுபவம் பெற்றவர்கள்

31, rue Philippe de Girard
75010 Paris
Contact : **06 51 10 44 78**

---

## VICHNESH SHOP

அனைத்து வகையான மளிகைப் பொருட்கள்
மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை
பேசி அட்டைகள் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்



8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

---

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான
சிகையலங்கார நிலையம்.



## COIFFURE VITHUSA

TÉL: 06 52 44 89 27

M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152

40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS

---

பிரெஞ்சு அரசினால்
அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!

## திரு.சகாதேவன்

SAGADEVAN PIERRE

எமது மொழிபெயர்ப்புக்கள் அனைத்து
அரசு நிறுவனங்களிலும் சட்டபூர்வமாக
ஏற்றுக்கொள்ளப்படும். எம்மிடம் நேரடியாக
வருபவர்களுக்கு சலுகையளிக்கப்படும்.

தொடர்பு கொள்ள
**சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்**
(Leader Price கடைக்கு அருகாமையில்)
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

---

## S.P.Raju Jewellery

பழைய நகைகளுக்கு
புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!

199 rue du Fbg St Denis,
75010 Paris
Tél: 01 58 20 17 33

13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42



---

## சுவர்ண மஹால்
## SWARNA MAHAL

பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான
புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
ஓடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத்
தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!

www.swarnamahal-france.com



122 Av Paul Vaillant Couturier 93120 La Courneuve
Tél - 01 48 36 40 75 Port - 06 50 17 51 91 / 06 21 23 87 25
Email: swarnamahal93120@gmail.com

ஈழமுரசு®
mediacentre ஊடகமையம்
முரசு 03 28 நவம்பர் – 11 டிசம்பர் 2017 முழக்கம் 061

"ஓர் இக்கட்டான, சிக்கலான சூழ்நிலையை நாம் இன்று எதிர்கொண்டு நிற்கின்றோம். போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்பு நிலையுமின்றி, இடைக்காலத் தீர்வுமின்றி, இனப் பிரச்சினைக்கு முடிவுமின்றி, நாம் ஒரு அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்து வருகின்றோம்."

– தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்





## தமிழர் வாழும் நாடுகள் எங்கும்



# மாவீரர்தின நினைவெழுச்சி தமிழர் தாயகத்தில் பேரெழுச்சி

*(28.11.2017, செவ்வாய்க்கிழமை)*

தங்களின் உரிமைக்காக, விடுதலைக்காக தங்களது அற்புதமான உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை தமிழ் மக்கள் என்றென்றைக்குமே மறக்கமாட்டார்கள் என்பதை ஒவ்வொரு மாவீரர் நாள் நிகழ்விலும் மக்கள் ஆணித்தரமாக உறுதிப்படுத்தி வருகின்றார்கள். இம்முறையும் தமிழீழத் தேசிய மாவீரர்நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகத்திலும், தமிழகத்திலும் மற்றும் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகள் எங்கினும் மிகவும் எழுச்சிகரமாக இடம்பெற்றுள்ளது.

குறிப்பாக தாயகத்தில் கடந்த 2008ம் ஆண்டுக்குப் பின்னர், சுமார் எட்டு ஆண்டுகளின் பின் மிகவும் எழுச்சிகரமாக இம்முறை மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. சிங்களப் பேரினவாத இரும்புச் சிறைக்குள் தமிழ் மக்கள் அடக்கிவைக்கப்பட்டிருக்கின்ற போதும், தங்களுக்கு கிடைக்கும் சிறிய வாய்ப்பையும் பயன்படுத்தி மாவீரர்களை கௌரவிக்க அவர்கள் பின்நிற்கப்போவதில்லை என்பதை இம்முறை மாவீரர் நாள் எழுச்சியினூடாக அவர்கள் நிரூபித்திருக்கின்றார்கள்.

கடந்த வருடமும் மாவீரர் நாள் ஆரம்பிப்பதற்கு சில நாட்கள் முன்பாக வாள் வெட்டுக் குழுக்களை இறக்கி வன்முறைகளை அரங்கேற்றி, மாவீரர்நாள் நிகழ்வுகள் எழுச்சி பெறாமல் தடுப்பதற்காக இராணுவத்தை களமிறக்கி பதட்டமான சூழ்நிலையை ஏற்படுத்தியது போன்றே, வாள் வெட்டுக் குழுக்கள் முற்றாக அடக்கப்பட்டுவிட்டதாக சிறீலங்கா தம்பட்டம் அடித்ததன் பின்னரும், மீண்டும் வாள் வெட்டுக் குழுக்களை இம்முறையும் களத்தில் இறக்கி வன்முறைகளை அரங்கேற்றி பெரும் கைது நாடகங்களை நடத்தி மாவீரர் வார நாட்களை பதட்டத்துடன் வைத்திருக்க சிறீலங்கா அரசும் இராணுவமும் முயன்றது. ஆனாலும் வடக்கு, கிழக்கு என அனைத்து இடங்களிலுமுள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் துப்பரவாக்கப்பட்டு, சிங்கள இனப்படுகொலை இராணுவத்தினரால் சர்வதேச விதிமுறைகளுக்கு முரணாக இடித்தழிக்கப்பட்ட துயிலும் இல்லங்களில் இருந்து எஞ்சிய கல்லறைகளும், நடுகற்களும் மீட்டெடுக்கப்பட்டு மாவீரர் நிகழ்வுகள் மிகவும் எழுச்சிகரமாக இடம்பெற்றுள்ளன.

அத்துடன், மாவீரர் நிழ்றபடங்கள் வைக்கப்பட்டு பெற்றோர் மற்றும் உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வுகளும் இம்முறை தமிழர் தாயகத்தில் மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. வழமைபோன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாவீரர் நினைவிடத்தில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. மாவீரர் தினத்தை முன்னிட்டு தாயகம், தமிழகம் மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் இம்முறையும் இரத்த தான நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதேவேளை, தமிழகத்தில் பல்வேறு இடங்களிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் எழுச்சிகரமாக நடைபெற்றுள்ளன. புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், மலேசியா, தென் ஆபிரிக்கா, மொரிசியஸ், இந்தோனேசியா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் என மாவீரர்நாள் நிகழ்வுகள் வழமை போன்று எழுச்சிகரமாக நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்
மற்றும் கடலுணவு வகைகள்
Ria MoneyGram WESTERN UNION
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

பாலன்ஸ் சலூான்
தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்
29 rue Philippe de Girard, 75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80



வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்
Crédits - Solutions
திரு.சிவா
2-4 rue de l'Orillon - 75011 Paris
0973255923 - 0665660305
email: creditssolutions@gmail.com

மக்கள் கடை
NEW CASTEL
உங்கள் தேவைகளே
எங்கள் சேவை
61, rue Louis Blanc,75010 Paris.
Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02



ஈழமுரசு
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"
"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel Gratuit

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France
Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

Le Président: S.Pulenthiran
தலைவர்: சு.புலேந்திரன்
Redacteur: K.Jeisanthar
பொறுப்பாசிரியர்: கி.ஜெய்சந்தர்

ஆசிரியர் பீடம்
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
சுந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

விளம்பரம் / விநியோகம்
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

பிரித்தானியா
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

சந்தா விபரம்
வருட சந்தா
பிரான்ஸ் 75€
ஐரோப்பா 85€
ஏனைய நாடுகள் 99€

குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

லாச்சப்பலில்
ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு
பாலன்:
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80

# இந்தியா – பசிபிக் கூட்டணி சீனா எச்சரிக்கை

இந்திய - பசிபிக் பிராந்தியம் தொடர்பாக இந்தியா உள்ளிட்ட நான்கு நாடுகள் அமைத்துள்ள கூட்டணி சீனாவுக்கு எதிரானதாக இருக்கக் கூடாது என்று அந்த நாடு தெரிவித்துள்ளது. இந்திய பசிபிக் பகுதியில் அமைதி, நிலைத்தன்மை, வளர்ச்சி ஆகியவற்றை நிலை நாட்டுவதில் ஒத்துழைப்பை மேற்கொள்வது குறித்து இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நான்கு நாடுகளின் அதிகாரிகள் பிலிப்பின்ஸ் தலைநகர் மணிலாவில் கடந்த 19ம் திகதி பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்திய - பசிபிக் பகுதியில் அமைந்துள்ள அனைத்து நாடுகளின் நீண்டகால நலன்களைப் பேணவும், அனைத்து நாடுகளுக்கும் அந்தப் பகுதியில் சுதந்திரத்தையும் அளிப்பதற்கான நடவடிக்கைகளை கூட்டாக மேற்கொள்ள அந்த 4 நாடுகளும் ஒப்புக்கொண்டன.

தென் சீனக் கடலில் சீனா தனது ஆதிக்கத்தை அதிகரிக்கும் வகையில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இந்த நிலையில், இந்தப் பேச்சுவார்த்தையில் சீனா புறக்கணிக்கப் பட்டது தொடர்பாக சீன வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளரிடம் செய்தியாளர்கள் கேட்டதற்கு, அவர் கூறியதாவது: பசிபிக் பிராந்தியத்தின் நன்மைக்காக நாடுகள் தங்களுக்கிடையே ஒத்துழைப்பை பரிமாறிக் கொள்வதை சீனா வரவேற்கிறது. எனினும், அந்த ஒத்துழைப்பு அனைத்து நாடுகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமென்று சீனா விரும்புகிறது. இதுபோன்ற விவகாரங்கள் அரசியலாக்கப்படுவது ஏற்புடையதல்ல. ஆசிய - பசிபிக் விவகாரங்களுக்காக அமைக்கப்படும் கூட்டணி, சீனாவுக்கு எதிரானதாக இருக்கக் கூடாது என்றார் அவர்.

# பழியைத் துடைப்பீர்....

பேரறிவாளன் வாங்கிக் கொடுத்த பேட்டரிதான் கொலையாளியின் குண்டில் பொருத்தப்பட்டிருந்தன என்பது ஊகமே தவிர, அது நிரூபிக்கப்படவில்லை. 26 ஆண்டுகள் கழித்தாவது தியாகராசன் இந்த உண்மையை உச்சநீதிமன்றத்தில் கூற முன்வந்துள்ளது, வழக்கில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பின் அடித்தளத்தையே அசைத்துள்ளது.

மிக முக்கியமானதொரு கொலை வழக்கில் புலன் விசாரணை சரிவர நடைபெறவில்லை என்பதும் உண்மையான குற்றவாளிகளை மறைப்பதற்கு உதவியிருப்பதும் அம்பலமாகியுள்ளது. உச்சநீதிமன்றத்தில் மூத்த நீதிபதியாகவும் இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஆயத்தின் தலைவராக இருந்தவரும், சிறப்பு புலனாய்வுக் குழுவின் முக்கிய அதிகாரியாக இருந்தவரும் வெளியிட்டுள்ள உண்மைகள் நாட்டு மக்களுக்கு அதிர்ச்சியை அளித்துள்ளன.

ஏற்கெனவே ராஜீவ் காந்தி படுகொலையின் பின்னணி குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட ஜெயின் ஆணையம் முக்கியமான கேள்வியை எழுப்பியது. சந்திராசாமிக்கு உள்ள சர்வதேசத் தொடர்புகளின் பின்னணியில் ராஜீவ் கொலையில் அவருக்கு உள்ள பங்கு குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

மேலும், ராஜீவ் படுகொலையில் வெளிநாட்டு சக்திகளின் பங்கு இருந்திருப்பது உறுதிப்படுவதாகவும் அது குறித்தும் விசாரிக்க வேண்டும். இந்த அம்சங்களை ஆராய்வதற்கு சிறப்புப் புலனாய்வுக் குழு அடியோடு தவறிவிட்டது. எனவே, இது குறித்து முழுமையான மறு விசாரணை நடத்தப்பட வேண்டும் என கூறியது. அதற்கிணங்க பல்நோக்கு விசாரணை குழு ஒன்றினை மத்திய அரசு அமைத்தது. ஆனால், அந்தக் குழு 17 ஆண்டு காலம் கடந்தும் தனது புலனாய்வை முடிவு செய்து இறுதி அறிக்கையை இன்னமும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மூன்று மாதத்திற்கு ஒருமுறை முத்திரையிடப்பட்ட உறை ஒன்றை தடா நீதிமன்றத்திற்கு அனுப்பி வருகிறது. அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதோ அல்லது வெறும் உறையா என்பதோ யாருக்கும் தெரியாத மர்மமாகும். இது குறித்து பேரறிவாளன் தொடர்ந்த வழக்கு தற்போது உச்சநீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளது.

முன்னாள் நீதியரசர் கே.டி. தாமஸ், முன்னாள் புலன் விசாரணை அதிகாரி தியாகராசன் ஆகியோர் வெளியிட்டுள்ள உண்மைகள் ஜெயின் ஆணையத்தின் ஐயத்தை உறுதிப்படுத்தியுள்ளன. இவற்றைப் போக்க வேண்டிய சிறப்பு விசாரணைக் குழு 17 ஆண்டு காலமாக காலங்கடத்துவதைப் பார்க்கும் பொழுது உண்மையான குற்றவாளிகளை மறைப்பதற்காகவே இவ்வாறு செய்கிறதோ என்ற ஐயம் எழுவது இயற்கை.

உச்சநீதிமன்றம், சி.பி.ஐ. ஆகியவற்றின் மீது படிந்துள்ள பழிகளைப் போக்க வேண்டிய கடமை மத்திய அரசிற்கு உண்டு. அதன்படி எத்தகைய குற்றமும் செய்யாது சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்ய முடியாமலும், உண்மைக் குற்றவாளிகளைக் கண்டறிந்து உரிய தண்டனை அளிக்க முடியாத நிலையிலும் மத்திய அரசு உள்ளது.

உச்சநீதிமன்றத்தில் பேரறிவாளன் தொடுத்த வழக்கு நடைபெற்று வருகிறது. அறத்தை நிலைநாட்டும் வகையில், மத்திய அரசு 26 ஆண்டு காலமாக சிறையில் வாடும் எழுவரை உடனடியாக விடுதலை செய்வதற்கு ஒப்புதல் அளிக்கும் வகையில் உச்சநீதிமன்றத்தில் ஒரு மனுவினைத் தாக்கல் செய்ய முன்வருமாறு வேண்டிக்கொள்கிறேன்.

இதன் மூலம் 'பழியைத் துடைத்து அறத்தைக் காப்பது அரசின் கடமையாகும்' என வள்ளுவர் கூறியதை நிலை நாட்ட முன்வருவது மத்திய அரசின் கடமையாகும்.

நன்றி – தினமணி

## தமிழர் தாயகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளில் இருந்து...












ஈழமுரசு®

# அவர்களுக்கு வந்தால் இரத்தம் எங்களுக்கு வந்தால் தக்காளியா?

மியன்மாரில் ரோஹிங்கியோ முஸ்லிம்களுக்கு எதிராக அந்நாட்டு அரசும், கடும்போக்கு மதவாதிகளும் முன்னெடுத்து வரும் நடவடிக்கை உலகை அதிர்ச்சியடைய வைத்திருக்கின்றது. கடந்த இரண்டு மாதங்களில் சுமார் ஆறு இலட்சம் மக்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என வேறுபாடின்றி ஏராளமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கும் கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

ரோஹிங்கியோ முஸ்லிம்களுக்கு எதிரான இந்த விவகாரம் உலகளவில் மியன்மார் அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசரத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் மியான்மர் அரசுக்கு சர்வதேச நாடுகள் நெருக்கடி கொடுத்து வருகின்றன. ரோஹிங்கியோ முஸ்லிம்களைப் பாதுகாக்க சர்வதேசம் இத்தனை வேகமாக விரைந்து நடவடிக்கை எடுக்க முனைந்திருப்பது வரவேற்கத்தக்க விடயம்.

இதன் ஒருபடி மேலேபோய், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் மியன்மார் சென்று அரச மற்றும் இராணுவ தரப்பையும் – ரோஹிங்கியோ மக்கள் தரப்பினரையும் சந்தித்து பேசினார். பின்னர் அந்நாட்டில் வைத்து ஊடகவியலாளர்களிடம் நடந்த சம்பவங்கள் கொடூரமானவை. மனித உரிமைகள் மீறப்பட்டது தொடர்பாக நம்பகமான விசாரணை வேண்டும் என வலியுறுத்தினார். நாடு திரும்பியபின், ரோஹிங்கியோ முஸ்லிம்களுக்கு எதிராக, மியான்மாரின் ராக்கைன் மாநிலத்தில் அந்நாட்டுப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை, இனச் சுத்திகரிப்பு (ethnic cleansing) என்று தெரிவித்து அறிக்கையை வெளியிட்டுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன், இவ்வாறான கொடூரமான செயற்பாடுகளுக்கு, அந்நாட்டு இராணுவம் பொறுப்பேற்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். அத்துடன், பதற்றத்தை அதிகரிக்கும் வகையிலும், இராணுவ நடவடிக்கைகளைத் தூண்டு வகையிலும் யாராவது நடந்துகொண்டிருந்தால்கூட, இவ்வளவு கொடூரமான வன்முறைகளை அவர்கள் மீது கட்டவிழ்த்து விடுவதை நியாயப்படுத்த முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இனச் சுத்திகரிப்புக் குற்றச்சாட்டுக்களை மியன்மார் அரசு மறுத்தபோதும், ஐ.நா. சபை உட்பட அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் ரோஹிங்கியோ முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெறுவை இனச்சுத்திகரிப்பு என்று கூறமுற்பட்டுள்ளமை அந்த மக்களுக்கு மிகப்பெரும் ஆறுதலான ஒரு விடயமாகும். இனச் சுத்திகரிப்புக்கு உள்ளாகும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கவும் அவர்களின் பிராந்தியங்களில் அந்த மக்களை பாதுகாப்பாக வாழவைக்கவும் தேவை ஏற்பட்டால் அவர்களுக்கான நாட்டை அமைத்துக்கொடுக்கவும் ஐ.நா. சபையால் முடியும். எனவே இனச் சுத்திகரிப்பு என்ற இந்த ஒற்றைச் சொல்லாடல் அந்த மக்களுக்கு ஒரு பாதுகாப்பு அரணை எதிர்காலத்தில் ஏற்படுத்திக் கொடுக்க வழிவகுக்கும் என்று நம்பலாம்.

--------------------

உலகை உலுக்கிய இனப்படுகொலைக்கு காரணமாக இருந்த முன்னாள் பொஸ்னிய – சேர்பிய இராணுவ தளபதி ராட்கோ மிலாடிச், ஆயுள் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று ஐ.நா. குற்றவியல் தீர்ப்பாயம் கடந்த நவம்பர் 22ம் திகதி தீர்ப்பு வழங்கியுள்ளது. 1992ம் ஆண்டு முதல் 1996ம் ஆண்டுவரை பொஸ்னிய சேர்பிய இராணுவ தளபதியாக இருந்த ராட்கோ மிலாடிச், பொஸ்னிய போரின்போது இனப்படுகொலை மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் புரிந்துள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளதாக தீர்ப்பாயம் கூறியுள்ளது. த ஹேக்கில் அமைக்கப்பட்ட ‘முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தில்’ 530 நாட்கள் நடைபெற்ற வழக்கு விசாரணையின் முடிவில், ராட்கோ மிலாடிச் மீதான குற்றங்களில் பெரும்பாலானவை நிரூபிக்கப்பட்டுள்ளதாக கூறிய நீதிபதி, அவருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

ஏழாயிரம் பொஸ்னிய முஸ்லிம் ஆண்களும், சிறுவர்களும், சிரெப்ரெனிகாவில் இனப்படுகொலை செய்யப்பட்டதற்கு மிலாடிச் காரணம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், சராஜிவோ முற்றுகையின்போது, வேண்டுமென்றே பொது மக்கள் மீது எறிகணை மற்றும் குறிசூட்டு வகை தாக்குதலை மிலாடிச் நடத்திய குற்றமும் நிரூபிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த குற்றங்களை மிலாடிச் மறுத்துள்ளதுடன், தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்யப்போவதாக அவருடைய வழக்கறிஞர்கள் மூலம்கூறியுள்ளார். அதேநேரம்,ஐ.நா மனித உரிமை ஆணையத்தின் தலைவர் சையத் ராத் அல்–ஹுசைன் இதனை நியாயத்துக்கு கிடைத்த பெரும் வெற்றி என்று கூறியுள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்கள் மீது சிங்களப் பேரினவாத அரசு நிகழ்த்திய இன அழிப்பை இந்த உலகம் போர்க் குற்றம், மனித உரிமை மீறல் என்ற வரையறையைத் தாண்டி இன்றுவரை ஓர் இனப்படுகொலையாகவோ ஏன் இனச் சுத்திகரிப்பாகவோ கூட ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. ஆனால் ரோஹிங்கியோ முஸ்லிம்களுக்கு எதிரான குற்றங்களை இனச் சுத்திகரிப்பாக உடனடியாகவே அங்கீகரித்திருக்கின்றது.

பொஸ்னிய போரின்போது இராணுவத் தளபதியாகச் செயற்பட்ட ராட்கோ மிலாடிச் இனப்படுகொலை மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் புரிந்துள்ளதாக குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட்டு இப்போது தண்டனையும் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இவ்வாறான இனப்படுகொலையில் ஈடுபட்ட சிறீலங்காவின் இராணுவத் தளபதிகளும், முப்படைத் தளபதிகளாக இருந்த சிறீலங்காவின் அரச தலைவர்களும் ஐ.நா. சபைகளுக்குள்ளும் சர்வதேச நாடுகளிலும் சுந்திரமாக வலம்வர முடிகின்றது.

ஒரு படத்தில் வடிவேலு கேட்பதுபோல், ‘ஏன்யா அவர்களுக்கு வந்தால் இரத்தம், எங்களுக்கு வந்தால் அது தக்காளிச் சட்டினியா?’

என்றுதான் உலகத்தைப் பார்த்துக் கேட்கத் தோன்றுகின்றது.

# தமிழ் ஊடகத் துறையின் விருட்சம் ஒன்று சரிந்தது

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களால் கௌரவிக்கப்பட்டவர் என்ற பெருமைக்குரிய மூத்த ஊடகவியலாளர் கோபு (எஸ்.எம்.கோபாலரத்தினம்) அவர்கள் விடைபெற்றுள்ளார். அரை நூற்றாண்டு கால (1953 – 2003) ஊடகப் பணியைப் பாராட்டி 2004ம் ஆண்டு யூன் மாதம் 4ம் திகதி தேசியச் சின்னம் பொறிக்கப்பட்ட தங்கப் பதக்கத்தை வழங்கி தமிழீழத் தேசியத் தலைவர் அவரைக் கௌரவித்திருந்தார்.

‘எஸ்.எம்.ஜி’ என்றும் ‘கோபு’ என்றும் செல்லமாக எல்லோராலும் அழைக்கப்படுபவரும், இலங்கைத் தமிழ் ஊடகத்துறையின் விருட்சமெனப் புகழப்படுபவரும், அரை நூற்றாண்டுக்கு மேல் பத்திரிகையையே வாழ்வாக்கிக் கொண்டிருந்தவருமான ஊடகவியலாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம் அவர்கள் தனது 87வது வயதில் மட்டக்களப்பில் கடந்த 15ம் திகதி சாவைத் தழுவிக்கொண்டுள்ளார்.




தேசியத் தலைவரிடம் விருது பெற்றபோது



1953ம் ஆண்டு கொழும்பில் வீரகேசரி நாளிதழில் ஒப்புநோக்குனராக ஊடகத்துறைக்குள் காலடி எடுத்து வைத்து ஏழு ஆண்டுகள் அந்தப் பணியில் இருந்தவர். பின்னர், யாழ்ப்பாணத்தில் தங்கராசா, சண்முகரெத்தினம் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட ஈழநாடு நாளிதழில் பணியாற்றத் தொடங்கினார். செய்தி ஆசிரியர், பிரதம ஆசிரியர என வளர்ந்து ஈழநாடு பத்திரிகையில் இருபத்தொரு ஆண்டுகள் பணியாற்றினார். இவரது காலத்திலேயே ஈழநாடு பத்திரிகை மக்கள் மத்தியில் பிரசித்தி பெற்றதுடன் பல்வேறு ஆபத்தான காலகட்டங்களில் அதில் பணியாற்றியிருந்தார். 1981ம் ஆண்டு சிறீலங்கா இராணுவத்தினரால் ஈழநாடு பத்திரிகை எரியூட்டப்பட்டபோது அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். ஈழநாட்டில் பணியாற்றியபோது எத்தனையோ ஊடகவியலாளர்கள் புதிது புதிதாக உருவாக தனது அறிவுச் சிந்தனைகளை அள்ளிவழங்கினார். இலங்கையின் மூத்த பத்திரிகையாளர்களான கானமயில்நாதன், திருச்செல்வம், குகநாதன், கந்தசாமி, அனந்த பாலகிட்ணர் என பல பத்திரிகையாளர்களை செதுக்கிய பெருமை இவரையே சாரும். கோபு ஐயா அவர்களின் நிழலில் சிறிது நேரம் என்றாலும் இளைப்பாறும் சந்தர்ப்பம் பலருக்குக்கிடைத்திருக்கிறது. அந்தக் கோபு என்ற இதழியல் கல்லூரியில் கற்று வெளியேறியவர்கள் சிறந்த எழுத்தாற்றலுள்ள ஊடகவியலாளர்களாக பலர் இந்த உலகின் பல மூலைகளிலும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

ஈழநாடு பத்திரிகையில் அவரால் நீண்டகாலம் நிலைத்து நிற்கமுடியவில்லை. இனவிடுதலைக்கான போர் தீவிரம் பெற்றிருந்த நிலையில், மக்களுக்கு சொல்லவேண்டிய கருத்துக்களைத் துணிந்து சொல்வதற்கு மாற்றுவழி ஒன்றைத் தேடியபோதுதான் உதித்தது ஈழமுரசு பத்திரிகை.

இந்திய இராணுவத்தால ஈழமுரசு எரியூட்டப்பட்டதன் பின்னர், இந்திய இராணுவத்தின் முற்றுகைக்குள் தலைமறைவாக இயங்கி, இடம்மாறி இடம்மாறி பத்திரிகையை வெளிக் கொண்டுவந்தது இவரது துணிவிற்கும், உறுதிக்கும் ஒரு எடுத்துக்காட்டு.




பிரான்ஸ் ஈழமுரசு தலைமையகத்தில்

**பிரான்ஸ் ஈழமுரசு பத்திரிகைக்கும் வந்து சில காலம் வழிகாட்டியிருந்தார். அப்போது தனது நிறைந்த பல அனுபவங்களை அங்கு பணியாற்றிய ஆசிரியர்களுக்கு அள்ளி வழங்கினார். எந்த அச்சுறுத்தலுக்கும் மத்தியிலும் மக்களுக்கு சொல்லவேண்டிய கருத்தை துணிந்து சொல்லவேண்டும், மக்களுக்கு உண்மையைக் கொண்டு சென்று சேர்ப்பதற்கு ஓர் ஊடகவியலாளன் பின் நிற்கக்கூடாது என்பதை தனது அனுபவங்களில் இருந்து கற்றுத் தந்தார். அவரது அந்த அனுபவக் கருத்துக்கள்தான் நம்பிக்கையையும், உறுதியையும் தந்து இத்தனை நெருக்கடிகள், அச்சுறுத்தல்களையும் கடந்து ஈழமுரசு இன்றும் வெளிக்கொண்டுவர உதவுகின்றது.**

தொடர்ச்சி 16ம் பக்கம்

### வாள்களை கட்டுப்படுத்தப் பணிப்பு!

சட்டம் ஒழுங்குக்குச் சவால் விடும் அளவுக்கு அதிகரித்துள்ள வாள் வெட்டுச் சம்பவங்களை உடன் கட்டுப்படுத்துமாறும், அதன் சூத்திரதாரிகளை விரைந்து கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறும் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் சிறீலங்கா காவல்துறையினருக்குப் பணித்துள்ளார்.

### கஞ்சாவுடன் சிப்பாய் கைது!

பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த சிறீலங்கா இனப்படுகொலைச் சிப்பாய் ஒருவர் 2 கிலோ கஞ்சாவுடன் புளியங்குளத்தில் கைது செய்யப்பட்டார். சிப்பாய் விடுமுறையில் சென்றபோது கஞ்சாவைக் கொண்டு சென்றுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்டவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார் என்றும் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது என்றும் சிறீலங்காக் காவல்துறையினர் தெரிவித்தனர்.

### தற்கொலைகள் அதிகரிப்பு!

இலங்கையில் தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை மீண்டும் உயர்வடைந்துள்ளது என்று ஆய்வறிக்கை ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது. இலட்சத்துக்கு 34.6 வீதம் என்ற ரீதியில் தாமாக உயிரை மாய்ப்பவர்களின் எண்ணிக்கை உள்ளது என்று உலக சுகாதார அமைப்பின் புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் அதிகளவான ஆண்களே இவ்வாறு உயிரை மாய்த்துக் கொள்கின்றனர் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேவேளை இலங்கையில் 59 வீதமான ஆண்கள் தாமாக உயிரை மாய்த்துக் கொள்கின்றனர் என்று ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலக சுகாதார அமைப்பின் உயிரை மாய்த்துக் கொள்ளும் எண்ணிக்கைக்குரிய நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் இலங்கையும், இரண்டாவது இடத்தில் கயானாவும், மூன்றாவது இடத்தில் மங்கோலியாவும் காணப்படுகின்றது குறிப்பிடத்தக்கது.

### சிறீலங்காவிற்கு சீனாவின் இலவச அரிசி!

வறட்சியால் உற்பத்தி பாதிக்கப்பட்ட இலங்கைக்கு சீனா அரிசி வழங்குகிறது. இலங்கை மக்களுக்கு 2,750 மெட்ரிக் தொன் அரிசியை இலவசமாக சீன வழங்குகிறது. சிறீலங்காவின் வேலைத் திட்டத்திற்கு உதவும் வகையில் சீன அரசு அரிசியை நன்கொடையாக வழங்குவதாகக் கூறப்பட்டுள்ளது. எந்த வேலைத் திட்டம் என்பது தெரியவரவில்லை.

### விபத்துகளில் 3017 பேர் பலி!

கடந்த வருடத்தில் 39 ஆயிரத்து 199 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இந்த விபத்துக்களினால் 3017 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 2015ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடத்தில் விபத்துகளின் எண்ணிக்கையும் உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளதாக சிறீலங்காவின் ஆளும் கட்சி பிரதம கொறடாவும் அமைச்சருமான கயந்த கருணாதிலக சபையில் தெரிவித்தார். 2014ம் ஆண்டு 35 ஆயிரத்து 966 விபத்துகளும் 2015ல் 38 ஆயிரத்து 107 விபத்துகளும் இடம்பெற்றுள்ளன என்றார்.

## அழியும் தமிழர் தேசம் 11

# யாழில் உணவகத்திற்கு சிங்களப் பெயர் வைக்குமாறு நெருக்கடி

யாழ்ப்பாணத்தில் திறக்கப்படும் உணவகத்திற்கு சிங்களத்தில் பெயர் வைக்குமாறு சிறீலங்கா அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. தமிழர் தாயகத்தை சிங்களமயப்படுத்துவதில் பகீரதப் பிரயத்தனங்களை முன்னெடுத்துவரும் சிறீலங்கா ஆட்சியாளர்கள், வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த அம்மாச்சி உணவகத்தின் யாழ்ப்பாண உணவகத்துக்கு சிங்களத்தில் பெயர் வைக்குமாறு கடும் அழுத்தங்களைப் பிரயோகித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் இதுவரை காலமும் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா




ஆகிய மாவட்டங்களில் அம்மாச்சி உணவகம் ஆரம்பிக்கப்பட்டு மக்கள் மத்தியில் பிரபல்யமாக இயங்கி வருகின்றது. இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்திலும் அம்மாச்சி உணவகம் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாயப் பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டடம் அமைக்கப்பட்டது. கொழும்பு விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்கள வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளதாலும் கொழும்பு அரசின் நிதிப்பங்களிப்புடன் கட்டடம் அமைக்கப்பட்டதாலும் அம்மாச்சி உணவகம் என்ற பெயரை வைப்பதில் சில நிபந்தைகளை கொழும்பு அரசு மாகாண விவசாய அமைச்சுக்கு விதித்துள்ளது.

இந்த நிலையில் நீண்ட இழுபறிக்குப் பின்னர் அம்மாச்சி உணவகம் என்ற பெயருடன் சிங்களத்தில் கெல பொஜன் ஹல என்ற பெயரையும் இணைத்து மூன்று மொழியிலும் பெயர்ப்பலகை வடிவமைக்கப்பட்டு வடக்கு மாகாண அமைச்சு மற்றும் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் வடக்கு மாகாண அரசியல்வாதிகள் இதனை ஏற்கமுடியாது என கூறியுள்ளனர். அதேவேளை, வட மாகாண முதலமைச்சரும் அம்மாச்சி உணவகம் என்றே பெயர் வரவேண்டும் வேறு எந்த வாசகமும் இருக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டை தன்னிடம் கூறியுள்ளதாக, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உணவகத்துக்கு நாம் அம்மாச்சி உணவகம் என்ற பெயர்ப் பலகையை வைக்காவிட்டாலும் மக்கள் மத்தியில் அது அம்மாச்சி உணவகமாகவே இயங்கி வருகின்றது. கொழும்பு விவசாய அமைச்சரின் அழுத்தத்துக்கு அமையவே சிங்களப் பெயரும் வைக்க வேண்டும் என முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்றார்.

## தமிழ் இளைஞர்களை கடத்தி காணாமல்போகச் செய்த சிப்பாய் மாமியார் வேதனையில் தற்கொலை

2008ம் ஆண்டு தமிழ் இளைஞர்கள் சிலரைக் கடத்திச் சென்று காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டு, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் கொமாண்டர் சுமித் ரணசிங்கவின் மாமியார் கிணற்றிருந்து சடலமாக கடந்த வாரம் மீட்கப்பட்டார். குறித்த கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் முன்னாள் கடற்படை ஊடகப் பேச்சாளர் டீ.கே.பி.தசநாயக்க மற்றும் சுமித் ரணசிங்க உள்ளிட்ட ஐந்து இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், சுமித் ரணசிங்க பிணைக் கோரி பல தடவைகள் நீதிமன்றில் விண்ணப்பித்திருந்த போதும், அது நிராகரிக்கப்பட்டதாகவும், இதன் காரணமாகவே தனது தாயார் மனமுடைந்து உயிரை மாய்த்துக் கொண்டதாகவும் இராணுவ சிப்பாயான சுமித் ரணசிங்கவின் மனைவி தெரிவித்துள்ளார்.

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

### மதில் சரிந்து விழுந்ததில் ஒருவர் சாவு

மதில் சரிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் கடந்த 17ம் திகதி நடந்துள்ளது. அரியாலையைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான முத்துலிங்கம் சுடர்சீலன் (வயது-42) என்பவரே உயிரிழந்தார். மதிலில் திருத்த வேலைகள் செய்து கொண்டிருந்தபோது மதில் சரிந்து விழுந்தது என்றும், அதில் அவர் தலையில் படுகாயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### உழவு இயந்திரத்தில் சிக்கி இளைஞன் சாவு

மட்டக்களப்பு, செங்கலடியில் உழவு இயந்திரத்தில் சிக்கி இளைஞரொருவன் கடந்த 17ம் திகதி காலை உயிரிழந்தார். செங்கலடிப் பகுதியிலுள்ள தோடிச்சோலை ஆற்றில் மண் ஏற்றிவரும் போது கொடுவாமடு தம்பானவெளி பகுதியை சேர்ந்த 17 வயதுடைய லவன் என்ற இளைஞன் உழவு இயந்திர சாரதியின் அருகில் அமர்ந்திருந்த வேளை சடுதியாக சறுக்கி விழுந்த போது உழவு இயந்திரத்தின் டயர் நெஞ்சின் மீது ஏறியதில் இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான் எனத் தெரிவிக்கப்பட்டது.

### புதுக்குடியிருப்பு விபத்தில் இளைஞர் பலி!

புதுக்குடியிருப்பு, ரெட்பானா இளங்கோபுரத்தில் இடம்பெற்ற உழவு இயந்திரம் ஈருருளி வித்தில், ஈருருளியில் பயணித்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த 14ம் திகதி மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் இளங்கோபுரம் கிராமத்தைச் சேர்ந்த அழகிரி பவீந்திரன் (வயது-22) என்ற இளைஞரே பரிதாபகரமாக உயிரிழந்தார். பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் உள்ள ரெட்பானா சந்தியில் இருந்து இளங்கோபுரம் நோக்கிப் பயணித்த உழவு இயந்திரத்தின் சாரதி திடீரென வீதியை ஊடறுத்து தனது வீட்டுப்பக்கமாக அதைத் திருப்பியபோது எதிர் திசையில் தனித்தனியாக இரண்டு உந்துருளிகளில் ரெட்பானா நோக்கி பயணித்த இளைஞர்களின் உந்துருளிகள் உழவு இயந்திரத்துடன் மோதுண்டு விபத்து இடம்பெற்றது.



### இளைஞன் வெட்டிக்கொலை

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை நீலண்டமடு பகுதியில், 18 வயது இளைஞரொருவர் கத்தியால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம், கடந்த 21ம் திகதிஇரவு இடம்பெற்றுள்ளது. அரசடித்தீவு கிராமத்தைச் சேர்ந்த அழகுதுரை அதீஸ்காந்தன் எனபவரே, இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார். வீடொன்றில் ஏற்பட்ட தகராறின் போது, அயலிலிருந்து அவதானித்துக் கொண்டிருந்த இரு இளைஞர்கள், அதைத் தடுக்க முற்பட்டுள்ளனர். இவ்வேளையில், தகராற்றில் ஈடுபட்ட நபர், அவரது கையிலிருந்து சீவல் தொழிலுக்குப் பயன்படுத்தும் கத்தியால் இளைஞன் ஒருவனின் வயிற்றை வெட்டியுள்ளார். மேலும், மற்றைய இளைஞனுக்கும் சிறு காயத்தை ஏற்படுத்தியுள்ளார். இதில் வயிற்றுப் பகுதியில் வெட்டுப்பட்ட மேற்படி இளைஞன் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.


### யாழில் உழவு இயந்திரத்தால் மோதி ஒருவர் கொலை

யாழ். பருத்தித்துறை பகுதியில் உழவு இயந்திரத்தினால் மோதி நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். பருத்தித்துறை முதலாம் கட்டை பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான சிதம்பரப்பிள்ளை சிவபாலன் (வயது 48) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். வெதுப்பக உரிமையாளரான இவர் கடந்த 25ம் திகதி சனிக்கிழமை அதிகாலை 1.45 மணியளவில் அவரது நண்பர்களுடன் மதுபானம் அருந்திக் கொண்டிருந்துள்ளார். அதன் போது ஏற்பட்ட தகராறின் பின்னர், அவர் அங்கிருந் சென்ற சமயம், அவரது எதிரியான உழவு இயந்திர சாரதி, உழவு இயந்திரத்தினால் மோதி கொலை செய்துள்ளார். சிவபாலன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்த சம்பவத்தின் பின்னர், 43 வயதுடைய உழவு இயந்திரத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

### காணாமல் போனவர் சடலமாக மீட்பு

ஒரு வாரத்துக்கு முன்னர் காணாமல் போயிருந்த குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 22ம் திகதி கோண்டாவில் பகுதியில் உள்ள கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கண்டி வீதி கொடிகாமத்தை சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான வைத்திலிங்கம் சுப்பிரமணியம் (வயது 51) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார். குறித்த நபர் யாழ் மாநகரசபையில் கடமையாற்றி வந்துள்ளார்.

தொடர்ச்சி 10ம் பக்கம்


சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
Tél: 0 651 651 729 - 06 95 95 63 73
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis

# கானல்நீராகிப் போன புலிகளுக்கு பின்னரான அரசியல்

கலாநிதி சேரமான்

தமிழர்களின் வாழ்வோடும், பண்பாட்டோடும் ஒன்றித்துப் போன நாட்களில் தனக்கேயுரிய சிறப்பம்சங்களைக் கொண்டதாக மாவீரர் நாள் திகழ்கிறது.

27.11.1989 அன்று மாவீரர் நாளைப் பிரகடனம் செய்து வைத்த பொழுது தனது அறிக்கையில் தமிழீழத் தேசியத் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்:

"ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும், அறிவாளிகளையும், பெண்களையும் மதிக்காத இனம் ஓர் காட்டுமிராண்டி நிலையில், மாவீரர்களை மதிப்பளிக்கும் நிகழ்வாக மட்டுமன்றி, தமிழீழ தாயகத்திலும், ஈழத்தீவின் ஏனைய பகுதிகளிலும், தாய்த் தமிழகத்திலும், உலகெங்கும் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் அனைத்துத் தமிழர்களையும் ஒரே குடையின் கீழ் ஒருங்கிணைக்கும் நிகழ்வாக மாவீரர் நாள் திகழ்கிறது.

எதிரியின் திட்டமிட்ட சதி நடவடிக்கைகள் காரணமாக 2009 வைகாசி 18இற்குப் பின்னர் பல அணிகளாகப் புலம்பெ-



உருவாக்கி விடலாம் என்று கொழும்பிலும், டில்லியிலும் கோலோச்சிக் கொண்டிருந்தவர்கள் கனவு கண்டார்கள்.

அதுகாறும் தென்னிலங்கையிலும், இந்தியாவிலும் தலைமறைவாகவும், மேற்குலக நாடுகளில் ஆங்காங்கே சிதறுண்டும் கிடந்த புல்லுருவிகளுக்கு ஊட்டச் சத்து அளிக்கப்பட்டு, தூசிபடிந்து கிடந்த அவர்களின்

> ஆனாலும் இவையெல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான அரசியலை உருவாக்கவில்லை. கொழும்பைப் பொறுத்தவரையும் சரி, டில்லியைப் பொறுத்தவரையும் சரி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான அரசியல் என்பது இன்றும் கானல்நீராகவே காணப்படுகின்றது.

இனமாகத்தான் மாறி அழிந்து விடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள். அதேவேளை வீரர்களுக்குத்தான் பஞ்சமாக இருந்தது. ஆனால் இன்று இந்த மாவீரர் நாளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆம், எமது வீரர்களைக் கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம்.

இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. ஆனால் இன்று நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவுகூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது. இன்று எமது இனம் உலகிலேயே தலை நிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த் தியாகம் தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு இன்று உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்."

மாவீரர் நாள் பிரகடனம் செய்யப்பட்டு கடந்த 27.11.2017 திங்கட்கிழமையுடன் இருபத்தெட்டு ஆண்டுகள் கடந்துள்ள யர்வாழ் தமிழர்களும், தாயகத் தமிழர்களும் பிரிந்து நின்றாலும், மாவீரர் நாள் என்று வரும் பொழுது, மாவீரர்களை நினைவுகூர்வது என்று வரும் பொழுது, எவருமே அதனை ஆட்சேபிப்பது கிடையாது. விரல் விட்டு எண்ணக்கூடிய புல்லுருவிகளைத் தவிர எவருமே மாவீரர் நாளில் மாவீரர்களை இழிவுபடுத்தும் வகையிலான செய்கைகளில் ஈடுபடுவதும் கிடையாது.

இது மாவீரர் நாளின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

இன்றும் சரி, அன்றும் சரி, காலம் காலமாக மத நிகழ்வுகள் மட்டுமே தமிழர்களை ஒரே கோட்டில் இணைக்கும் நிகழ்வுகளாகத் திகழ்ந்தன.

ஆனால் மதங்களைக் கடந்து, எமது சமூகத்தில் இன்றும் புரையோடிக் கிடக்கும் ஏனைய பேதங்களைக் கடந்து, மானமுள்ள ஒவ்வொரு தமிழர்களையும் இணைக்கும் நாளாக மாவீரர் நாள் மாறியிருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் இறுதி வாரங்கள் நெருங்க, நெருங்க கொழும்பிலும், டில்லியிலும் ஆனந்த நர்த்தனங்கள் அரங்கேறிக் கொண்டிருந்தன. திட்டமிட்டபடி தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழித்து விட்டால், இனவழிப்பிற்கு எதிரான ஆயுத எதிர்ப்பியக்கமாக மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஈழத்தீவில் சூறைக்காற்றாக வீசிக் கொண்டிருந்த தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விட்டால், புலிகளுக்குப் பின்னரான அரசியல் ஒன்றை மட்டி அரசியல் சித்தாந்தகளுக்கு கடுகதியில் உயிரூட்டம் அளிக்கப்பட்டது.

மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அழிந்து விட்டால் இனித் தானே தமிழர்களின் தானைத் தலைவன் ஆகிவிடுவேன் என்ற கற்பனையில் மிதந்த இராஜவரோதயம் சம்பந்தர், முள்ளிவாய்க்காலில் சிங்களப் படைகளின் முற்றுகை இறுக, இறுக மேசையில் குத்தி மகிழ்ந்தார்.

அந்தோ பாவம். இவர்கள் எவரதும் கனவுகள் பலிக்கவேயில்லை.

ஏறத்தாழ இருபது ஆண்டுகளாக இயங்கிய தமிழீழ நடைமுறை அரசு முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்டது உண்மை தான். நான்காம் கட்ட ஈழப்போரில் சிங்களப் படைகள் வெற்றியீட்டியதும் உண்மைதான். மக்களோடு மக்களாக நிராயுதபாணிகளாகத் தப்பிச் செல்ல முற்பட்ட பொழுது சிறைப்பிடிக்கப்பட்டவர்களும், சரணடைந்தவர்களுமாகப் போராளிகள், காவல்துறை வீரர்கள், துணைப்படை வீரர்கள், பணியாளர்கள், ஆதரவாளர்கள் என்று ஏதோ ஒரு விதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்புலத்தைக் கொண்டிருந்த பதினோராயிரம் பேரை வதை முகாம்களில் சிங்கள அரசு அடைத்து வைத்ததும், அவர்களைக் கொடும் வதைகளுக்கு உட்படுத்திய பின்னர் புனர்வாழ்வு என்ற பெயரில் விடுதலை செய்ததும் உண்மை தான்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

### தமிங்கில நாடாகும் தமிழீழம் !

தமிழைப் பாதுகாப்பதற்கு விடுதலைப் புலிகள் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தார்கள். ஆனால் தற்போது தமிழ்நாட்டைப்போல் நுனி நாக்கில் ஆங்கிலம் பேசும் தமிங்கில மோகம் அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் தமிழர் தாயகத்தில் ஆங்கிலப் பாடசாலைகளும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. வடக்கு மாகாணத்தில் தற்போது ஆங்கில மொழியை அடிப்படையாகக் கொண்ட தனியார் முன்பள்ளிகள் அதிகரித்துள்ளன. அவற்றின் செயல்பாட்டை நிறுத்த வேண்டும். அத்தோடு வடக்கு மாகாண முன்பள்ளிகள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பில் சரியான ஒரு நிலைப்பாட்டை உண்டாக்க வழிவகைகள் செய்ய வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கம் சார்பில் வடக்கு மாகாணத்திற்கான சிறீலங்காவின் ஆளுநருக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

### மன்னாருக்கு புதிய ஆயர் நியமனம்

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராக கடமையாற்றிய கலாநிதி பீடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளதாக திருத்தந்தை அறிவித்துள்ளதாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை தெரிவித்தார்.

### காதலிக்க மறுத்த மாணவி தாக்கிய ஆசிரியர்!

தன்னைக் காதலிக்க மறுத்த மாணவியைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கிளிநொச்சியில் நடந்துள்ளது. கிளிநொச்சியில், புறநகர்ப் பகுதியில் உள்ள உயர்தரப் பாடசாலையில் கற்கும் மாணவி ஒருவரிடம் ஆசிரியர் தனது காதலைத் தெரிவித்தார் என்றும், மாணவி அதற்கு மறுப்புத் தெரிவித்தார் என்றும் கூறப்படுகின்றது. ஆசிரியர் தனது காதலைத் தொடர்ந்து தெரிவித்து வந்தார் என்றும் இந்நிலையில், மாணவி பாட



சாலை முடிந்து வீடு திரும்பியபோது அவரை வழிமறித்துத் தாக்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. மாணவி இது தொடர்பில் பெற்றோரிடம் தெரிவித்தார். இந்தவிடயம் வலயக் கல்விப் பணிமனையின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இறுதித் தீர்வு எட்டும்வரை அந்த ஆசிரியர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

## குருதி ஆறு ஓட வாய்க்கால் வெட்டிய ஹிஸ்புல்லா!

மகிந்தவின் காலத்தில் இரத்த ஆறு ஓட வாய்க்கால் வெட்டிக் கொடுத்தவர், வடக்கு–கிழக்கு இணைந்தால் இரத்த ஆறு ஓடும் என்று எச்சரிக்கை விடுக்கின்றார். வடக்கும் – கிழக்கும் இணையாவிட்டால், பாதிக்கப்படப்போவது கிழக்கு மாகாணம் தான். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார். வடக்கு – கிழக்கு இணைக்கப்பட்டால் இரத்த ஆறு ஓடும் என்று இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா நாடாளுமன்றில் உரையாற்றியமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## இலங்கைக்கே உரித்தான பாம்பு!

இலங்கைக்கே உரித்தான புதிய இனப் பாம்பொன்று, சிவனொளிபாத மலை காட்டுப் பகுதியில், ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எஸ்பிரா ராவனாய் (Aspidurai Ravanai)



என அழைக்கப்படும் இந்தப் பாம்பு இனம், சிவனொளிபாத மலையின் மேற்கு மலையடிவாரத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கண்கொத்தி பாம்பு இன வர்க்கத்தைச் சேர்ந்த இந்த பாம்பு, இலங்கைக்கே உரித்தான இனமாகும். இந்த கண்டுபிடிப்புடன் இலங்கைக்கே உரிய 51 பாம்பு இனங்களின் எண்ணிக்கை 52 ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் இதுவரை 104 வகை பாம்பு இனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சிவனொளிபாதமலையில் வாழும் உயிரினங்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில், இந்த பாம்பு இனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பான மேலதிக ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சிறீலங்காக் கடற்படைத் தளபதியுடன் சீனப் பாதுகாப்பு ஆலோசகர் சந்திப்பு கடற்படை கொடிகளுக்கு ஆசிர்வாதம்

சீனப் பாதுகாப்பு ஆலோசகர் சிரேஷ்ட கேர்னல் சு ஜியன்வேய்க்கும் சிறீலங்காக் கடற்படைத் தளபதி சிறிமேவன் ரணசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடற்படைத் தலைமையகத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.

சீன தேசியப் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மேஜர் ஜெனரல் ஜு ஷொன்கு உள்ளிட்ட பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றே குறித்த சந்திப்பில் ஈடுபட்டது. இச் சந்திப்பில் ஆராய்ச்சி நடவடிக்கைகள், இருதரப்பினதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் தகவல் பரிமாற்றம் போன்ற பல்வேறு காரணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. சந்திப்பின் இறுதியில் இரு தரப்புக்குமிடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சிறீலங்காக் கடற்படை தளபதிக்கு ஆறு மாத பதவி நீடிப்பு மைத்திரிபால சிறீசேனவால் வழங்கப்பட்டது. கடந்த 19ம் திகதி தனது 55 வயதை பூர்த்தி செய்த நிலையிலேயே மேலும் ஆறு மாதங்களுக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஒக்டோபர் மாதம் 26ம் திகதி ரணசிங்க பதவியேற்றிருந்தார். முன்னாள் தளபதி சின்னையா 55 வயதை பூர்த்தி செய்ததும் ஒரு மாதம் மட்டுமே பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இவருக்கு ஆறு மாதங்கள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்துடன், சிறீலங்காக் கடற்படையின் 67வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடற்படை கொடிகளுக்கு ஆசிர்வதிக்கும் மத வழிபாடுகள் சிறி மஹா போதி அருகில் இடம்பெற்றது. கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரனசிங்க தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. கடற்படையினரால் ஆறாவது முறையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட மத வழிபாடுகளில் தேசியக் கொடி, பௌத்த மதக் கொடி, கடற்படை கப்பல்களின், நிறுவனங்களில் சேர்ந்த 82 கொடிகள் ஆசிர்வதிக்கப்பட்டன.

மகிந்தவோ, மைத்திரியோ அல்ல

## இலங்கை மீதே எங்கள் கண்

### சொல்லாமல் சொன்ன சீனா

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் காலத்தில், இலங்கையில் பல பில்லியன் டொலர்கள் பெறுமதியிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் சீனா முன்னெடுத்த போதிலும், அவர் மீது விசேடமான விருப்பேதும் கிடையாது என்றும் தெரிவித்துள்ள சீனா, தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான இந்த அரசாங்கத்துடன், நெருக்கமானதும் சிநேகபூர்வமானதுமான உறவை, சீன அரசாங்கமும் சீனத் தலைவர்களும் பேணுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளது.

கலாசார, ஊடக பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சீனாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை ஊடகவியலாளர்களை கடந்த 14ம் திகதி சந்தித்த, சீன வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஆசிய விவகாரங்கள் திணைக்கள, தெற்காசியப் பிரிவின் செயலாளர் ஸாங் சொங் இத்தகவல்களை வெளியிட்டார்.

இதன்போது அவர், இரு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகள், பல நூற்றாண்டுகள் நீண்டுள்ள கலாசார, வர்த்தக, சமயத் தொடர்புகளை அடிப்படையாகவே கொண்டிருக்கும் என்றும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த அவர், எந்த நாட்டுக்கும் வழங்கும் அபிவிருத்தி, தொழில்நுட்ப உதவிகளும், அரசியல் அல்லது தனிநபர்கள் என்ற அடிப்படையில் வழங்கப்படுவதில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் காலத்தில், இலங்கையில் பல பில்லியன் டொலர்கள் பெறுமதியிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் சீனா முன்னெடுத்த போதிலும், அவர் மீது விசேடமான விருப்பேதும் கிடையாது.

தொடர்ச்சி 14ம் பக்கம்



## செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

**செய்தி:-** சிறுமியை மிருகத்தனமாகக் கொலை செய்த சுவிஸ் குமாரை விடுவித்த குற்றச்சாட்டில் காவல்துறை அதிகாரியை சிறையில் அடைத்துள்ளீர்கள். அந்தக் காவல்துறை அதிகாரிக்கு, சுவிஸ் குமாரை விடுவிக்கச் சொல்லி உத்தரவிட்ட இராஜாங்க அமைச்சர் நடாளுமன்றத்தில் இப்போதும் இருக்கின்றார் என மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திசநாயக்க தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** ஆளும் கட்சியை 'அரஸ்ட்' பண்ண முடியுமா?

★★★★ ★★★★

**செய்தி:-** இன்று பிரபாகரனுக்கு நிகராக அனைவராலும் பேசப்படும் தலைவராக இரா.சம்பந்தன் திகழ்கின்றார் என ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிறீலங்கா இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** பிரபாகரன் கூட எட்டித் தொடமுடியாதளவிற்கு சந்திரிகாவுடன் சேர்ந்து தண்ணி அடிக்கும் அளவிற்கு சம்பந்தன் வளர்ந்துவிட்டார் என்பது விஜயகலா மகேஸ்வரனுக்குத் தெரியாதோ..?



★★★★ ★★★★

**செய்தி:-** யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள படையினர் எக்காரணம் கொண்டும் யாழ். கோட்டைக்குள் செல்லமாட்டார்கள் என சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரொஷான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** புலிகளிடம் கோட்டைக்குள் வாங்கிய அடியையும் பசிலனின் வெடி அதிர்வையும் இன்னும் மறக்கவில்லையோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** இலங்கையில் தினமும் சுமார் 300 தம்பதியினர் விவாகரத்து செய்து கொள்வதாக சிறீலங்கா கலாச்சார விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷா கோகுல பெர்னாண்டோ தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** எதிர்காலத்தில் விவாகரத்தே இல்லாமல்போய் விடுமே, திருமணங்கள் ஏதாவது ஒன்று இரண்டென்றாலும் நடக்குதா..?

★★★★ ★★★★

**செய்தி:-** இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் மற்றும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களை துன்புறுத்த வேண்டிய அவசியம் இராணுவத்துக்கு ஒருபோதும் இருக்கவில்லை என, சிறீலங்கா இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** மடியிலை கனம் இல்லையென்றால் ஐ.நா.விற்கு ஏன் இத்தனை தூரம் பயப்படுகின்றீர்கள்..?

★★★★ ★★★★

**செய்தி:-** மூன்று தசாப்த காலத்தில் போருக்காக அரசு 200 பில்லியன் அமெரிக்க டொலர்களும், தமிழீழ விடுதலைப் புலிகள் 200 பில்லியன் அமெரிக்க டொலர்களும் செலவு செய்துள்ளனர். இந்தத் தொகையை உரிய வகையில் பயன்படுத்தியிருந்தால் நாடு எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கும். இவ்வாறு சிறீலங்கா நாடாளுமன்ற சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல கேள்வி எழுப்பினார்.

**எழும் கேள்வி:-** போர் நடந்துகொண்டிருந்த காலத்தில் அதனைத் தடுத்து நிறுத்தாமல் இவரென்ன வேற்றுக் கோளிலா இருந்தார்..?

★★★★ ★★★★

**செய்தி:-** இலங்கை முஸ்லிம்கள் 2000 வருடங்கள் பழைமையானவர்கள் என கஹடோவிட்டாவில் நடைபெற்ற அல்பத்ரியா மகா வித்தியாலயத்தின் புதிய இரு மாடிக் கட்டிடத் திறப்பு விழா நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தெரிவித்தார்.

எழும்கேள்வி:- இஸ்லாம் தோன்றி 1500 ஆண்டுகள் தானே ஆகியிருக்கின்றது, பிறகெப்படி..?

★★★★ ★★★★

**செய்தி:-** மத்தள வானூர்தி நிலையத்துக்குள் யானைகள் புகுந்து பாதுகாப்பு வேலிகளை உடைத்து அட்டகாசங்கள் செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

**எழும் கேள்வி:-** நில ஆக்கிரமிப்புக்கு எதிராக யானைகளும் போராட வெளிக்கிட்டுவிட்டார்களோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கதவு திறந்தேயுள்ளது, யாரும் வரலாம், யாரும் போகலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் தெரிவித்தனர்.

**எழும் கேள்வி:-** அது என்ன பாலியல் தொழிலாளியின் விடுதியோ..?

## வடிவேலுவும் நம்ம அரசியல் தலைகளும் 12



# தாயகத்திலேயே தமிழர்களை நிரந்தரமாக அடிமையாக்கப்போகும் புதிய அரசமைப்பு

'தாயகத்தில் இருந்து' காந்தரூபன்

மருந்து கண்டுபிடிக்கப்பட முடியாத நோயாக புரையோடிப்போயிருக்கும் ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்திருக்கின்றன.

இந்தத் தோல்விக்கு காரணம் சிங்களத் தரப்பின் ஏகப் பிரதிநிதித்துவக் கொள்கையும் தமிழ்த் தலைமைகளின் விட்டுக்கொடுத்த நிலைமையுமாகும். ஈழத்தீவில் பூர்வீகக் குடிகளாக இருந்த தமிழினம் இன்று கொடி, குடை, ஆலவட்டம் இழந்து நடுத்தெரு இன்றி இருப்பதற்கும் அந்த அரசமைப்பே காரணமாக உள்ளது. தமிழ் மக்களை சிங்களத்தரப்பு எள்ளி நகையாடுவதற்கும் தமிழ் மக்களின் நிலங்களை சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பதற்கும் அந்த அரசமைப்பே துணை செய்கின்றது.

ஆக, 1978 ஆம் ஆண்டு அரசமைப்பு தமிழருக்கு அநீதி இழைக்கின்றது என்பது முடிந்த முடிவு. அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய சிறு பிள்ளைக்குக்கூட இந்த உண்மை தெரியும்.

இது இவ்வாறிருக்க, தமிழர் தாயகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்ததாகப் பெருமைப்படும் சிங்கள தேசம், நாட்டை மீண்டும் ஒரு குடைக்குக் கீழ் கொண்டுவரும் முயற்சியில் இறங்கியிருக்கின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்ற அடிப்படையில் இலங்கைத் தீவில் மீண்டும் ஒற்றையாட்சியை நிலைநிறுத்துவதுடன் பௌத்தத்திற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் புதிய அரசமைப்பு வரையப்பட்டுள்ளது.

இதற்கான உப குழுக்கள் மிகவும் துல்லியமாக காய்நகர்த்தல்களை மேற்கொண்டிருக்கின்றன. அந்தக் குழுக்களுக்குள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன், தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் முக்கிய பொறுப்பில் இருக்கின்றனர். அவர்களின் துணையுடனேயே இந்த அரசமைப்பு நிறைவேற்றப்படவுள்ளது.

புதிய அரசமைப்பு மூலம் தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத்தருவோம் எனக் கூறுகின்ற மேற்படி சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் யார் என்பதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். அதன் பின்னர் தமிழ் மக்களுக்கு தலைமையேற்கும் பாத்திரத்தை அவர்களுக்கு வழங்குவது தொடர்பாக முடிவெடுக்கலாம்.

இரா. சம்பந்தன் கிழக்கு மாகாணம் திருகோணமலையைச் சேர்ந்தவர். அவரது சொந்த மாவட்டம் சிங்களவர்களிடம் பறிபோனதைப் பார்த்துக்கொண்டிருப்பவர்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

விற்கு வந்திருக்கின்றது.

ஐரோப்பியரின் ஆட்சிக் காலத்திற்கு முன்னர் பிராந்தியங்களில் சிற்றரசாக வாழ்ந்த தமிழர்கள் இன்று சிங்களவர்களின் ஆக்கிரமிப்பிற்குள் வாழும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. அறுபது ஆண்டுகாலம் அனுபவப்பட்ட பின்னரும் தமிழர் தரப்பு மீண்டும் படுகுழிக்குள் செல்லத் தயாராகின்றது.

சிங்களம் கொண்டுவந்த ஒற்றையாட்சித் தத்துவத்தால் தமிழர் தேசம் தீயில் எரிந்தது. பௌத்தத்திற்கு முன்னுரிமை என்றதால் தமிழர் தேசத்தில் குருதி ஆறு ஓடியது. சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டதால் தமிழர் தேசத்தில் கொடுமைகள் தலைவிரித்தாடின. இதற்குப் பின்னரும் தமிழினத்தை படுகுழிக்குள் தள்ளுவதற்கு சில கோடரிக்காம்புகள் தீவிர முயற்சி எடுத்து வருகின்றன.

விஜயன் வருகைக்கு முன்னர் சிறீலங்கா தமிழர் தேசம் என்பதை இந்திய ஆராட்சியாளர்களே தமது ஆய்வுகள் மூலம் நிரூபித்திருக்கின்றனர். இந்தியாவில் மோசமான - அருவருக்கத்தக்க - செயல்களில் ஈடுபட்டதால் அங்கிருந்து துரத்தப்பட்ட விஜயனும் 700 தோழர்களும் சிறீலங்காவுக்கு வரும் போது இங்கு தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருந்தனர் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

தென்னிலங்கையை மையமாகக்கொண்டு வாழ்ந்த தமிழர்களை அப்போதே ஆக்கிரமிக்க முற்பட்டது அக்கூட்டம். அது படிப்படியாக வளர்ந்தது. அதன் பின்னர் தமிழினம் வடக்கு - கிழக்கை தமது தாயகமாகக் கொண்டு சிற்றரசுகளைத் தாபித்தனர். 18 ஆம் நூற்றாண்டு வரை தமிழர்கள் சிற்றரசுகளை அமைத்து அரசாட்சி நடத்தினர். அதற்கான சான்றுகள் இன்றும் இருக்கின்றன.

அன்று தமிழர்களை ஆக்கிரமித்த சிங்களத் தரப்பு தொடர்ந்தும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியது. அதன் வெளிப்பாடாகவே 1978 ஆம் ஆண்டு ஒற்றையாட்சித் தத்துவத்துடன் பௌத்தத்திற்கு முன்னுரிமை அளித்து அரசமைப்பு கொண்டுவரப்பட்டது.

ஈழத்தில் கடந்த நான்கு தசாப்த காலமாக தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டமைக்கும் தமிழ் மக்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டமைக்கும் அந்த அரசமைப்பே காரணமாக அமைந்தது.

தமிழ் மக்கள் இன்றுவரை சுதந்திரம்



சிங்களத் தரப்பு சுமந்திரனை தமிழ்த் தேசிய அரசியலுக்குள் கொண்டுவந்த பலனை அடையக் காத்திருக்கின்றது. அதைவிட, சம்பந்தனை விட்டால் ஒற்றையாட்சியையும் பௌத்தத்திற்கு முன்னுரிமையையும் வழங்கும் அரசமைப்பு ஒன்றை எப்போதுமே நிறைவேற்ற முடியாது என சிங்களப் பேரினவாதிகள் வெளிப்படையாகவே கூறுகின்றனர்.

## இராணுவத்துக்கு புதிய வாகனங்கள்

ஐக்கிய நாடுகளின் சமாதான இராணுவத்தின் பணிகளுக்காக செல்லவுள்ள சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் சிறப்புப் படையணிக்கு புதிதாக 6 வாகனங்களை கொள்வனவு செய்ய சிறீலங்கா அரசு தீர்மானித்துள்ளது. ஒரு வாகனம் 68.93 மில்லியன் ரூபா வீதம் 6 வாகனங்களுக்கும் 413.59 மில்லியன் ரூபாவில் வாகனங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இது தொடர்பில் சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சாகல ரட்னாயக்கவால், முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## தொடருந்து விபத்துக்களால் 180 பேர் பலி

இவ் வருடத்தின் இதுவரையான 10 மாத காலப் பகுதியில், தொடருந்து விபத்துக்களால், இலங்கைத் தீவில் 180 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாக, சிறீலங்கா தொடருந்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலும், வருடா வருடம் தொடருந்து விபத்துக்கள் அதிகரித்து வருவதாக அது குறிப்பிட்டுள்ளது. இதில், செல்பி எடுக்கும் முயற்சிகளால் தொடருந்து விபத்துக்களில் சிக்கி பலியான இளைஞர்களின் எண்ணிக்கை 24 என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் சிறீலங்காவில் எலி வேட்டை

சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்திலிருந்து தப்பிச்சென்ற 26 ஆயிரம் பேரை கைதுசெய்வதற்கான நடவடிக்கை கடந்த 24ம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதை சிறீலங்கா இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. இராணுவ காவல்துறைப் பிரிவு மற்றும்காவல்துறைஅதிகாரிகள்இணைந்து, இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். இராணுவத்தில் இருந்து சட்டவிரோதமாக விலகிச்சென்ற நபர்களுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலம் நிறைவடைந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, படைய



ணித் தலைமையகங்களுக்குச் சென்று சட்டபூர்வமாக விலகிக்கொள்ளாத இராணுவத்தினரே, இவ்வாறு கைது செய்யப்படவுள்ளனர் என்று, இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரொஷான் செனவிரத்ன தெரிவித்தார்.

இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றவர்களுக்கு, கடந்த ஒக்டோர் 23ம் திகதி முதல் நவம்பர் 22ம் வரை பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட காலத்தில், 11,091 படையினர் சட்டபூர்வமாக சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளனர். இவற்றில் 24 அதிகாரிகள் மற்றும் 11,091 படையினர்களும் உள்ளடங்குகின்றனர்.

## இலங்கையில் தினமும் 300 தம்பதியினர் விவாகரத்து

இலங்கையில் தினமும் சுமார் 300 தம்பதியினர் விவாகரத்து செய்து கொள்வதாக சிறீலங்கா கலாச்சார விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் அனு'ா கோகுல பெர்னாண்டோ தெரிவித்தார். கலாச்சார திணைக்களத்தின் ஏற்பாட்டில் காலி மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற வாழும் கலை என்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். இலங்கையில் திருமணமான கணவன், மனைவி குடும்ப வாழ்க்கையில் இருந்து பிரிந்து செல்வது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தற்போது தினமும் சுமார் 300 தம்பதிகள் விவாகரத்துச் செய்துக்கொள்வதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இலங்கை போன்ற சிறிய நாட்டில் இது மிகவும் அதிகம். பல விடயங்கள் இதற்கு காரணமாக அமைந்துள்ளன. சம வயதுடையவர்கள் மற்றும் குறைந்த வயதில் திருமணங்களை செய்துக்கொள்வது இதற்கு பிரதான காரணமாக அமைந்தது. குறைந்த வயதில் திருமணம் செய்துக்கொள்வதால் அனுபவங்கள் குறைவு. இந்த வயதுகளில் திருமணம் செய்துக்கொள்வோர் அவசரமான முடிவுகளை எடுக்கின்றனர் எனவும் அனு'ா கோகுல பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

## சிப்பாயை கோடாரியால் கொன்றார் மனைவி

ஹபரணை பிரதேசத்தில் மனைவி தனது இரண்டாவது கணவரான சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தைச் சேர்ந்த சிப்பாயை கோடரியால் தாக்கி கொலை செய்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. லக்சிறிகம – ஹபரணை பிரதேசத்தை சேர்ந்த 46 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். கடந்த



16ம் திகதி மனைவியால் கோடாரி தாக்குதலுக்கு உள்ளான சிப்பாய் உடனடியாக ஹபரணை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிந்துள்ளார். இவர்கள் இருவருக்கிடையில் நீண்ட நாட்களாக குடும்பத் தகராறு காணப்பட்டதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். சம்பவத்தன்று இருவருக்கும் இடையில் ஏற்பட்டிருந்த வாக்குவாதம் நீண்டதால், உயிரிழந்த நபர் தனது 4 பிள்ளைகளையும் மனைவியின் சகோதரனின் வீட்டில் விட்டுவிட்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்கு 4 வயது குழந்தையொன்றும் 22 வயதில் இளைஞரொருவரும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் பாடசாலை செல்லும் வயதில் இரண்டு பிள்ளைகள் உள்ளனர். கணவனை கோடாரியால் தாக்கி கொலை செய்த குறித்த பெண், கோடரியுடன் காவற்து–றையில் சரணடைந்துள்ளார். இதன் போது, மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கணவர் தன்னை கோடாரியில் தாக்க முற்பட்டபோது, தான் அதனை பறித்து கணவரை தாக்கியதாக குறித்த பெண் வாக்குமூலம் அளித்துள்ளார்.





தமிழீழத் தேசியத் தலைவரின் 63வது அகவையை உலகத் தமிழர்கள் கொண்டாடிய அதேவேளையில், தமிழீழம் வல்வெட்டித்துறையில் உள்ள அவரது வீட்டிற்கு முன்பாக இளைஞர்கள் சில கேக் வெட்டி அவரது பிறந்தநாளைக் கொண்டாடியுள்ளார்கள்.

இதேவேளை நாம் தமிழ் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கேக் வெட்டி எழுச்சி விழாவை நடத்தினார்.



# அவலச் சாவுகளும்...

கடந்த 16ம் திகதி வீட்டில் இருந்து தனது தாயின் வீட்டுக்கு சென்றுவிட்டு வேலைக்கு செல்வதாக மனைவியிடம் தெரிவித்து சென்றுள்ளார். கோண்டாவில் பழனியாண்டவர் கோவில் பகுதியில் உள்ள தனது தாயார் வீட்டுக்கு சென்று விட்டு வேலைக்கு செல்வதாக கூறி சென்றுள்ளார். அப்போது அந்த வழியில் உள்ள கிணறு ஒன்றில் தவறுதலாக விழுந்துள்ளார். வீட்டுக்கு திரும்பி வரவில்லை என மனைவி தாய்வீடு, மற்றும் அலுவலகத்தில் விசாரித்துள்ளார் அவர் எங்கும் வரவில்லை என தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் மாடு மேய்ப்பதற்கு சென்ற ஒருவர் கிணற்றில் இருந்து துர்நாற்றம் வீசுவதை அறிந்து எட்டி பார்த்தபோது அங்கு சடலம் காணப்பட்டுள்ளது.

### மீசாலையில் தொடருந்து மோதி ஒருவர் சாவு!

மீசாலையில் தொடருந்து மோதி மீசாலை வடக்கு மீசாலை உருத்திரபுரம் பகுதியை சேர்ந்த தெய்வேந்திரம் ஞானயூகன் (வயது 38) என்பர் உயிரழந்துள்ளார். கடந்த 12ம் திகதி பிற்பகல் 2 மணியளவில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த கடுகதி தொடருந்தே மோதியுள்ளது. புத்தூர் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற கடவையில் உந்துருளியில் கடக்கமுற்பட்டபோதே விபத்து ஏற்பட்டுள்ளது.

### சகோதரனும் சகோதரியும் வாவியில் மூழ்கிப் பலி

வவுனியாவில் கடந்த 24ம் திகதி வெள்ளிக்கிழமை குளத்தில் குளிக்கச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தனர்.ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் ஒன்றிணைந்து குளிப்பதற்காக குளக்கரைக்குச் சென்றுள்ளனர். குளித்துகொண்டிருந்த போது, ஆழமான பகுதிக்கு சென்ற தங்கை, நீரில் மூழ்கி கொண்டிருந்ததை அவதானித்த சகோதரன், ஒருவாறு தங்கையை காப்பாற்றியுள்ளார். ஆனால் தங்கையை காப்பாற்றிக்கொண்டு, மேலே வருவதற்கு முயன்றபோதே, இருவரும் சேற்றுக்குள் சிக்கியுள்ளனர். ஏனைய இருவரும் கத்தி கூச்சலிட்டு அயலவரின் உதவியை நாடி நீரில் மூழ்கிய இருவரையும் மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட இருவரும் மாமடுவ வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளனர். திருமணமாகி இரண்டு மாதங்களேயான 26 வயதுடைய ஜெயபிரதாப் என்ற இளைஞனும் 2018ம் ஆண்டு சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள 16 வயதுடைய அவருடைய தங்கை பானுரேகா என்ற மாணவியுமே மரணமாகியுள்ளனர்.

### துறைநீலாவணையில் மின்னல் தாக்கி இளம் பெண் பலி

களுவாஞ்சிக்குடி துறைநீலாவணை 8ம் வட்டார கிராமத்தில் மின்சாரம் தாக்கியதில் இரண்டு பிள்ளைகளின் தாயான இளம் குடும்பப் பெண் ரோபாலன் கலைவாணி (35 வயது) கடந்த 19ம் திகதி பலியாகியுள்ளார். தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த நிலையில் மின்னல் தாக்கத்திற்கு அச்சமடைந்து குறித்த இளம் பெண் தொலைக்காட்சியினை நிறுத்த எத்தனித்தபோது இடி மின்னல் விழுந்ததன் காரணமாக தரையில் தலை அடிபட்ட நிலையில் படுகாயமடைந்து கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்துள்ளார். இடி தாக்கம் காரணமாக வீட்டிலுள்ள பொருட்கள் பலத்த சேதமடைந்துள்ளன.

### மின்னல் தாக்கி சிறுவன் உயிரிழப்பு

மின்னல் தாக்கியதில் சிறுவன் ஒருவன் உயிரிழந்த சம்பவம் ஒன்று மன்னார் முருங்கன் பகுதியில் இடம்பெற்றது. வயலில் வேலை செய்து கொண்டிருந்த தனது தந்தைக்கு, வீட்டில் இருந்து மதிய உணவை எடுத்துச் சென்ற சிறுவனே வயலில் வைத்து மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகினார். கட்டையடம்பன் கிராமத்தைச் சேர்ந்த நித்தியானந்தன் ரஸ்கின் எனும் 11 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

### தாய் உயிரிழந்த அதிர்ச்சியில் மகனும் உயிரிழப்பு

தாய் இறந்த சோகம் தாங்காது நெஞ்சுவலி ஏற்பட்டு ஒருமணி நேரத்தில் மகனும் உயிரிழந்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் கடந்த 24ம் திகதி இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம், கச்சேரி பகுதியை சேர்ந்த பாலசிங்கம் தவமலர் (71 வயது) மற்றும் அவரது மகனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையுமான பாலசிங்கம் பிரசன்னா (38 வயது) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர். குறித்த தாயாருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு மகனான பிரசன்னா அவரை வைத்தியசாலைக்கு அழைத்து சென்றுள்ளார். எனினும் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். இதைக் கேட்ட மகன் அதிர்ச்சியடைந்ததுடன் நெஞ்சு வலியும் ஏற்பட்டது. இதையடுத்து உடனடியாக அவர் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி ஒரு மணி நேரத்தில் உயிரிழந்தார்.


## இனங்கள் வேறு, வலி ஒன்று!

தமிழீழத்தில் அன்று - யேமனில் இன்று





# கிழக்கு மாகாணத்தில் தமிழ் இனத்திற்கான இருப்பு கேள்விக்குறி



கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் எதிர்கால சந்ததியினருக்கான இருப்பு என்பது பெரும் கேள்விக்குறியாகவுள்ளது.

**இதற்கான காரணங்கள் என்ன?**

**ஏன் இவ்வாறான நிலை ஏற்படுகிறது?**

**யார் இதற்கு பொறுப்பு?**

**தமிழர் தரப்பு எங்கே?**

போன்ற பல கேள்விகள் மக்கள் மத்தியில் எழுந்தாலும், அவற்றுக்கான தீர்வை யாரிடம் பெற்றுக் கொள்வது? அரசியல் வாதிகள் தொடக்கம் பாமர மக்கள் வரைக்கும் இந்த சந்தேகம் எழுந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் தமிழர்களின் இருப்பிடம் படிப்படியாக அரிப்பெடுப்பது போன்று மாற்றினத்தினால் கபளீகரம் செய்யப்படுவது அனைவருக்கும் நேரடியாகவும் வெளிப்படையாகவும் தெரியும். ஆனால், அவற்றை சிங்களவர்களினால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக 1985 ஆம் ஆண்டு இடம்பெற்ற கறுப்பு யூலைக் கலவரத்தின் போது மிகப் பெரும் பழமை வாய்ந்த தமிழ் கிராமங்களான தென்னைமரவாடி, கொக்குளாய் போன்ற அதனை அண்டிய பகுதிகளை உள்ளடக்கிய தமிழ் கிராமங்கள் பறிபோயுள்ளது. கடந்த காலங்களில் தமிழ் மக்கள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய தமிழ் பகுதிகளில் காணி தொடர்பான பல பிரச்சினைகள் எழுந்துள்ளது. இவை குறித்து தமிழ் பிரதேச செயலாளர்கள், மாகாண காணி திணைக்களக அலுவலகத்திற்கு அனுப்பினாலும், கவனிப்பாரற்ற நிலையில் கிடப்பில் போடப்படுகிறது. மாகாண காணி திணைக்களகத்தில் இனரீதியான சேவைகள் இடம்பெற்றுவருவதாக குற்றஞ்சாட்டப்படுகிது.

## 'கிழக்கில் இருந்து' எழுவான்

பிரச்சினைகள் உடன் தீர்க்கப்படுகிறது. அத்துடன், மாவட்ட அரசாங்க அதிபரின் அழுத்தம் காரணமாக தமிழ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் சிங்களவர்களுக்கு காணிகளை வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் செய்யப்படுகிறது.

1978 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மத்திய தர வகுப்பினர்க்கு என மூவின மக்களுக்கும் மூன்று ஏக்கர்த் திட்டத்தின் அடிப்படையில் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பான்மையாக தமிழ் மக்கள் அதிக காணிகளைப் பெற்றுக் கொண்டனர். இந்த காணிகளில் கூடுதலாக வறல்நிலமாக உள்ளதால் மரமுந்திரிக் செய்கையே அதிகம் செய்கைபண்ணப்பட்டுள்ளன. இக்காணிகளுக்கு அனைத்தும் தமிழ் மக்கள் ஒப்பங்களை வைத்துள்ளனர். எனினும், இனக்கலவரங்களினால் தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி வெளிநாடுகளுக்கும், ஏனைய இடங்களுக்கும் இடம் பெயர்ந்துள்ளனர். அதுமாத்திரமல்ல போரினால் சிலர் இறந்துள்ளனர். இவ்வாறான காணிகளை அரசாங்கம் அரச உடமையாக்கி அதனை குத்தகைக்கு வழங்கப்படுகிறது. இந்த குத்தகைகள் அனைத்து தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கே வழங்கப்பட்டுகிறது. ஏக்கர் அளவில் காணி வைத்திருந்த தமிழர்க்கு இன்று 10 பேச் அளவு காணி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதென்பது தமிழர்களின் இனப்பரம்பலையும், இன வீதாசாரத்தையும் மட்டுப்படுத்தும் நடவடிக்கையாக அமைகிறது.

உதாரணமாக திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மட்டக்களப்பு திருமலை பிரதான வீதியில் உள்ள உப்பாறு கிராமத்தில் 60க்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் வாழ்ந்தனர். எனினும் அவர்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்திருந்தனர். தற்போது மீள் குடியேற மக்கள் தயாராகவுள்ள நிலையில், அவர்களின் சொந்தக் காணி எவ்வளவு இருந்தாலும் 10 பேச் மாத்திரம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது.

தடுப்பதற்கோ அல்லது தட்டிக்கேட்பதற்கோ திராணியற்றவர்களாக தமிழ் அரசியல் தலைவர்கள் உள்ளனர். 1981 ஆம் ஆண்டு தொடக்கம் சிங்களப் பேரினவாத சக்திகள் வடக்கு கிழக்கு மாகாணத்தை தனித் தனிமாகாணமாக பிரிக்க வேண்டும் என்பதில் குறியாக இருந்தனர். எனினும், துரதிஷ்டவசமாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இணைக்கப்பட்டமை தமிழர்களைப் பொறுத்தவரையில் நன்மையாக அமைந்திருந்தாலும், 2008 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்குப் பிரிக்கப்பட்டது சிங்களப் பேரினவாத சக்திகளின் நிலைப்பாட்டிற்கு மேலும் உரமுட்டியது பிரதம நீதியரசரின் செயற்பாடு.

திருகோணமலை மாவட்டத்தில் மிகவும் மோசமாக தமிழர்களின் பூர்விகக்காணிகள்

**உப்பாறு கிராமத்தில் 60க்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் வாழ்ந்தனர். எனினும் அவர்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்திருந்தனர். தற்போது மீள்குடியேற மக்கள் தயாராகவுள்ள நிலையில், அவர்களின் சொந்தக் காணி எவ்வளவு இருந்தாலும் 10 பேச் மாத்திரம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது.**

திருகோணமலை மாவட்டத்தில் சில தமிழ் பகுதிகளில் இன்னமும் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. ஆனால் அவர்களின் சொந்தக் காணிகளில் காடுகள் வளர்ந்து காணப்படுகிறது. இவற்றை இன்று வனஇலாகா திணைக்களகம் தங்களுக்குச் சொந்தமான காணி என அடையாள கற்களை போட்டுள்ளனர். இக்காணிகளுக்கான உறுதி, ஒப்பங்கள் உள்ள போதிலும் அவற்றுக்குள் செல்ல வனஇலாகா அனுமதி மறுத்துவருகிறது. இவற்றை மீள்பரிசிலனை செய்ய சிறீலங்கா அரசு தயாராகவில்லை. அதுமாத்திரமல்ல, திருகோணமலை மாவட்டத்தில் நீண்டகாலமாக காணிக்கச்சேரி நடைபெறவில்லை. இதனால், தமிழ் பேசும் மக்களின் காணிகள் தொடர்பான பல பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு முடியாத நிலையில், இனங்களுக்கிடையில் முறுகல் நிலைகளை ஏற்படுத்துவதற்கு சிறீலங்கா அரசு அசமந்தமாக நடந்துகொள்கிறது. சிறீலங்கா அரசாங்கம் திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கையை பல மடங்காக அதிகரிப்பதனுடாக மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் வீகிதம் குறைக்கப்பட்டு சிங்கள மேலாதிக்கத்தை ஏற்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டுவருகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் பதவி சிறிபுர, கோமரன்கடவெல, மணலாறு (வெளிஓயா) போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சிங்கள குடியேற்றவாசிகளுக்கு காணிகளுக்கு உறுதிகள் வழங்கப்படுகிறது. அத்துடன் அவர்களின் காணி தொடர்பான

தொடர்ச்சி 14ம் பக்கம்

## மன்னாரில் தொடரும் பிள்ளையார் மீதான தாக்குதல்கள்

மன்னாரில் இந்து ஆலயங்கள் சேதப்படுத்தப்பட்டு விக்கிரகங்கள் தூக்கி வீசப்படும் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பாக மன்னாரில் உள்ள இந்து மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மன்னாரில் பல்வேறு இடங்களில் பிள்ளையார் சிலைகள் கடந்த 18ம் திகதி அதிகாலை திருடப்பட்டுள்ளன. அத்துடன் பிள்ளையார் சிலைகளும் உடைக்கப்பட்டுள்ளன. மன்னார் – யாழ்ப்பாணம் பிரதான வீதி, தள்ளாடி விமான ஓடு பாதைக்கு முன்பாக வீதியோரத்தில் அமைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலை, நான்காவது தடவையாக இனந் தெரியாத நபர்களால் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பிள்ளையார் சிலை ஏற்கனவே இரு தடவைகள் உடைக்கப்பட்டிருந்த நிலையில் மூன்றாவது தடவையாக கடந்த மாதம் 17ம் திகதி அதிகாலை இனந்தெரியாத நபர்களால் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டது. இதையடுத்து உடனடியாக அது புனரமைப்பு செய்யப்



பட்டு மீண்டும் குறித்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் சுமார் ஒரு மாத காலத்தில் மீண்டும் குறித்த பிள்ளையார் சிலை மீண்டும் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், மன்னார் – யாழ் பிரதான வீதி, நாயாற்று வழி சந்தியில் அமைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலையும் மூன்றாவது தடவையாக உடைக்கப்பட்டுள்ளது. மேலும், உயிலங்குளம் – பள்ளமடு பிரதான வீதியில் வைக்கப்பட்



டிருந்த பிள்ளையார் சிலை, ஆண்டாங்குளம் சந்தியில் வைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலை, மாந்தை மேற்கு பிரதேசச் செயலகத்திற்கு அருகாமையில் வைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலை என மூன்று பிள்ளையார் சிலைகள் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை, மாந்தை தேவாலயத்தின் உண்டியல் கதவு திறக்கப்பட்டு, பணம் திருடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆலயங்கள் உடைக்கப்பட்டு சிலைகள் திருடிச் செல்லப்படுகின்ற போதிலும் காவல்துறையினரின் நடவடிக்கை மந்த கதியில் உள்ளமை தொடர்பாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.




**கேள்வி:–** மனிதர்களிடம் இப்போது உதவும் மனப்பான்மை குறைந்து வருகின்றதே? செய்த உதவியைக் கூடவா மறப்பார்கள்?

**சகுந்தலா வைரவநாதன் கிறித்தல் பிரான்ஸ்**

**பதில்:–** பிரதிபலனை எதிர்பார்த்து உதவுபவர்களிடம் இந்த மனப்பான்மை ஏற்பட்டிருப்பதை ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், பலனை எதிர்பாராமல் உதவுபவர்கள் உதவிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். அதனைவிட 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்ற வள்ளுவர் கூற்றுப் போல் செய்த நன்றியை மறக்காமல் உதவுவர்களும் நிறையவே இருக்கின்றார்கள்.



செய்நன்றியை மறக்காத மனிதர்கள் புராணங்களில் நிறைய இருந்தாலும், வரலாறுகளிலும் நிறைய வந்து போயிருக்கின்றார்கள். இதில் குறிப்பிடக்கூடியவராக அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் இருக்கின்றார்.

ஒருமுறை தேர்தல் பணிகளில் அவர் தீவிரமாக ஈடுபட்டிருந்தபோது அவருக்கு முன்பு உதவிய மூதாட்டி ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தன்னுடைய மகன் ஒரு ஆபத்தில் சிக்கியிருப்பதாகவும், காவல்துறையினரிடம் இருந்து அவரை மீட்டெடுத்துத் தருமாறும் கேட்டிருக்கின்றார். தேர்தல் பணிகளில் மிகவும் தீவிரமான நிலையில் இருந்த அவர், அந்த மூதாட்டியின் இடத்திற்கு பல கிலோ மீற்றர் தாண்டிச் செல்லவேண்டும். அன்றைய நாளே வீணாகப்போய்விடும். ஆனாலும் லிங்கன் உடனே புறப்பட்டுவிட்டார். அவருடைய நண்பர்கள் இருக்கும் வேலைகளை சில மணி நேரத்தில் முடிக்காவிட்டால் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்படும். ஆகவே அங்கு போக வேண்டாம் எனத் தடுத்தனர். 'ஜனாதிபதி ஆக வேண்டுமானால், இன்னொருமுறை அடுத்த தேர்தலிலும் போட்டியிடலாம். ஆனால் எனக்கு உதவிய மூதாட்டிக்கு இப்போது போய் உதவி செய்யவில்லையென்றால் இன்னொருமுறை அந்த வாய்ப்பு எனக்கு கிடைக்காமலே போகலாம்' என்று கூறிவிட்டு உடனே அங்கு போய்விட்டார். ஆகவே, செய்த உதவிகளை மறந்துவிட்டு, செய்ய வேண்டிய உதவிகளை நினையுங்கள். உங்களுக்குள் இவ்வாறான கேள்விகள் எழாது.

**கேள்வி:–** வெற்றி பெறுவதற்கு மிகவும் இலகுவான, விரைவான வழி எது?

**நிரோஜன் குமரகுரு பாரிஸ் பிரான்ஸ்**

**பதில்:–** இந்த நவீன காலத் தலைமுறைக்கு எதிலும் வெற்றி என்பது உடனடியாகவே கிடைத்துவிட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியிருக்கின்றது. காத்திருக்கும் பொறுமையும், அனுபவத்தை கற்றுக்கொள்ளும் விருப்பமும் இன்றி வெற்றி மட்டுமே வரவேண்டும் என்று எதிர்பார்த்து ஓடுகின்றது. இதனால் தலைதெறிக்க ஓடி முட்டுச் சந்தியில் முட்டிக்கொண்டு ஒரு சின்னத் தோல்வியையும் தாங்கிக்கொள்ள முடியாமல் மூச்சுத் திணறுகின்றது.



தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழைக் கண்டு பிடிப்பதற்கு ஒன்றல்ல இரண்டல்ல பல நூறு முறை தோற்று அதன் பின்னரேயே வெற்றியடைந்துள்ளார். ஒவ்வொரு தோல்விகளிலும் அவர் துவண்டு போயிருந்தால், மின்குமிழ் ஒளி இல்லாமல் மனித இனம் இன்னும் பல ஆண்டுகள் இருட்டுக்குள்தான் வாழ்ந்திருக்கும். ஒவ்வொரு தோல்வியையும் அவர் பாடமாக எடுத்துக்கொண்டதுதான் அவரது வெற்றிக்கான வழியாக இருந்தது. ஒருமுறை அவரிடம் 'எப்படி இவ்வாறு சரியான வழியைக் கண்டுபிடித்தீர்கள்?' என்று கேட்டபோது, தயக்கமின்றி அவர் சொன்ன பதில் 'நான் பலமுறை பிழையான வழியில் சென்று தோற்றதால்தான் சரியான வழி எது என்பது தெரியவந்தது' என்பதுதான்.

எனவே, வெற்றியைப் பெறுவதற்கு முதலில் தோல்வியடையக் கற்றுக்கொள்ளுங்கள். அந்த அனுபவம்தான் வெற்றியைத் தரும், தந்த வெற்றியைத் தக்கவைக்கும்.

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16

# பழியைத் துடைப்பீர் அறத்தைக் காப்பீர்!

**பழ.நெடுமாறன்**



இந்திய நீதித்துறை வரலாற்றிலும் மத்திய குற்றப் புலனாய்வு அமைப்பிலும் இதுவரை நிகழாத இரு நிகழ்ச்சிகள் நடைபெற்று அனைவரையும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளன. ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றத்தின் மூவர் கொண்ட அமர்வுக்குத் தலைமை தாங்கிய நீதியரசர் கே.டி.தாமஸ், 18.10.2017 அன்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு எழுதிய கடிதத்தில் அதிர்ச்சிகரமான உண்மைகளை வெளியிட்டுள்ளார். அக்கடிதம் 17.11.2017 அன்று வெளியாகியுள்ளது.

'1991–ஆம் ஆண்டிலிருந்து 26 ஆண்டு காலமாக சிறையிலிருந்து வரும் ஏழு பேரின் பிரச்னையைப் பெருந்தன்மையுடன் அணுகி அவர்களின் எஞ்சிய கால தண்டனையை ரத்து செய்து அவர்களை விடுவிக்க முன்வருமாறு வேண்டிக்கொண்டுள்ளார்.'

மேலும், அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது: '2016–ஆம் ஆண்டு இந்த ஏழு பேருக்கும் தண்டனையை ரத்து செய்து விடுவிக்க வேண்டும் என தமிழக அரசு செய்துள்ள முடிவிற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தடை பெற்றுள்ளது. இந்த வழக்கு இப்போது உச்சநீதிமன்றத்தின் முன் உள்ளது. இந்தியக் குடியரசுத் தலைவருக்கு நீங்களும், ராகுல், பிரியங்கா ஆகியோரும் வேண்டுகோள் கடிதம் எழுதுவதின் மூலம் மத்திய அரசு இதற்கு இணங்கக்கூடும்.

மனிதநேய அடிப்படையில் நீங்கள் மட்டுமே இதைச் செய்ய முடியும். இவர்களுக்கு எதிராக தண்டனை வழங்கிய நீதிபதி என்கிற முறையில் இப்போது இவர்களுக்குக் கருணை காட்டுமாறு உங்களை வேண்டிக்கொள்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

1964–ஆம் ஆண்டில் காந்தியடிகள் கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட நதுராம் கோட்சேவின் தம்பி கோபால் கோட்சே 14 ஆண்டு காலம் சிறைவாசத்திற்கு பின் 1964–ஆம் ஆண்டில் மத்திய அரசினால் விடுதலை செய்யப்பட்டார் என்பதையும் இக்கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வழக்கை விசாரணை செய்த மூன்று நீதிபதிகளில் இருவருடன் தான் கருத்து மாறுபாடு கொண்டதையும் அவர் வெளியிட்டுள்ளார். நளினிக்கு ஆயுள் தண்டனை அளிக்கலாம் என்று தான் கூறியதை மற்றவர்கள் ஏற்கவில்லை. எனவே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

புகழ்பெற்ற ஒருவரின் கொலை வழக்கு என்பதால் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மிகக்கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்பது விசாரணை நடத்திய நீதி ஆயத்தின் கருத்தாக இருந்திருக்கலாம். புகழ்பெற்ற ஒருவரின் கொலை வழக்காக இது இல்லாமல் இருந்திருந்தால் எத்தகையத் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கும் என்பதை என்னால் கூற முடியவில்லை.

பேரறிவாளன் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அவருக்குத் தண்டனை அளிப்பது குறித்து நீதிபதிகளுக்குள் கடும் கருத்து வேறுபாடு இருந்தது. மரபு வழியிலான சாட்சியச் சட்டத்தின்படி ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை உறுதி செய்யும் வகையில் மற்றொரு சாட்சியம் இருக்க வேண்டும்.

ஆனால், மற்ற இரு நீதிபதிகளும் இந்த வாதத்தை ஏற்கவில்லை. ஆனாலும், அவர்களை எனது வீட்டிற்கு அழைத்து பல முறை விவாதித்து எனது கருத்தை அவர்களை ஏற்கச் செய்வதற்கு முயன்றேன். தடாச் சட்டத்தின் கீழ் இந்த வாக்குமூலம் பெறப்பட்டிருப்பதால், அது முக்கியமான சாட்சியமாகும் என்று அவர்கள் கூறினர். பின்னர் பல மூத்த நீதிபதிகள் இந்த தீர்ப்பு தவறானது என என்னிடம் கூறினர்.

பிறகு இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழுக்கு அவர் அளித்தப் பேட்டியில், 'சி.பி.ஐயின் விசாரணையில் மிகப் பெரிய தவறுகள் உள்ளன. குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து 40 இலட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டதாக சி.பி.ஐ. கூறியது. இந்தப் பணம் யார் கொடுத்தது என்பதைப் பற்றி சி.பி.ஐ. கண்டுபிடிக்கத் தவறியுள்ளது. குற்றவியல் நீதிமுறையில் மன்னிக்க முடியாத பெரும் குறைபாடு உள்ளது என்பதை இதன் மூலம் நான் நம்புகிறேன்.

அந்த நாளில் இது பெருந் தொகையாகும். அப்படியானால், இவர்களுக்கு பின்னணியில் நிதி வசதி நிறைந்த வலிமையான சக்திகள் உள்ளன. அப்படியானால், இந்த பணம் வந்தவிதம் எப்படி? யார் கொடுத்தது? என அரசு வழக்குரைஞர் அல்டாப் அகமதுவிடம் கேட்டேன்.

புலன் விசாரணைத் தலைமை அதிகாரி கார்த்திகேயனிடம் கலந்து பேசிவிட்டுக் கூறுவதாகச் சொன்னார். ஆனல் மறுநாள் அந்த உண்மையைக் கண்டறிய முடியவில்லை என பதிலளித்தார். இதைக் கண்டு நான் பெரும் ஏமாற்றம் அடைந்தேன். என்னுடைய கவலையை மற்ற இரு நீதிபதிகளிடம் தெரிவித்தேன். இறுதித் தீர்ப்பு வழங்கும் போது சி.பி.ஐ.யின் தவறுகளைச் சுட்டிக்காட்டலாம் என அவர்கள் கூறினார்கள்.

ஆனாலும் சி.பி.ஐ. குறித்து இறுதித் தீர்ப்பில் குறை கூறுதலோ, பாராட்டுதலோ செய்வது முறையாக இருக்காது என கூறினேன். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், மூவரில் ஒருவரான நீதிபதி டி.பி. பாத்வா தனது தீர்ப்பில் விசாரணை அதிகாரி கார்த்திகேயனுக்கு முழுமையான பாராட்டைத் தெரிவித்திருந்தார். இது பத்திரிகைகளில் முக்கியச் செய்தியாக வெளியாயிற்று. இதன் மூலம் புலன் விசாரணைக் குறித்து உச்சநீதிமன்றம் திருப்தியடைந்திருக்கிறது என்ற கருத்தோட்டம் பரவுவதற்கு வழி ஏற்பட்டுவிட்டது.

**சி.பி.ஐ.யின் விசாரணையில் மிகப் பெரிய தவறுகள் உள்ளன. குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து 40 இலட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டதாக சி.பி.ஐ. கூறியது. இந்தப் பணம் யார் கொடுத்தது என்பதைப் பற்றி சி.பி.ஐ. கண்டுபிடிக்கத் தவறியுள்ளது. அந்த நாளில் இது பெருந் தொகையாகும். அப்படியானால், இவர்களுக்கு பின்னணியில் நிதி வசதி நிறைந்த வலிமையான சக்திகள் உள்ளன. அப்படியானால், இந்த பணம் வந்தவிதம் எப்படி? யார் கொடுத்தது? என அரசு வழக்குரைஞர் அல்டாப் அகமதுவிடம் கேட்டேன்.**

ஆனால், மூத்த நீதிபதியாக நான் இருந்த காரணத்தினால் என்னுடையத் தீர்ப்பை வாசித்தப் பிறகே அவர் தனது தீர்ப்பை வாசித்தார். அவர் தனது தீர்ப்பில் இத்தகைய மாற்றத்தைச் செய்திருப்பார் என்பது எனக்குத் தெரிந்திருந்தால் எனது தீர்ப்பிலும் மாற்றம் செய்திருப்பேன் என்று கூறியுள்ளார்.

முன்னாள் நீதியரசர் கே.டி. தாமஸ் தெரிவித்த அதிர்ச்சிகரமான செய்திகளைத் தொடர்ந்து, சிறப்புப் புலனாய்வுக் குழுவில் முக்கிய அதிகாரியாக இருந்த தியாகராசன் தான் செய்த முக்கியமான தவற்றினை ஒப்புக்கொண்டு உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்.

பேரறிவாளனை விசாரணை செய்தவர் தியாகராசன். அப்போது 17 வயது சிறுவனாக இருந்த பேரறிவாளன் வாங்கிக்கொடுத்த பேட்டரிதான் கொலையாளி தனுவின் குண்டில் பொருத்தப்பட்டிருந்தது என்பதுதான் அவர் மீதுள்ள குற்றச்சாட்டு. ஆனால், சிவராசன் பேட்டரி வாங்கிவரச் சொன்னது ஏன் என்பதும், எதற்காகப் பயன்படுத்தப்படும் என்பதும் தனக்குத் தெரியாது என அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்த போது கூறியதைப் பதிவு செய்யாமல் விட்டுவிட்டேன். அதை பதிவு செய்திருந்தால் அவர் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பார் என்று கூறியுள்ளார்.

தொடர்ச்சி 04ம் பக்கம்




சுலைமானி பல்கலைக்கழகம் பற்றிய அறிமுகம் நிறைவடைந்ததும், மறுநாள் நடைபெறவிருந்த மாநாட்டிற்கு முன்னோடியான எமது உள்ளக ஆலோசனைக் கூட்டம் தொடங்கியது. ஒருபுறம் குர்திஸ்தான் சுதந்திரப் போராட்டம் பற்றியும், தற்பொழுது சுயாட்சி அதிகாரத்தைக் கொண்டுள்ள குர்திஸ்தான் மாநிலம் தனிநாடாக அங்கீகரிக்கப்பட்டால் எவ்வாறான சவால்களுக்கு அது முகம்கொடுக்க நேரிடும் என்பது தொடர்பாகவும் அங்கு வந்திருந்த குர்தி அரசறிவியலாளர்கள் விளக்கமளித்தார்கள். மறுபுறத்தில் காஸ்மீர், தென் சூடான், பலஸ்தீனம் ஆகிய தேசங்களின் சுதந்திரப் போராட்டங்கள் பற்றி அங்கு வந்திருந்த பன்னாட்டு அரசறிவியலாளர்கள் விளக்கமளித்தார்கள். இப்பொழுது தமிழீழம் பற்றிப் பேசும் முறை வந்தது.

வழமையாக தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றி மேற்குலக நாடுகளின் பல்கலைக் கழகங்களில் நாங்கள் பேசுவதென்றால், வெகு எச்சரிக்கையாகவே பேசுவோம். ஒவ்வொரு வார்த்தைகளையும் இரு

# வெளியே பயிரை மேயும் கதையாக...




தடவைகள் சிந்தித்த பின்னரே வெளியிடுவோம். இதற்கு மேற்குலக நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளே பிரதான காரணமாக இருந்தன. தவிர, சுதந்திரப் போராட்டம் என்றால் என்னவென்று புரிந்து கொள்ளாத மேலைத் தேயத்தவர்களில் பலர், எம்மை வன்முறையாளர்கள் அல்லது வன்முறைக்குத் தூபமிடுபவர்கள் என்று கற்பிதம் செய்து கொள்ளக்கூடும் என்ற அச்சமும், எம்மை ஒவ்வொரு வார்த்தைகளைப் பேசும் பொழுதும் இரண்டு தடவைகள் சிந்தித்துப் பேச வைத்தன. போதாக்குறைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் சிறுவர்களைத் தமது ஆயுதப் படைகளில் இணைத்தார்கள், பொதுமக்களை இலக்கு வைத்து மனிதவெடிகுண்டுத் தாக்குதல்களை நிகழ்த்தினார்கள் என்றெல்லாம் சிங்கள அரசு முன்னெடுத்த பரப்புரைகளை உண்மையென நம்பும் மேலைத்தேயத்தவர்களில் சிலர், தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றி நாம் பேசத்தொடங்கினாலே எம்மை வேண்டா வெறுப்புடனே பார்ப்பார்கள்.

இதனால் எந்தவொரு மேலைத்தேய பல்கலைக் கழகத்தில் எமது சுதந்திரப் போராட்டம் பற்றிப் பேசினாலும், எம்மை நோக்கி எவ்விதமான வசைச் சொற்களும், குற்றச்சாட்டுக்களும் வீசப்படும் என்பதையும், அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்கான ஆயத்தங்களுடனுமே நாம் பேசுவதுண்டு. ஆனால் சுலைமானி பல்கலைக் கழகத்தில் நிலைமை அப்படியிருக்கவில்லை. தேச சுதந்திரத்திற்காகவும், இனவழிப்பில் இருந்து தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காகவும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் என்ற வகையில், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் பற்றிய நன்மதிப்பையே குர்தி அரசறிவியலாளர்கள் கொண்டிருந்தார்கள்.

இதுதான் சந்தர்ப்பம் என்று எமது தேசிய விடுதலைப் போராட்டம் பற்றி நான் அவர்களுக்கு எடுத்து விளக்கினேன். தொடர்ந்து கேள்வி நேரம் வந்த பொழுது, 'தற்கொடைத் தாக்குதல் முறையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லவா அறிமுகம் செய்தார்கள். அதனைத் தானே இப்பொழுது இஸ்லாமிய அடிப்படைவாதிகள் பின்பற்றுகின்றார்கள்?' என்று அங்கிருந்த குர்தி அரசறிவியலாளர் ஒருவர் கேட்டார். அதனை உடனடியாக நான் மறுதலித்ததோடு, தற்கொடைத் தாக்குதல் முறையை முதன் முதலில்

> **அப்படியென்றால், சிறிலங்கா அதிபர் ரணசிங்க பிரேமதாசா மற்றும் சிறிலங்கா அரசாங்க அமைச்சர்கள் சிலர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொடைத் தாக்குதல்களில் கொல்லப்பட்டதைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள்? அவர்கள் பொதுமக்கள் இல்லையா? அவர்கள் எவருமே இராணுவத்தினர் இல்லை தானே? என்று என்னை ஜோன்-லுஸ் ரசீன் அவர்கள் மடக்க முற்பட்டார். இப்பொழுது குர்தி அரசறிவியலாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களின் பார்வை எனது பக்கம் திரும்பியது.**

ஜப்பானியர்களே அறிமுகம் செய்தார்கள் என்றும், அதனை தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் தேவை கருதி புதிய வடிவங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் மேம்படுத்தினார்கள் என்றும் பதிலளித்தேன்.

உடனே குறுக்கிட்ட பிரெஞ்சு அரசறிவியலாளர் கலாநிதி ஜோன்-லுஸ் ரசீன், எனது கருத்தைத் தான் ஆட்சேபிப்பதாகவும், ஜப்பானிய தற்கொடைப் படையினர் தமது எதிரிகளின் ராணுவ இலக்குகள் மீதே தற்கொடைத் தாக்குதல்களை நிகழ்த்தினார்கள் என்றும், ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளோ பொதுமக்கள் மீதும் தற்கொடைத் தாக்குதல்களை நிகழ்த்தினார்கள் என்றும் குற்றம் சுமத்தினார். இவ்வாறான குற்றச்சாட்டை மேற்குலக பல்கலைக் கழகம் ஒன்றில் வைத்து ஜோன்-லுஸ் ரசீன் கூறியிருந்தாராக இருந்தால், அவரது கருத்தை ஆமோதிப்பதற்குப் பலர் உடனிருந்திருப்பார்கள். ஆனால் அன்று ஆகூழ் எனது பக்கம் நின்றது.

உடனடியாகவே ஜோன் லுஸ்-ரசீன் அவர்களின் கருத்தை நான் மறுதலித்தேன். 'எந்தச் சந்தர்ப்பத்திலும் பொதுமக்களை இலக்கு வைத்துத் தற்கொடைத் தாக்குதல்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் நிகழ்த்தியது கிடையாது. இராணுவ அல்லது இராணுவ இயந்திரத்திற்கு முண்டுகொடுக்கும் பொருண்மிய இலக்குகள் மீதே தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நிகழ்த்தியிருக்கின்றார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கூடிய அளவிற்கு பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் பார்த்துக் கொள்வார்கள். விரல்விட்டு எண்ணக்கூடிய சந்தர்ப்பங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் நிகழும் பொழுது எதிர்பாராத விதமாகப் பொதுமக்கள் எவராவது நின்றாலோ அல்லது தற்கொடைப் போராளியொருவரை உயிருடன் பிடிப்பதற்கு எதிரி முற்பட்டாலோ, அவர்கள் தம்மை மாய்த்துக் கொள்ளும் பொழுது எதிர்பாராத விதமாக ஓரிரு பொதுமக்கள் பலியான சம்பவங்கள் உண்டு. ஆனாலும் திட்டமிட்டு, பொதுமக்களை இலக்கு வைத்து எந்தக் காலத்திலும் தற்கொடைத் தாக்குதல்களை தமிழீழ விடுதலைப் புலிகள் நிகழ்த்தியதில்லை,' என்று நான் தெரிவித்தேன்.

தொடர்ச்சி 14ம் பக்கம்

### சிம் இல்லையென்றாலும் உங்களைக் கண்காணிக்க முடியும்

# செல்பேசி வழியாக உங்களின் தகவலை சேகரிக்கும் கூகுள்!

நவீன இலத்திரனியல் உலகம் என்பது ஒவ்வொரு மனிதனையும் கண்காணிக்கும் புலனாய்வு வழி என்பது அவ்வப்போது உறுதியாகி வருகின்றது. தனது பணத்தைக் கொண்டே தனது நடவடிக்கைகள் அனைத்தையும் தானே புலனாய்வு நிறுவனங்களுக்கும் வழங்கும் நபராக இன்றைய நவீன மனிதன் மாற்றமடைந்து வருகின்றான். அதில் முக்கிய பங்கு வகிப்பது இந்த செல்பேசிகள். செல்பேசியில் சிம் (Sim) அட்டை இருந்தால்தான் பிரயோசனம் என்றில்லை. இப்போது சிம் இல்லாமலேயே கண்காணிக்கும் வசதிகள் பெருகிவிட்டன.

அண்ட்ரொய்ட் (Android) இயங்குதளத்தினை பயன்படுத்துபவர்களின் செல்பேசிகளில் சிம் கார்டே இல்லாத பொழுதும், அதன்மூலம் பயனாளர்களின் இருப்பிடத் தகவல்களை கூகுள் சேகரிக்கும் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. உலகம் முழுதும் செல்பேசி பயன்படுத்துபவர்கள் அதிகமாக பயன்படுத்தும் இயங்குதளம் அண்ட்ரொய்ட் ஆகும். இது பிரபல தேடுபொறி நிறுவனமான கூகிளின் தயாரிப்பாகும். இந்நிலையில் அண்ட்ரொய்ட் இயங்குதளத்தினை பயன்படுத்துபவர்களின் செல்பசிகளில் சிம் அட்டை இல்லாத பொழுதும், அதன்மூலம் பயனாளர்களின் இருப்பிடத் தகவல்களை கூகுள் சேகரிக்கும் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக பிரபல தொழில்நுட்ப இதழான 'குவார்ட்ஸில்' வெளியாகியிருக்கும் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நீங்கள் உங்கள் செல்பேசிகளில் இருப்பிட சேவையினை (லொகேஷன் சேர்வீஸ்) அணைத்து வந்திருந்த பொழுதும், அல்லது உங்கள் செல்பேசிகளில் சிம் அட்டை இல்லாத பொழுதும், உங்களது இருப்பிடத் தகவல்களை அண்ட்ரொய்ட் இயங்குதளமானது சேகரித்து, இணையத்தில் இணைக்கப்பட்ட உடனேயே கூகுளுக்கு அனுப்புகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இவ்வாறு தகவல் சேகரிப்பதை கூகுள் நிறுவனமும் ஒப்புக்கொண்டிருக்கிறது. இது தொடர்பாக அந்நிறுவன செய்தித் தொடர்பாளர் ஒருவர், இவ்வாண்டு துவக்கத்தில் இருந்து குறுஞ் செய்திகளை அனுப்பும் வேகம் மற்றும் செயல் திறனை அதிகரிக்கும் பொருட்டு, செல்பேசிகளின் செல் அடையாள எண்களை கூடுதல் சிக்னலாகப் பயன்படுத்துகிறோம் என்று தெரிவித்திருந்தார்.

இதன்படி அண்ட்ரொய்ட் செயலியானது நமது செல்பேசிகளில் இருப்பிட சேவையினை (லொகேனே் சேர்விஸ்) நிறுத்தி வந்திருந்த பொழுதும், அல்லது அலைபேசிகளில் சிம் கார்டே இல்லாத பொழுதும், நமக்கு அருகில் உள்ள செல்போன் கோபுரங்கள் பற்றிய தகவல்களை சேகரித்து, கூகுளுக்கு அனுப்புகிறது. இதன் காரணமாக நமது இருப்பிடம் உள்ளிட்ட பல தகவல்களை கூகிளால் பெற முடியும். அதே சமயம் நாம் விரும்பினாலும் அல்லது செல்பேசியினை மீளவும் ரீசெட் முறைக்கு மாற்றி வைத்தாலும் இதிலிருந்து விடுபட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளியே பயிரை....

அப்பொழுதுதான் அவதானித்தேன். அங்கிருந்த குர்தி அரசறிவியலாளர்களும், மொழி பெயர்ப்பாளர்களும், உன்னிப்பாகவும், ஆர்வத்தோடும் எனது பதிலைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் ஜோன்-லுஸ் ரசீன் அவர்களோ விடவில்லை. 'அப்படியென்றால், சிறீலங்கா அதிபர் ரணசிங்க பிரேமதாசா மற்றும் சிறீலங்கா அரசாங்க அமைச்சர்கள் சிலர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொடைத் தாக்குதல்களில் கொல்லப்பட்டதைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள்? அவர்கள் பொதுமக்கள் இல்லையா? அவர்கள் எவருமே இராணுவத்தினர் இல்லை தானே?' என்று என்னை ஜோன்-லுஸ் ரசீன் அவர்கள் மடக்க முற்பட்டார்.

இப்பொழுது குர்தி அரசறிவியலாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களின் பார்வை எனது பக்கம் திரும்பியது. நான் கூறினேன்: 'ரணசிங்க பிரேமதாசா சிறீலங்காவின் அதிபர் மட்டுமன்றி ஆயுதப் படைகளின் தளகர்த்தாவும் கூட. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கைகள் பற்றிய இறுதி முடிவுகளை அவரே எடுத்தார். இப்படித்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொடைத் தாக்குதல்களில் கொல்லப்பட்டதாக நீங்கள் கூறும் சிறீலங்கா அரசாங்க அமைச்சர்களின் கதையும். அவர்கள் எல்லோருமே எதோ ஒரு விதத்தில் யுத்த நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்கள் தான்.'

'அப்படி என்றால் ராஜீவ் காந்தியை ஏன் புலிகள் கொன்றார்கள்?' என்றார் ஜோன்-லுஸ் ரசீன். நான் சிரித்து விட்டு அவரிடம் கேட்டேன், 'ராஜீவ் காந்தியின் கட்டளையின் பேரில் வந்த இந்தியப் படைகள் பத்தாயிரம் தமிழர்களைக் கொன்றதைப் பற்றியும், பல தமிழ் பெண்களைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியது பற்றியும் எப்படியான பார்வையை நீங்கள் கொண்டிருக்கின்றீகள்?' அத்தோடு நின்றுவிடாது, 'குர்தி மக்களை இன வழிப்புக்கு உட்படுத்திய சதாம் உசேன் இங்கு தூக்கிலிடப்பட்டுத் தண்டிக்கப்பட்டார். அதனையும் நினைவில் வைத்திருங்கள்,' என்றேன்.

அதற்குப் பதிலளிக்க முடியாது ஒரு கணம் ஜோன்-லுஸ் ரசீன் திணறினார். ஓரிரு வினாடிகள் யோசித்து விட்டு, பின்னர் அமைதியாகி விட்டார். எனது எதிர்ப்புறமாகவும், பக்கவாட்டிலும் இருந்த குர்தி அரசறிவியலாளர்களும், மொழி பெயர்ப்பாளர்களும் நமட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது எனது மனதுக்குள் ஒரு நெருடல்.

ஈழப்பிரச்சினை பற்றி அக்குவேறு ஆணிவேறாக என்னைக் குறுக்குக் கேள்வி கேட்கும் இவருக்கும், தமிழர்களுக்கும் என்ன சம்பந்தம்? இவரது ஈடுபாடு காஸ்மீது சுதந்திரப் போராட்டம் பற்றியது. ஈழப்பிரச்சினையில் ஆர்வம் கொண்ட ஒருவராக இவர் தென்படவில்லை. ஆனாலும் ஈழத்து அரசியல் களநிலவரம், சிங்கள ஆட்சியாளர்களின் பெயர்கள் போன்றவற்றை இவர் எவ்வாறு தெரிந்து வைத்துள்ளார்? இது எனக்குப் பெரும் புதிராகவே இருந்தது. எப்படியாவது இவரைத் தனிமையில் சந்திக்கும் பொழுது கேட்டறிந்து கொள்வது என்று முடிவு செய்தேன்.

அதற்கான சந்தர்ப்பம் அன்று இரவே வந்தது.

எம்மையெல்லாம் நேரில் சந்தித்து, எமக்கு விருந்தளித்து, எம்மை மதிப்பளிக்க வேண்டும் என்று குர்திஸ்தானின் ஆளும் கூட்டணிக் கட்சியான தேசப்பற்றுள்ள குர்திஸ்தான் ஒன்றியம் எனப்படும் பி.யூ.கே கட்சியின் அரசியல்பீடத் தலைவரான மாலா பக்தியார் அவர்கள் செய்தி அனுப்பியிருந்தார். அதன்படி அன்று இரவு சுலைமானியாவில் உள்ள முன்னணி விடுதிகளில் ஒன்றான திவான் விடுதிக்கு நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு சென்றதும் பக்தியாரின் வருகைக்காக நாம் எல்லோரும் காத்திருந்த பொழுது, கலாநிதி ஜோன்-லுஸ் ரசீன் அவர்களுடன் நான் தனிமையில் உரையாடுவதற்கான சந்தர்ப்பம் கிட்டியது.

மெல்ல அவரிடம் கேட்டேன்: 'தமிழர் பிரச்சினை பற்றி நீங்கள் அறிந்து வைத்திருப்பதைப் பார்க்கும் பொழுது, அதில் நீங்கள் ஈடுபாடு கொண்டவர் போல் தெரிகின்றது. இதனைப் பற்றிச் சற்று விரிவாகக் கூறுங்களேன்...'

என்னை ஜோன்-லுஸ் ரசீன் உற்றுப் பார்த்தார். பின்னர் கூறினார், 'நான் தமிழர்களின் பிரச்சினையை உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன்.'

அதன் பின்னர் மீண்டும் என்னை ஜோன்-லுஸ் ரசீன் உற்றுப் பார்த்தார். அவரது பார்வை எனது கண்களை ஆழ ஊடுருவித் துளைப்பது போல் இருந்தது. சில நொடிகள் அமைதியாக இருந்து விட்டு திடீரென கூறினார்:

'எனது மனைவி ஒரு தமிழ்ப் பெண்.'

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

குர்திஸ்தான் பயணம் தொடரும்...

**மகிந்தவோ, மைத்திரியோ அல்ல....**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான இந்த அரசாங்கத்துடன், நெருக்கமானதும் சிநேகபூர்வமானதுமான உறவை, சீன அரசாங்கமும் சீனத் தலைவர்களும் பேணுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்து சமுத்திரத்தில், இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் மிக்க அமைவிடம் குறித்து நாம் அறிவோம். அதனால் தான், தெற்காசியப் பிராந்தியத்தின் பிரதான பங்காளராக, தனது காலில் இலங்கை நிற்பதற்குத் தேவையான என்னவிதமான உதவிகளையும் நாம் வழங்குகிறோம். உதாரணமாக, கொழும்புத் துறைமுகம் தற்போது, 2 மில்லியனுக்கும் மேற்பட்ட கொள்கலன்களைக் கையாள்கிறது. இது, 6 மில்லியன்களாக மிக இலகுவாக அதிகரிக்கப்பட முடியும் என்று அவர் தெரிவித்தார்.

அத்துடன்,சிறீலங்காவிற்கு வழங்கும் நிதி உதவிகள் தொடர்பாக, பின்னிணைப்புகள் எவற்றையும் சீனா கொண்டிருக்காது என்று உறுதியளித்த சீன வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, மனித உரிமைகள் விசாரணைகளையோ அல்லது போர்க் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களையோ, முன் நிபந்தனைகளாகச் சேர்க்காது எனவும் உறுதியாகக் கூறியுள்ளது.

## கிழக்கு மாகாணத்தில்....

இக்கிராமத்தில் 8 முஸ்லிம் குடும்பங்கள் வசித்துள்ளன. அருகிலுள்ள கெங்காசாரத்தோட்டம் என்ற கிராமத்தில் 10 சிங்களக் குடும்பங்களும் வாழ்ந்துள்ளனர். இடம்பெயர்ந்த தமிழர்க்கு எவ்வித நிவாரண உதவிகளும் வழங்கப்படாது, ஏனைய இரு சமூகத்திற்கும் கிண்ணியா பிரதேச செலகத்தினால், அரசினால் வழங்கப்பட்ட அனைத்து நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. தமிழர்கள் பூர்விகமாக வாழ்ந்த காணிகளை அரசாங்கம் சுவீகரித்து எடுத்து சிறியளவில் வசித்த இரு சமூகங்களுக்கும் புதிய காணிகள் போன்று வழங்கப்படவுள்ளது.

ஒரு ஏக்கர், முக்கால் ஏக்கர், அரை ஏக்கர் அளவில் உறுதிக் காணிகளை வைத்திருந்த தமிழ் மக்களுக்கு வெறும் 10 பேச் காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தமது சொந்த காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட்டு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என மக்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றனர். இடம்பெயர்வதற்கு முன்னர் மக்கள் வாழ்ந்த வீடுகள், கிணறுகள், மலசலகூடங்கள், பயன்தரும் மரங்கள், பாடசாலை, காணப்படுகின்ற போதிலும், அவை அனைத்தும் சேதமடைந்து காணப்படுகிறது. அருகில் வசிக்கும் முஸ்லிம் கிராமம் என்பதனால் தமிழ் பாடசாலை முஸ்லிம் பெயராக மாற்றப்பட்டுள்ளது. தமிழர் வசித்த காணிகளை முஸ்லிங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேபோன்று சந்தனவெட்டை பகுதியை அண்டிய கல்மலை காணியை விட்டு வெளியேறுமாறு மூதூர் வனஜீவராசிகள் அதிகாரிகள் அச்சுறுத்தல் விடுக்கின்றனர். திருகோணமலை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சந்தனவெட்டை பகுதியை அண்டிய கல்மலை காணி 1972 ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் விவசாயம் செய்வதற்காகவும், குடியிருந்ததாகவும், வழங்கப்பட்டது. யுத்தம் நிலவிய 1985 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவ்விடத்தை விட்டு இடம் பெயர்ந்து மூதூர் நகர் பகுதிக்குச் சென்று வாழ்ந்ததாகவும், யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் 2009, 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இன்றுவரை சோளம், நிலக்கடலை போன்ற பயிர்களை செய்து வருகின்றோம்.

**இவ்வாறுதான் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்திலும் தமிழர்களின் பூர்விகக் காணிகள் முஸ்லிம் சிங்களவர்களினால் அபகரிக்கப்படுகிறது.**

இங்கு குடியிருக்கும் மக்கள் ஆதிவாசிகள். கடந்த காலத்தில் இடம்பெயர்ந்த இவர்களை முறையாக மீள்குடியமர்த்தப்படாது அவர்களாக, தங்களால் இயன்றளவு சிறிய சிறிய குடிசைகளை அமைத்துக் கொண்டுவாழ்ந்து வருகின்றனர். கடந்த வாரம் இப்பகுதிக்கு சென்று சம்பந்தன் குழுவினரிடம், தங்களுக்கான அடிப்படை வசதிகளுடன் கூடிய நிரந்தர வீட்டுத் திட்டம் அமைத்துத் தருமாறு கோரிக்கைவிடுத்த நிலையில், வனஜீவராசிகள் அதிகாரிகள் வெளியேறுமாறு கோரியுள்ளனர். சந்தனவெட்டை பகுதி மலையடிவாரத்தை அண்டிய பகுதியில், முஸ்லிம் தரப்பினரால் கல் உடைக்கின்ற கல்குவாரி இயங்கிவருகிறது. இங்கு உடைக்கப்படும் கல்களினால் தங்கள் குடியிருப்பு பாதிக்கப்படுவதாக பொதுமக்கள் அண்மையில் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்திருந்தனர். இந்நிலையில், கல்குவாரி தரப்பினர் வனஜீவராசிகள் அதிகாரிகளுக்கு பெருமளவான நிதியினை வழங்கிய பின்னர் அவர்கள் வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறுதான் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்திலும் தமிழர்களின் பூர்விகக் காணிகள் முஸ்லிம் சிங்களவர்களினால் அபகரிக்கப்படுகிறது. இதனைத் தடுப்பதற்கு தமிழர்த் தரப்பில் யாருமில்லை. இவ்வாறான நிலை தொடருமாக இருந்தால் தமிழர்களின் எதிர்கால சந்ததினருக்கான இருப்பு என்பது பாரிய பிரச்சினையாக உருவாகும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.


பிரான்சில் உள்ள அனைத்துத் தமிழ்ச்சோலைப் பள்ளிகளும் இணைந்து வழங்கும்
19 வது ème
அகவை முத்தமிழ் விழா
Gala du Tamoulcholai 2017
காலம்: 16-12-2017 சனிக்கிழமை
நேரம்: 11:00 மணி
இடம்: LE MILLÉNAIRE
3 Place du 19 Mars 1962,
77176 Savigny-le-Temple
RER D
Gare - Savigny-le-Temple
Direction: Melun Via Combs-La-Ville
நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்
தமிழ்ச்சோலை - பிரான்சு
Tamoulcholai-France
பிரான்சு மண்ணில் வளரும் நம் சிறார்களின் முத்தமிழ் வெளிப்பாடுகளைக்
கண்டு களித்திட அனைவரும் வருக!
தாய்நிலம் காணத் தலைமுறை நாம்
புலம்பெயர் மண்ணில் வளர்கின்றோம்
மண்தனை மறந்தோர் நெஞ்சங்களில்
மாண்பினைப் புகட்டும் தமிழ்ச்சோலை
நுழைவு: இலவசம்
Entre Gratuite
அன்றைய நாள் தமிழ்ச்சோலைகளின் வளர்ச்சி நிதிக்கான
சீட்டுக்கள் நல்வாய்ப்புப் பார்க்கப்படும்.
பரிசுப் பொருட்களை அன்பளிப்புச் செய்பவர்கள்
1ம் பரிசு: ORDINATEUR PORTABLE மடிக்கணினி SWARNA MAHAL
2ம் பரிசு: NOTEBOOK வலையகம் Boucherie GABARINA
3ம் பரிசு: TABLETTE 7" வரைபட்டிகை BABA
மூன்று ஆறுதல் பரிசுகள் SRI BHAGAVAN
உதவிகள் வழங்கிய வர்த்தக நிறுவனங்கள்
FRANPRIX BOBIGNY, HARRY, GOPAL & CO,
M.M.EXPRESS, ANNA MARCHÉ, BALAVINAYAGAR
"நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்"
"NOTRE LANGUE MATERNELLE EST LA RACINE DE NOTRE BIEN ÊTRE"
தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் ASSOCIATION TAMOULCHOLAI - 165 BD de la Villette, 75010 PARIS
Tél: 09 84 06 38 83 | tamoulcholai@yahoo.fr | www.tamoulcholai.fr

# அது தமிழீழக் காவல்துறை இது சிறீலங்காக் காவல்துறை



தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் செயற்பட்ட காலத்தில் காவல் துறையினருக்கும், பொது மக்களுக்குமான உறவு நெருக்கமாக இருந்த தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், பிரச்சினைகளை உடனுக்குடன் தெரியப்படுத்தி தீர்வுகளை பெற்றுக்கொள்ள கூடியதாகவும் இருந்தது என பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். கடந்த 23ம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற மாவட்ட குடியியல் பாதுகாப்பு குழு கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வட மாகாணத்திற்கான சிறீலங்காவின் சிரேஸ்ட காவல்துறை அதிகாரி ரி.கனேசநாதன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட காவல் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் குடியியல் சிவில் சமூக பிரதிநிதிகள் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். இதில் கலந்துகொண்ட சிவில் சமூக பிரதிநிதிகள் தங்களின் கருத்துக்களையும் தெரிவித்தனர். இதன்போது விடுதலைப் புலிகளின் காலத்தில் பொது மக்களுக்கும் அதன் காவல்துறைக்கும் இடையில் நெருங்கிய உறவு காணப்பட்டது. இது குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு பெரும் உதவியாக இருந்தது. ஆனால் தற்போது காவல்துறையினருக்கும் பொது மக்களுக்குமான உறவில் இடைவெளி காணப்படுகிறது. அதற்கு மொழியும் ஒரு தடையாக இருக்கிறது என்றும் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது.

# தமிழ் ஊடகத் துறையின்....

இதற்குப் பரிசாக அவர் 1987ம் ஆண்டு நவம்பர் 23ம் திகதி இந்திய அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்டு இரண்டு மாதங்கள் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அந்தச் சிறை அனுபவங்களை பின்னர் தொடராக எழுதினார். எஸ்.எம்.ஜி.யின் சிறைக்குறிப்புகள் தமிழ்நாட்டில் ஜுனியர் விகடன் இதழில் ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை என்ற தலைப்பில் தொடராக வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பின்னர், அதனைத் தொகுத்து ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை என்ற அந்த நூலை கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் வெளியிட்டிருந்தது.

2000ம் ஆண்டின் பின்னர் மட்டக்களப்பில் தங்கியிருந்த அவர், மறைந்த மனோ ராஜசிங்கம் அவர்களின் நிருவாகத்தில் மட்டக்களப்பில் இயங்கிக் கொண்டிருந்த தினக்கதிர் தினசரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக கோபு ஐயா இருந்தார். பின்னர் ஆலோசகராகவும் கடமையாற்றினார். கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் ஆலோசகராக இருந்து அந்தச் சங்கத்தை வழிநடத்தினார். இவற்றின் பின்னர் யாழ்ப் பாணத்தில் இருந்து வெளிவந்த நமது ஈழநாடு நாளிதழின் ஆசிரியபீட கௌரவ ஆலோசகராகவும் இவர் பணியாற்றி யிருந்தார். தனது 60 ஆண்டுகால ஊடக வாழ்வில் வீரகேசரி, ஈழநாடு, ஈழமுரசு, காலைக்கதிர், செய்திக்கதிர், ஈழநாதம், தினக்கதிர், சுடரொளி, நமது ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியுள்ளார்.

2002ம் முதல் 2004ம் ஆண்டு வரை ஐரோப்பிய நாடுகளில் அவர் தங்கியிருந்தார். அப்போது பிரான்ஸ் ஈழமுரசு பத்திரிகைக்கும் வந்து சில காலம் வழிகாட்டியிருந்தார். அப்போது தனது நிறைந்த பல அனுபவங்களை அங்கு பணியாற்றிய ஆசிரியர்களுக்கு அள்ளி வழங்கினார். எந்த அச்சுறுத்தலுக்கும் மத்தியிலும் மக்களுக்கு சொல்லவேண்டிய கருத்தை துணிந்து சொல்லவேண்டும், மக்களுக்கு உண்மையைக் கொண்டு சென்று சேர்ப்பதற்கு ஓர் ஊடகவியலாளன்



ஈழமுரசு தலைமையகத்தில் எஸ்.எம்.ஜி அவர்களுடன் கலைஞர் ரகுநாதன்.

பின்நிற்கக்கூடாது என்பதை தனது அனுபவங்களில் இருந்து கற்றுத் தந்தார். அவரது அந்த அனுபவக் கருத்துக்கள்தான் நம்பிக்கையையும், உறுதியையும் தந்து இத்தனை நெருக்கடிகள், அச்சுறுத்தல்களையும் கடந்து ஈழமுரசு இன்றும் வெளிக் கொண்டுவர உதவுகின்றது.

பிரான்ஸ் ஈழமுரசின் தலைமையகத்தில் அவர் நின்றிருந்த நாட்களில் அவரைக் கௌரவிக்கும் முகமாக அவரது ஆசிரியர் தலையங்கத்துடன் ஈழமுரசு வார இதழ் ஒன்று வெளிவர வேண்டும் எனக் கோரியபோது, எந்தவித மறுப்புமின்றி எழுதித்தந்ததுடன், தொடர்ந்து ஈழமுரசு பத்திரிகைக்கு தனது ஆக்கங்களையும் எழுதித்தந்தார். ஊடகவியலாளர்களுக்கு ஆசான் மற்றும் வழிகாட்டி கிடைப்பதென்பது அரிதானதொன்று. அந்த வகையில் கோபு ஐயாவை வழிகாட்டியாகப் பெற்ற ஊடகக்காரர்கள் அனைவரும் பாக்கியம் பெற்றவர்களே.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளின் முன்னர் யாழ்ப் பாணம் தொல்புரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லத்தில் அவர் தங்கியிருப்பதாக கேள்விப்பட்டபோது பேரதிர்ச்சியே ஏற்பட்டது. உடனடியாக ஓர் உறவினரை அங்கு அனுப்பி அவரைச் சந்திக்கவைத்து என்ன உதவி தேவை எனக் கேட்டபோது, அங்குள்ள முதியவர்களுடன் ஒருவராகவே



பத்திரிகைப் பணியில்...

நானும் வாழ்கின்றேன். தனக்கு மட்டுமான சிறப்பான உதவி எதுவும் தேவையில்லை என மறுத்த அவரது உயர்ந்த உள்ளம் ஆச்சரியப்படவைத்தது. அவரிடம் கற்ற ஊடகவியலாளர்கள் பலரும் இன்று இலட்சாதிபதிகளாக வாழும்போது, ஏற்றிவிட்ட ஏணியான அவர் எந்தவித எதிர்பார்ப்புமின்றி, ஆடம்பர வாழ்க்கையுமின்றி எளிமையான வாழ்வை இறுதிவரை வாழ்ந்துவிட்டுச் சென்றிருக்கின்றார்.

ஓர் ஊடகவியலாளர், பத்திரிகையாளர் என்பதற்கும் அப்பால், பல்லோராலும் விரும்பிப் படிக்கப்பட்ட 'ஊர்சுற்றி, சிறீரங்கன்' போன்ற புனைபெயர் உட்பட பல புனைபெயர்களிலும் திரை விமர்சனம், இசை விமர்சனம், நூல் விமர்சனம் என அவர் பல விடயங்களையும் எழுதியுள்ளார். அரசியல் கட்டுரைகள், பொதுக்கட்டுரைகள் என ஆயிரக்கணக்கில் எழுதியுள்ள இவர் 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச்சிறை', 'அந்த ஓர் உயிர்தானா உயிர்', 'பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு', 'ஈழம் முடிவில்லாப் பயணத்தில் முடியாத வரலாறு' ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். எடுத்த எடுப்பிலேயே செய்திகளுக்கும், ஆசிரியர் தலையங்கங்களுக்கும் கவர்ச்சிகரமான தலைப்புகள் போடும் திறன் எனஒரு ஊடகவியலாளனுக்கு இருக்கவேண்டிய, தகுதிகளெல்லாம் கோபு ஐயாவிடம் நிறைந்ததாகவே இருந்தன.

நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்த எஸ்.எம்.கோபாலரத்தினம் ஐயாவின் கைகள் இன்று ஓய்ந்து விட்டன. இலங்கையின் ஊடக வரலாற்றில் பல நெருக்கடியான காலகட்டங்களில் தனது எழுத்துக்களின் ஊடாக மக்களுக்கான விடயங்களை கொடுத்துக் கொண்டிருந்த ஓர் தலைசிறந்த ஊடகப் போராளியான எஸ்.எம்.ஜியின் மறைவு தமிழ் ஊடகத்துறைக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

**- வெற்றிநிலவன்**

## வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

### ஒரே நாளில் உலகின் முதல் பணக்காரரான அமேசான் நிறுவனர்!

உலக பணக்காரர்கள் பட்டியலில் இணைய வர்த்தக நிறுவனமான அமேசான் நிறுவனர் ஜெஃப் பீசாஸ், முதலிடம் பிடித்தார். இத்தனைக்கும் இது ஒரே நாளில் நடந்ததென்றால் நம்பமுடிகிறதா...! நத்தார் பண்டிகையை முன்னிட்டு மேற்கத்திய நாடுகளில் நவம்பர் மாத கடைசி வெள்ளிக்கிழமையை கறுப்பு வெள்ளி (Black Friday) என்று கொண்டாடுவது வழக்கம். இந்த தினத்தின் போது பெரிய நிறுவனங்களின் பொருட்கள் அனைத்தும் மிகப் பெரிய சலுகைகளுடன் விற்பனையைத் துவக்கும். இதன் ஒரு பகுதியாக தற்போது உள்ள இலத்திரனியல் யுகத்தில் கடைக்குச் சென்று பொருட்கள் வாங்குவதை விடுத்து வீட்டில் இருந்தபடியே இணைய வழியில் (வின்டோ ஷொப்பிங்)பொருட்கள் வாங்குவதை வாடிக்கையாளர்கள் பெரிதும் விரும்புகின்றனர். கடை வீதிகளில் இருக்கும் கூட்ட நெரிசலை தவிர்க்கவும், இருக்கும் இடத்திலேயே அனைத்துப் பொருட்களும் சலுகை விலைகளில் கிடைப்பதும் தான் இந்த இணைய வழி வர்த்தகத்தின் வெற்றியாக உள்ளது. இந்நிலையில், இணைய வர்த்தகத்தில் உலகளவில் முதலிடத்தில் இருக்கும் பிரபலமான அமேசான் நிறுவனம் பல சலுகைகளை இந்த கறுப்பு வெள்ளி தினத்தில் அறிவித்தது. இது வாடிக்கையாளர்களிடம் பலத்த வரவேற்பை பெற்றது.




இதுவே, அமேசான் நிறுவனர் ஜெஃப், உலக பணக்காரர்கள் பட்டியலில் மைக்ரோசொஃப்ட் நிறுவனர் பில் கேட்ஸை பின்னுக்குத்தள்ளி முதலிடம் பெற வைத்தது. அதுமட்டுமல்லாமல் அவரது மொத்த சொத்து மதிப்பும் 100 பில்லியன் டொலர்கள் உயரக் காரணமாக அமைந்தது. கடந்த 4 மாதங்களுக்கு முன்பாக உலக பணக்காரர்கள் பட்டியலில் மைக்ரோசொஃப்ட் நிறுவனர் பில் கேட்ஸை (90 பில்லியன் டொலர்கள்) விட அமேசான் நிறுவனர் ஜெஃப், 1 சதவீத வளர்ச்சியுடன் (90.6 பில்லியன் டொலர்கள்) முன்னிலைப் பெற்றார். இதனால் அமேசான் நிறுவனத்தினுடைய பங்கு வர்த்தகம் அதிகரித்து காணப்பட்டது. இருப்பினும் இவர்கள் இருவருக்கும் இடையிலான போட்டி பரபரப்பாகவே இருந்தது. ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலையின் காரணமாக அமேசான் நிறுவனர் ஜெஃப், உலக பணக்காரர்கள் பட்டியலில் 100 பில்லியன் டொலர்களுடன் முதலிடத்தை உறுதி செய்தார்.

### இணையத்தில் விற்கப்பட்ட முதல் விமானம்

சீனாவில் இணையம் ஊடாக விமானம் விற்கப்பட்டது உலகின் முதல் இணைய விமான விற்பனையாகியுள்ளது. சீனாவில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமான போயிங் 747 எஸ் ராக விமானங்கள் இரண்டு பல நாட்களாக பயன்படுத்தபடாமல் இருந்து வந்தது. கடந்த ஆறு வருடமாக இந்த




விமானத்தை பல இடங்களிலும் விற்பனை செய்ய அந்த நிறுவனம் முயற்சி செய்தும் பலனில்லை. இந்நிலையில் விமானத்தை அலிபாபா குழுமத்தின் டோபாவ் என்ற இணைய வர்த்தக நிறுவனம் வாங்கியது. இந்த இரண்டு விமானங்களையும் புதுப்பித்து புதிதாக வர்ணம் பூசி விற்பனை செய்ய முடிவு செய்தது. மேலும் இதற்காக அவர்களது இணையதளம் முழுக்க நிறைய விளம்பரங்களை கொடுத்திருந்தது. எஸ்.எஃப் எயார் கார்கோ என்ற எயார் லைன்ஸ் நிறுவனம், இணையம் மூலம் 48 மில்லியன் அமெரிக்க டொலர் பணம் செலுத்தி இந்த இரண்டு விமானங்களை வாங்கியது. அத்துடன், எஸ்.எஃப் எயார் கார்கோ நிறுவனம் தனக்கு சொந்தமான இடத்தில் விமானத்தை விநியோகிக்கும்படியும் கேட்டுக்கொண்டது. அவர்கள் குறிப்பிட்ட அதே இடத்திற்கு மறுநாளே விமானத்தை அலிபாபா நிறுவனம் சென்று வழங்கியது. உலகிலேயே இணைய விமானம் விற்கப்பட்டது இதுவே முதல்முறையாகும்.

ஒரு கதை

## புத்திசாலித்தனம்



பீர்பால், அறிவாற்றலும் புத்திக்கூர்மையும் உள்ளவர். எவ்வளவு பெரிய சிக்கலையும், தமது அறிவுத் திறமையாலே சமாளித்து விடுவார்னு கேள்விப்பட்ட காபூல் அரசருக்கு, பீர்பாலின் அறிவாற்றலை ஆராய்ந்து அறிய ஆவல் ஏற்பட்டது.

அதனால ஒரு கடிதத்துல, மேன்மை தாங்கிய அக்பர் சக்ரவர்த்தி அவர்களுக்கு, ஆண்டவன் தங்களுக்கு நலன்கள் பலவும், வெற்றிகள் பலவும் தருவாராக. தாங்கள் எனக்கு ஒரு குடம் அதிசயம் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்னு எழுதி கையெழுத்துப் போட்டு, தூதன் மூலமா அக்பருக்கு அனுப்பினாரு காபூல் அரசர்.

கடிதத்தைப் படிச்ச அக்பர் திகைச்சு, ஒரு குடம் அதிசயம் அனுப்புவதா? ஒன்றுமே புரியவில்லையேன்னு குழம்பி, பீர்பால்கிட்ட கடிதத்தை காட்டினாரு.

பீர்பால் சிறிது நேரம் யோசிச்சாரு. அப்புறம், அக்பரிடம் மூன்று மாதத்தில் அதிசயம் அனுப்புவதாக பதில் எழுதுமாறு சொன்னார். அக்பரும் அதேபோல் தபால் எழுதி அனுப்பினாரு.

அப்புறம் அக்பர், பீர்பாலிடம், ஒரு குடம் அதிசயம் எப்படி அனுப்புவீர்னு விசாரிச்சாரு. அதுக்கு பீர்பால், மூன்று மாதம் கழித்து அந்த அதிசயத்தைப் பாருங்களேன்னாரு.

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு விதை

## மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தளபதி



**லெப்.கேணல் ஜோய்**
(கணபதிப்பிள்ளை ரகுநாதன்)
செங்கலடி மட்டக்களப்பு

மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட தளபதியான லெப்.கேணல் ஜோய், மணலாற்றுக் காட்டில் இந்திய இராணுவ முற்றுகைக்குள் தலைவரைப் பாதுகாப்பதில் பெரும் பணியாற்றிய போராளி. இந்தியக் கூர்க்காப் படையினருக்கு காட்டுக்குள் பாடம் நடத்தியவன் ஜோய் என்று போராளிகள் பெருமைப்படும் அளவிற்கு தாக்குதல்களை நடத்தியவன். இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் மட்டக்களப்பில் மீண்டும் காலடி எடுத்து வைத்தான். தென் தமிழீழத்தில் புலிகளா? அழிந்து விட்டார்கள். என சிறீலங்கா கொக்கரித்தது. வீட்டில் ரகுநாதன் எனவும் இயக்கத்தில் ஜோய் எனவும் விசாலகன் எனவும் அழைக்கப்பட்ட ஜோய் சிங்களப் படைகளுக்கும், முஸ்லீம் ஊர்காவல் படைகளுக்கும் அங்கும் பாடம் கற்பித்தான். தனது திறமைகளின் மூலம் மட்டக்களப்பு அம்பாறை தளபதியாக உயர்ந்தான். புரண்ட் லைன் (Frontline) சஞ்சிகை ஜோயிடம் நேர்காணல் செய்து வெளியிட்டது. மாவீரர் நாளான 27.11.1991 அன்று 3000ற்கும் மேற்பட்ட சிறீலங்காப் படையினர் "வட்டேறவும்" என்ற பெயரில் சுற்றிவளைப்பில் இறங்கினர். இந்த இராணுவ நடவடிக்கைக்கு பதிலடியாக விசாலகன் தாக்குதல் ஒன்றை திட்டமிட்டான். பன்குடாவெளி இராணுவ முகாமிலிருந்தும், முதிரையடி ஏத்தம் இராணுவ முகாமிலிருந்தும் உணவுப் பொருட்களை எடுக்க செங்கலடி நோக்கி வரும் இராணுவத்தினர்மீது தாக்குதல் நடாத்த தீர்மானித்தான். தாக்குதல் வலயப் பகுதியில் உள்ள முக்கிய வீதியில் 25 மீற்றர் நீளமுள்ள சுறுத்த பாலமும், அவ்வலயத்தில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் 15 மீற்றர் நீளமுள்ள இன்னமொரு பாலமும் இருந்தது. 29.11.91 காலை 08.40 மணிக்கு தாக்குதல் தொடங்கியது. 7 சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர். மற்றையோர் தப்பி ஓடினார்கள். தாக்குதல் வலயத்தில் நின்ற விசாலகனிடம் இருந்து கட்டளைகள் பிறந்து கொண்டிருந்தன. தாக்குதலில் காயமடைந்து காட்டுக்குள் ஓடிமறைந்து கொண்ட சிறிலங்கா இராணுவ வீரன் சுட்ட ரவை ஒன்று விசாலகனின் தொண்டைக்கு கீழ் தாக்குகின்றது. படுகாயமடைந்த ஜோய் 30.11.1991 அன்று காலை 5.30 மணிக்கு வீரச்சாவைச் சந்தித்துக் கொண்டான்.

ஒரு குறள்

அறத்துப்பால் – அடக்கமுடைமை



காக்க பொருளா அடக்கத்தை
ஆக்கம்
அதனினுஉங் கில்லை உயிர்க்கு.

மிக்க உறுதியுடன்
காக்கப்படவேண்டியது அடக்கமாகும்.
அடக்கத்தைவிட ஆக்கம் தரக்
கூடியது வேறொன்றும் இல்லை.

ஒரு மருத்துவம்

## இறைச்சிகளின் மூலம் மனிதருள் நுழைந்து சிறுநீர் பாதையைப் பாதிக்கும் இ.கோலி கிருமி

இறைச்சிகளில் இருக்கும் ஈ.கோலி கிருமி (e-coli bacteria), மனிதர்களின் சிறுநீர் பாதையில் நோய் ஏற்பட காரணமாக இருக்கலாம் என சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சிறுநீர் பாதை தொற்றுக்கு ஆளாகிறார்கள். இதற்கு உணவு பழக்கம் உட்பட பல விடயங்கள் காரணமாக இருக்கலாம் என ஏற்கனவே பல ஆராய்ச்சி தகவல்கள் கூறியுள்ளன. சிறுநீர் பாதையில் தொற்று ஏற்படுபவர்களின் சிறுநீரை சோதித்து பார்த்ததில், 80 சதவீதம் பேருக்கு எஸ்செரிசியா கோலி (Escherichia coli -E coli) கிருமித் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. ஆனால் இது எங்கிருந்து வந்தது என்பதை கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது. இந்த இ.கோலி கிருமிகள் பல வகை உள்ளன.



அங்காடிகளில் விற்கப்படும் இறைச்சிகள் இதற்கு காரணமா என்ற ஆராய்ச்சி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு தகவல்

## அணுகுண்டுகள்

உலகில் 9 நாடுகளிடம் அணு ஆயுதங்கள் இருக்கின்றன. அந்த நாடுகளிடம் எத்தனை அணு ஆயுதங்கள் இருக்கின்றன என்பதை இங்கு நாம் தெரிந்துகொள்ளலாம்.

அமெரிக்கா 7000
ரஷ்யா 6800
பிரான்ஸ் 300
சீனா 260
பிரித்தானியா 215
பாகிஸ்தான் 140
இந்தியா 130
இஸ்ரேல் 80
வடகொரியா 30 முதல் 60 வரை

ஒரு பொன்மொழி

துணிவு என்பது கண் மூடித்தனமாக
அபாயத்திலிருந்து மீள்வது மட்டுமல்ல.
அதனை எதிர்நோக்கி, வெற்றி பெறுவதும்தான்.
- ஜோன்பொல் ரிக்டர்

ஒரு பழமொழி

நல்ல குதிரைக்கு
சாட்டையின் நிழல் போதும்.
- ஜப்பான்

ஒரு வரலாறு

## கடிதத்தின் முகவரி

*1935ம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்தவர் ரூஸ்வெல்ட் பதவி விலகிய சில காலத்தின் பின்னர் அவரது ஆவணப் பிரிவில் உள்ள ஒரு ஃபைலிருந்து ஒரு கடிதம் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது அந்தக் கடிதத்திற்கு அத்தனை மரியாதை இருக்கவில்லை. ஏனெனில் அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது இதுததான்...*

மதிப்பிற்குரிய குடியரசுத் தலைவர் அவர்களே,

முத்திரைகள் சேகரிக்கும் வழக்கத்தைப் பொழுதுபோக்காகக் கொண்டிருப்பவன் நான். அதனால் தாங்கள் எனக்கு ஏதாவது முத்திரைகள் அனுப்பி உதவினால் நல்லது. மேலும் அவற்றை ஒட்டி வைக்க ஒரு அழகான புத்தகமும் அனுப்பி வையுங்கள். ஓய்வு கிடைக்கும் நேரத்தில் நீங்கள் நிச்சயம் எனக்கு உதவுவீர்கள் என்று என் அம்மா கூறினார். ஒரு கடிதமும் எனக்கு எழுதுவீர்களானால், அதை என் அறையிலேயே சட்டம் போட்டு மாட்டி வைத்துக்கொள்வேன். அனைவரையும் விசாரித்ததாகச் சொல்லவும்.



*இதுதான் அந்தக் கடிதம்.*

*ஆனால் பின் வந்த நாட்களில் அந்தக் கடிதத்திற்கு மிகப்பெரிய மரியாதை ஏற்பட்டது. ஏனெனில் அக் கடிதத்தை எழுதிய சிறுவன் வேறு யாருமல்ல, அமெரிக்க ஜனாதிபதியாக உயர்ந்த ஜோன் எஃப் கென்னடிதான்.*

ஒரு பழமொழியும் விளக்கமும்

## ஊரு இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்.

இது பழமொழியே அல்ல. இது ஒரு விடுகதை. ஒரு கோட்டைக்குள் முப்பத்திரண்டு சிப்பாய்கள் என்று சொன்னால் எப்படி 'பல்' என்று பதில் சொல்வோமோ அதுபோலத்தான் இதுவும். விடுகதைகளுக்கு வார்த்தைகளுக்கான பொருள் தேடத்தேவையில்லை. ஒரு செய்தியை பூடகமாக சுற்றிவளைத்து சொல்வது, நையாண்டியும் நக்கலும் கலந்து வெளிப்படுத்துவது , சில நேரம் விளையாட்டுத்தனம் கலந்து இருப்பதுதான் விடுகதைகள். 'சின்ன மச்சான் குனிய வச்சான்' என்றால் காலில் முள் குத்திக்கொண்டால் நாம் அதை குனிந்து பிடுங்குதை குறிப்பிடுவார்கள். முள் வந்து நமக்கு மச்சான் முறையா என்றால் சிரிப்பு வருகிறதுதானே!



அது போலத்தான் இந்த விடுகதையும். இதை பெரும்பாலானவர்கள் பழமொழி என்றே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த எண்ணம் தவறு. இதற்கான நேரடி பொருள் ஊர் இரண்டாகப் பிரிந்து விட்டால் கூத்துக்கட்டும் கலைஞர்களுக்கு கொண்டாட்டம் என்று பொருள் வருகிறது. ஆனால் கூத்து கட்டுபவர்களுக்கு ஊர் ஒன்றுபட்டு இருந்தால்தான் மகிழ்ச்சியாக இருக்கும். அப்போதுதான் நிறைய பார்வையாளர்கள் அவர்களின் கூத்தை ரசிப்பார்கள். அவர்கள் பிற ஊரைச் சேர்ந்தவர்களிடம் இவர்களின் திறமையைச் சொல்லும்போது அவர்களும் தங்கள் ஊருக்கு கூத்தாடிகளை அழைத்துச் சென்று மேடை அமைத்துக்கொடுப்பார்கள்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

NOUVEAU
புதியதோர் உதயம்

# Indian Taste

பாரீஸ் லாச்சப்பலில் ஒரு

## ஆப்பக்கடை


SPÉCIALITÉS

CURRY | TANDOORI | APPAM

OUVERT 7J/7

54 RUE LOUIS BLANC 75010 PARIS

01 42 05 50 50 indiantastefrance@gmail.com




**CAFÉ BHARATH**
67 RUE LOUIS BLANC
75010 PARIS
TÉL : 01 58 20 06 20

**BHARATH**
51 RUE LOUIS BLANC
75010 PARIS
TÉL : 01 42 09 35 84

**COFFEE BHARATH**
13 RUE DES FRÈRES LUMIÈRE
92110 CLICHY
TÉL : 01 47 37 91 41

# முகாபேயின் 37 ஆண்டு ஆட்சிக்கு முடிவு

## சிம்பாவே அதிபராக புதியவர் பதவி ஏற்றார்

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சிம்பாவே நாட்டின் புதிய அதிபராக எமர்சன் நாங்காக்வா பதவி ஏற்றுள்ளார். இதன்மூலம், கடந்த 37 ஆண்டு காலமாக சிம்பா



வேயின் அசைக்க முடியாத தலைவர் என்று கருதப்பட்ட 93 வயது அதிபர் ரொபர்ட் முகாபேயின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. சிம்பாவேயின் அதிபராக 1980 முதல் தொடர்ந்து 37 ஆண்டுகள் ரொபர்ட் முகாபே (93 வயது) பதவி வகித்து வந்தார். தனக்கு பின்னர் தனது 52 வயதான மனைவி கிரேசை அதிகாரத்திற்கு கொண்டு வர முயற்சித்த முகாபே, அதற்கு இடையூறாக இருந்த துணை அதிபர் நாங்காக்வாவை பதவி நீக்கம் செய்தார். இதனால், அவர் நாட்டை விட்டு வெளியேறினார். இந்த விவகாரத்தில் இராணுவ தலைமை தளபதி ஜெனரல் சிவெங்கா, நாங்காக்வாவுக்கு ஆதரவாக இருந்தார்.




வீதியில் எந்தவித திருடர் பயமுமின்றி பல மில்லியன் டொலர் பணத்தை ஒரு சிறுவனால் கூட எடுத்துச் செல்லக்கூடிய நாடாக சிம்பாவே இருக்கின்றது.

நவம்பர் 15ம் திகதி ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியது. முகாபே வீட்டு சிறையில் அடைக்கப்பட்டார். மக்களும், ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் முகாபேக்கு எதிராக போர்க்கொடி தூக்கினர். இதனால், முகாபே பதவி விலகினார். புதிய அதிபர் பதவிக்கு முன்னாள் துணை அதிபர் எமர்சன் நாங்காக்வாவை இராணுவமும், ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்மொழிந்தனர். அவர் புதிய அதிபராக தேர்வு செய்யப்பட்டார்.

ஹராரேயில் உள்ள தேசிய விளையாட்டு மைதானத்தில் நடந்த பதவி ஏற்பு விழாவில் ஏராளமான வெளிநாட்டு பிரதிநிதிகள், எதிர்க்கட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர். ஆனால், பதவி விலகிய முகாபே மட்டும் கலந்து கொள்ளவில்லை. பதவி ஏற்பு விழா நடந்த இடம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் மைதானத்தில் திரண்டு நாங்காக்வாவை வாழ்த்தினர். இதன் மூலம் 37 ஆண்டு காலம் சிம்பாவேயின் அதிகாரத்தை கையில் வைத்திருந்த முகாபேயின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

முகாபே மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் குவிந்துள்ள நிலையில், அது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட மாட்டாது என்று ஆளும்கட்சி சார்பில் உறுதி அளிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியானது. முகாபே மற்றும் அவரின் குடும்பத்தினருக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆளும் கட்சியின் வாக்குறுதியின் அடிப்படையிலேயே முகாபே



பதவி விலகியதாகவும் கூறப்படுகிறது. இதற்கு பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். முகாபே வயதானவர். அவர் செய்த குற்றங்களுக்காக அவரை தண்டிக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. 93 வயதானவரை எப்படி தண்டிக்க முடியும்? ஆனால் அவரது மனைவி மற்றும் உறவினர்கள் செய்த குற்றங்களுக்கு பதில் சொல்லியே ஆகவேண்டும் என்று தெரிவித்தனர்.

ரொபர்ட் கேப்ரியல் முகாபே (Robert Gabriel Mugabe) 1980 முதல் இன்று வரை சிம்பாப்வே நாட்டின் தலைவராக உள்ளார். 1980 முதல் 1987 வரை பிரதமராக பதவி வகித்தார். 1987 முதல் கடந்த வாரம் பதவி விலகும் வரை அந்நாட்டின் குடியரசுத் தலைவராக பதவி வகித்துள்ளார். 1960களில் ஆபிரிக்காவில் விடுதலைப் போராட்ட வீரராக இருந்த முகாபே, சிம்பாவே விடுதலை பெற்று ஆபிரிக்க மக்கள் இவரை நாயகராகப் போற்றினர். இதுவே இவரை இத்தனை காலம் ஆட்சியில் நீடித்திருக்க வைத்தது. ஆனால் அந்த நாட்டை பொருளாதார ரீதியில் மிகமோசமாக கட்டத்திற்கு கொண்டுசென்றுவிட்டார். இவரின் பொருளாதாரக் கொள்கைகளும், இரண்டாம் கொங்கோ போரில் செலவான குறுக்கீடலும் சிம்பாப்வேயின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாகின. உலகின் மிகவும் மோசமான மிகக்குறைந்த நாணயப் பெறுமதி இவர்கள் நாட்டு நாணயத்திற்கே உள்ளது. வீதிகளில் பல மில்லியன் சிம்பாவே டொலர்களுடன் ஒருவர் எந்தவித அச்சமுமின்றி சென்றுவர முடியும். ஏனெனில் அந்தப் பணத்தை யாரும் கொள்ளையிடப்போவதில்லை. ஆனால், ஒரு அமெரிக்க டொலர் நாணயத்துடன் யாரும் அத்தனை இலகுவில் நடமாடமுடியாது. (ஒரு அமெரிக்க டொலர் – 35,000,000,000,000,000 சிம்பாவே டொலர்).

தற்போது புதிய அதிபராகப் பொறுப்பேற்றிருக்கும் எமர்சன் நாங்காக்வாவிற்கு சிம்பாவேயின் பொருளாதாரத்தை நிமிர்த்தி எடுப்பதே பெரும்பாடாக இருக்கப்போகின்றது.

# ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும் சவுதி அரேபியா

## மத்திய கிழக்கு நாடுகளில் மீண்டும் ஒரு போருக்கான ஆயத்தமா?

ஆயுதக் கொள்வனவில் உலகில் முதல் இடத்தை வகிக்கும் சவூதி அரேபியா, அமெரிக்க நிறுவனங்களிடம் இருந்து 110 பில்லியன் டொலர் மதிப்பில் ஆயுதம் வாங்குவதற்கு உடன்படிக்கை செய்துள்ளது. அமெரிக்காவின் பிரபலமான இரண்டு நிறுவனங்களிடம் இருந்து சவுதி அரேபியா 110 பில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுதங்கள் வாங்குவதற்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆனால் குறித்த இரு நிறுவனங்களும் வெளியான இந்த தகவலை மறுத்துள்ளன. அத்துடன், அமெரிக்க அரசாங்கமும் உறுதியான பதிலை வெளியிட மறுத்துள்ளது.

எனினும், ஈரான் மற்றும் சவுதி இடையே கடும் நெருக்கடி நிலை உருவாகியுள்ள சூழலில் இந்த தகவல் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. அமெரிக்காவின்



ரேய்த்தியான் மற்றும் போயிங் நிறுவனங்களிடம் ஆயுதங்களை சவுதி வாங்க உள்ளது. இதன் முதற்கட்டமாக அமெரிக்க ஆயுதக் கிடங்குகளில் உள்ள ஆயுதங்களை 7 பில்லியன் டொலர் மதிப்பில் பெறுவதற்கும் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

யேமன் நாட்டில் இடம்பெறும் உள்நாட்டு கலவரங்களுக்கும், பொது மக்களின் இழப்புக்களுக்கும் சவுதியே காரணம் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அத்துடன், சவுதியின் தாக்குதல்களுக்கு தக்க பதிலடி தரப்படும் என ஈரான் தெரிவித்துள்ளது. இந்நிலையில், பெருந்தொகைக்கு ஆயுதங்களை சவுதி கொள்முதல் செய்ய இருப்பதாக வெளியான தகவல், மத்திய கிழக்கு நாடுகளில் மீண்டும் ஒரு போருக்கான ஆயத்தமாக இருக்கலாம் என நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# லிபியாவில் அடிமைகளாக விற்கப்படும் அகதிகள்!

வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளில் இருந்து தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர். வட ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான லிபியாவில் கடந்த 2011ம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கடாஃபியின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகு அங்கு அதிகாரப் போர் உச்சகட்டத்தை எட்டியுள்ளது. போராளிக் குழுக்களின் மோதலில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து தப்பித்து உயிரை பாதுகாத்து கொள்ள லிபியாவில் வறுமை நிலையில் வாடும் மக்களில் பலர் ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் தேடி செல்கின்றனர். மேலும், உள்நாட்டுப் போரால் நிலைகுலைந்துள்ள ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும் இடம்பெயர்கின்றனர். பல்வேறு நாடுகளுக்கு கடல் கடந்து செல்லும் இந்த அகதிகள், ரப்பர் படகுகள் போன்றவற்றில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்கின்றனர். ஆபிரிக்க நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்கு செல்லும் அகதிகள் லிபியா வழியாக செல்கின்றனர். அப்போது லிபியாவில் உள்ள கொள்ளையர்களால் சிறை பிடிக்கப்பட்டு அடிமைகளாக விற்கப்படுகின்றனர். அவர்கள் 400–600 டொலருக்கு விற்கப்படுகின்றனர்.

இதனை பத்திரிக்கையாளர் ஒருவர் காணொளி எடுத்துள்ளார். மக்களை அடிமைகளாக விலைக்கு

# மபியாவின் பலமிக்க தலைவன் மரணம்

இத்தாலியில் பலமிக்க போதைப் பொருள் கடத்தல் கும்பல் தலைவனாகவும் 20 நூற்றாண்டின் மபியாவின் பலம் மிக்க தலைவனாகவும் திகழ்ந்த சல்வதோரே டோட்டோ ரினா (Salvatore 'Toto' Riina), பார்மா நகரில் உள்ள



சிறை மருத்துவமனையில் மரணம் அடைந்தார். அவருக்கு வயது 87. அவர் 26 ஆயுள் தண்டனைகளை அனுபவித்து வந்ததாக தகவல்கள் கூறுகின்றன. தென் அமெரிக்காவில் இருந்து போதைப் பொருட்களைக் கடத்தி வருவதுடன், மபியாவின் வழக்குகளை விசாரித்த இரு நீதிபதிகள் உட்பட 12 பேரின் படுகொலைக்கு காரணமானவர். இரண்டாம் உலகப் போருக்குப் பின்ன இத்தாலியில் மபியாவின் முக்கிய தலைவராக இவர் உருவெடுத்தவர் 1993ம் ஆண்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வரலாற்றிலேயே மிக அதிக விலைக்கு ஏலம் போன ஓவியம்

லியானார்டோ டா வின்சியின் கடைசி படைப்பு எனக் கூறப்படும் ஓவியம் 450.3 மில்லியன் டொலர்களுக்கு ஏலம் போனது. பிரபல ஏல நிறுவனமான கிறிஸ்டீஸ், லியானார்டோ டா வின்சியின் கடைசி ஓவியப் படைப்பை ஏலம் விட்டது. அரிய வகை ஓவியமாகக் கருதப்படும் இதை, ஏலம் எடுக்க 4 போட்டியாளர்கள் தொலைபேசி மூலம் ஏலம் கோரினர். 200 மில்லியன் டொலரில் தொடங்கி ஏலத் தொகை 400 மில்லியனை எட்டிய போது அரங்கமே கரகோசத்தால் அதிர்ந்து போனது. பின், இறுதி விலை



யாக சுமார் 450 மில்லியன் டொலருக்கு அந்த ஓவியம் ஏலம் போனது. இங்கிலாந்து மன்னர் முதலாம் சார்லஸ் சேகரித்து வைத்த கலைப்படைப்புக்களில் ஒன்றாக இருந்த இந்த ஓவியம், 1950ல் வெறும் 45 ஈரோ மதிப்புக்கு விற்கப்பட்டது. இன்று வரலாற்றிலேயே மிக அதிக விலைக்கு ஏலம் போன கலைப்படைப்பு இதுவாகும்.

# கம்போடிய எதிர்க்கட்சி கலைப்பு

கம்போடியா நாட்டில் பிரதான எதிர்க்கட்சியான கம்போடியா தேசிய மீட்பு கட்சியை அந்த நாட்டின் உச்ச நீதிமன்றம் கலைத்து விட்டது. கம்போடியா நாட்டில் கடந்த 2013ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பிரதமர் ஹன்சென் கட்சி வெற்றி பெற்றது.

→ 20

ஆனால் இதை எதிர்க்கட்சியான கம்போடியா தேசிய மீட்பு கட்சி ஏற்கவில்லை. தேர்தல் முறைகேட்டை கண்டித்தும், தனி அமைப்பு மூலம் விசாரணை நடத்த வலியுறுத்தியும் சிறை நிரப்பும் போராட்டத்தை அறிவித்தது. இதன்படி தலைநகர் நாம்பென்னில் உள்ள பூங்காவில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் திரண்டு அரசுக்கு எதிராக தொடர்ந்து போராடினார்கள். இந்நிலையில், தற்போது அக்கட்சி கலைக்கப்பட்டுள்ளது.

கம்போடியாவில், கம்போடிய மக்கள் கட்சி ஆட்சி நடக்கிறது. பிரதமராக ஹன்சென் உள்ளார். கம்போடியாவின் தற்போதைய ஆளும் கட்சி தான், 1978ம் ஆண்டு கெமர்ரூச் கொடுங்கோல் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்தது குறிப்பிடத்தக்கது.

## நவீன ஏவுகணை சீனா 8வது முறையாக சோதனை!

கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் ஏவுகணையை சீனா 8வது முறையாக அடுத்த ஆண்டு (2018) மீண்டும் ஏவி பரிசோதிக்கவுள்ளது. சீனா டாங்பெங்-41 என்ற ஏவுகணையை தயாரித்து 2012ம் ஆண்டில் முதன் முறையாக சோதனை நடத்தியது. இது 12 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் வரை பாய்ந்து சென்று தாக்கும் திறன் கொண்டது. இதன் மூலம் 10 அணுகுண்டுகளை ஒரே நேரத்தில் சுமந்து சென்று தாக்குதல் நடத்த முடியும். இவை வெவ்வேறு இலக்குகளை குறி வைத்து தாக்கும் திறன் கொண்டவை. கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் திறன் கொண்ட இந்த ஏவுகணை ஏற்கனவே 7 முறை பரிசோதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் 8வது தடவையாக அடுத்த ஆண்டு (2018) மீண்டும் ஏவி பரிசோதிக்கப்படவுள்ளது. இத்தகவலை சீன இராணுவ உயர் அதிகாரி குயாங்யூ தெரிவித்துள்ளார். இந்த சீன ஏவுகணை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை குறி வைத்து தயாரிக்கப்பட்டுள்ளதாக ஏற்கனவே ரஷ்ய நிபுணர்கள் தெரிவித்து இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க வரலாற்றில் அதிக தண்டனை!

குழந்தைகளை கடத்தி பாலியல் ரீதியாகத் துன்புறுத்தி, இணையதளத்தில் குழந்தைகளை விற்று வந்த 31 வயது குற்றவாளிக்கு 472 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க வரலாற்றில், மனிதர்களை கடத்தி விற்கும் குற்றவாளிகளிலேயே அதிக பட்சமாக தண்டனை விதிக்கப்பட்டது இந்த வழக்கில்தான். மனிதர்களைக் கடத்தி விற்பது, குழந்தைகளை பாலியல் ரீதியாக துன்புறுத்துவது, குழந்தைகளை பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவது, கடத்துதல் என சுமார் 30 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட கொலரோடோவைச் சேர்ந்த பிரோக் ஃப்ராங்லின், தனது மீத வாழ்நாளை சிறையிலேயேதான் கழிக்க வேண்டும்.

400 ஆண்டுகளுக்கும் மேல் சிறைத் தண்டனை விதித்திருப்பது, நாட்டில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான குற்றச்சாட்டுகளை எந்த வகையிலும் பொறுத்துக்கொள்ள மாட்டோம் என்பதை உணர்த்தவே என்று கொலரடோ நீதித் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாங்கும் நிகழ்வு அனைவரிடமும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுகின்றனர். இதனை பல உலக தலைவர்கள் எதித்து வருகின்றனர்.

இதேவேளை, லிபியாவில் பிடிபடும் அகதிகள் மீது வன்முறைகள் ஏவப்படுவதாகவும், பெண் அகதிகள் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் ஆபிரிக்க ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் தீவிரவாத தாக்குதல், வறுமை போன்ற காரணங்களால் இலட்சக்கணக்கான பொது மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகச் செல்கின்றனர். இவர்களில் பலர் லிபியா வழியாகச் செல்லும் நிலை உள்ளது. இவர்களை சட்டவிரோதப் பயணம் மேற்கொள்ள அனுமதிக்காமல் லிபியாவில் உள்ள முகாம்களில் பராமரிக்கத் தேவையான நிதி உதவியை ஐரோப்பிய ஒன்றியம் அளித்துவருகிறது. இவ்வாறு சுமார் 43 ஆயிரம் அகதிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் இந்த அகதிகள் மீது லிபிய அதிகாரிகள் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளதாகவும் பெண்களை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்துவதாகவும் ஆபிரிக்க ஒன்றியம் வேதனை தெரிவித்துள்ளது.

## பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரிப்பு ஏற்படும் உயிரிழப்புகள் குறைவடைவு

உலகம் முழுவதும் பயங்கரவாதத்தால் ஏற்படும் உயிரிழப்புகள், 2015ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016ம் ஆண்டில் குறைவடைந்துள்ளன என பூகோள பயங்கரவாதச் சுட்டி வெளிப்படுத்தியுள்ளது. அவுஸ்திரேலியாவின், பொருளாதாரத்துக்கும் சமாதானத்துக்குமான நிறுவகத்தால் தயாரிக்கப்படும் இவ்வறிக்கை, 2000ம் ஆண்டு முதல் தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வறிக்கையின்படி, பயங்கரவாதத்தின் விளைவாகக் கடந்தாண்டில், 25,673 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. 2014ம் ஆண்டில், உலகில் பயங்கரவாதம் உச்சத்தில்



காணப்பட்ட போது ஏற்பட்ட உயிரிழப்புகளோடு ஒப்பிடும் பொது இது, 22 சதவீதம் குறைவானதாகும்.

அத்தோடு, 2014ம் ஆண்டின் பின்னர், 2015ம் ஆண்டில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறைவடைந்திருந்த நிலையில், 2016ம் ஆண்டிலும், உயிரிழப்புகள் மீண்டும் குறைவடைந்துள்ளன. சிரியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில், உயிரிழப்புகள் குறைவடைந்துள்ளன. அத்தோடு, மிக முக்கியமான நாடாக, நைஜீரியா காணப்படுகிறது. 2015ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கடந்தாண்டில், போகோ ஹராம் ஆயுதக்குழுவால் நைஜீரியாவில் ஏற்படுத்தப்பட்ட உயிரிழப்புகள், 80 சதவீதத்தால் குறைவடைந்தன. ஆனால், 77 நாடுகளில், குறைந்தது ஒரு தாக்குதலாவது மேற்கொள்ளப்பட்டுள்ளது. பூகோள பயங்கரவாதத் தரவுத்தளத்தின் 17 ஆண்டுகால வரலாற்றில், மிக அதிக எண்ணிக்கையான நாடுகள் பாதிக்கப்பட்ட சந்தர்ப்பமாக இது காணப்படுகிறது. ஆகவே, உயிரிழப்புகள் குறைவடைந்தாலும், பயங்கரவாதம் பரவுகின்ற, ஆபத்தான போக்கை, இவ்வறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

## இந்தியாவின் கனவில் ஆப்பு வைக்கும் அமெரிக்கா முடிவு!

ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு (அமெரிக்கா, பிரான்ஸ், சீனா, ரஷ்யா, பிரித்தானியா) கொடுக்கப்பட்டிருக்கும் முடிவுகளை இரத்து செய்யும் (வீட்டோ) அதிகாரத்தில் மாற்றங்கள் செய்வதற்கும், அந்த அதிகாரத்தை பிற நாடுகளுக்கும் விரிவுபடுத்த அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், 21ம் நூற்றாண்டின் சூழலுக்கு ஏற்ப ஐ.நா. பாதுகாப்பு சபையில் ஓரளவுக்கு மாற்றங்கள் செய்வதை தங்களது நாடு வரவேற்பதாகவும், ஆனால், மிகப் பெரிய மாற்றங்களையோ, வீட்டோ அதிகாரங்களை விரிவாக்குவதையோ அமெரிக்கா எதிர்ப்பதாகத் தெரிவித்தார். ஐ.நா. பாதுகாப்பு சபையில் வீட்டோ அதிகாரத்துடன் நிரந்தர உறுப்பினராவதற்கு இந்தியா கடுமையாக முயன்று வருவது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நீதிமன்ற நீதிபதியாக மீண்டும் இந்தியர்!

சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதியாக, ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற தல்வீர் பண்டாரி (70) மீண்டும் தேர்வு செய்யப்பட்டார். கடைசி நேரத்தில் பிரித்தானியா தனது வேட்பாளரைத் திரும்பப் பெற்றது. இதன் மூலம் ஐ.நா. பொதுச் சபையில் மொத்தமுள்ள 193 வாக்குகளில் 183 வாக்குகள் இந்தியாவுக்குக் கிடைத்தது. ஐ.நா. பாதுகாப்பு சபையில் மொத்தமுள்ள 15 நாடுகளும் இந்தியாவை ஆதரித்தன.

முன்னதாக, நடைபெற்ற 11 சுற்று வாக்கெடுப்பில் ஐ.நா. பொதுச் சபையில் இந்தியாவின் தல்வீர் பண்டாரிக்கு பெரும்பான்மை ஆதரவு இருந்தது. ஆனால், ஐ.நா. பாதுகாப்பு சபையில் பிரித்தானிய வேட்பாளர் கிறிஸ்டோபர் கிரீன்வுட் பெரும்பான்மை பெற்று வந்தார். இரு அவைகளிலும் பெரும்பான்மை பெரும் வேட்பாளர்தான் வெற்றி பெறுவார் என்பதால் 11 சுற்றுகள் வரை வாக்கெடுப்பு நடைபெற்றது. எனினும், தீர்வு கிடைக்கவில்லை.



இதையடுத்து, இந்திய வேட்பாளரைத் தோற்கடிக்கும் நோக்கில் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தை நடத்த பிரித்தானியா முயற்சித்தது. ஆனால், அதற்கு பலன் கிடைக்கவில்லை. இதையடுத்து, தங்கள் வேட்பாளரைத் திரும்பப் பெறுவதாக பிரித்தானியா அறிவித்தது. இதையடுத்து, இந்தியாவின் தல்வீர் பண்டாரி இரு அவைகளிலும் பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்றார். அவர் அடுத்த 9 ஆண்டுகளுக்கு சர்வதேச நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றுவார்.

இந்திய உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதியான பண்டாரி, இப்போது 2வது முறையாக சர்வதேச நீதிமன்ற நீதிபதியாகத் தேர்வு பெற்றுள்ளார். அத்துடன், ஐ.நா. பாதுகாப்பு சபையில் உறுப்பினராக உள்ள ஒரு நாட்டை (பிரித்தானியா), அதில் உறுப்பினராக இல்லாத ஒரு நாடு (இந்தியா) சர்வதேச நீதிமன்ற நீதிபதி பதவிக்கான தேர்தலில் வெல்வது இதுவே முதல் முறையாகும். மேலும், சர்வதேச நீதிமன்றத்தில் பிரித்தானியாவைச் சேர்ந்த நீதிபதி ஒருவர் இடம்பெறாமல் போவதும் இதுதான் முதல் முறை.

நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் செயல்பட்டு வரும் சர்வதேச நீதிமன்றத்தில் மொத்தம் 15 நீதிபதிகள் பணியாற்றி வருகின்றனர். இதில் ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை 5 நீதிபதிகள் சுழற்சி முறையில் புதிதாகத் தேர்வு செய்யப்படுவார்கள். ஐ.நா. பொதுச் சபையில் உள்ள 193 உறுப்பு நாடுகளும், ஐ.நா. பாதுகாப்பு சபையில் உள்ள 15 நாடுகளும் வாக்களித்து இந்த நீதிபதிகளைத் தேர்வு செய்வார்கள்.

ஐ.நா. பொதுச் சபையில் குறைந்தபட்சம் 97 உறுப்பு நாடுகளின் வாக்குகளையும், பாதுகாப்பு சபையில் குறைந்தபட்சம் 8 உறுப்பு நாடுகளின் வாக்குகளையும் ஒரே நேரத்தில் பெறுபவர்கள்தான் சர்வதேச நீதிமன்றத்துக்கு நீதிபதியாகத் தேர்வு செய்யப்படுவார்கள்.

## அர்ஜென்ரீனா கடற்படையின் நீர்மூழ்கி மாயமானது!

தென் அமெரிக்க நாடான அர்ஜென்ரீனாவின் கடற்படைக்குச் சொந்தமான நீர்மூழ்கி கப்பல் ஒன்று 44 கடற்படையினருடன் மாயமாகியுள்ளது. அந்நாட்டு கடற்படைக்குச் சொந்தமான நீர்மூழ்கி ரோந்து கப்பலான சான்ஜ யர்னஸ், கடந்த 17ம் திகதி மார்டெல் பிளாடா கடற்படைத் தளப் பகுதியில் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தது. அந்த கப்பலில்



பணியாளர்கள் மற்றும் கடற்படையினர் என மொத்தம் 44 பேர் இருந்தனர். தெற்கு அத்திலாந்திக் சமுத்திரத்தில் சென்றுகொண்டிருந்த போது திடீரென கப்பல் மாயமானது. தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துடனான கப்பலின் தொடர்பும் துண்டிக்கப்பட்டது. இதன் காரணமாக அந்தக் கப்பலைத் தேடும் பணியில் அர்ஜென்ரீனா கடற்படை முழுமையாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. காணாமல்போன கப்பலில் இருந்து இரு முறை சமிக்கைகள் வந்தபோதும் அதன் இருப்பிடத்தைக் கண்டறியமுடியவில்லை.

அந்தப் பகுதியில் நிலவிய மோசமான தட்ப வெப்பநிலையின் காரணமாக கப்பல் மாயமாகி

# சிரியப் போரில் மூன்றரை இலட்சம் பேர் பலி

## ரஷ்யாவில் ஆசாத் – புட்டின் பேச்சுவார்த்தை

சிரியாவில் கடந்த 2011ம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கிய போர் 7 வருடங்களுக்கும் மேலாக நீடித்து வருகின்றது. இந்த ஏழு வருட காலப்பகுதியில் சுமார் 3 இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாக சிரிய மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது. இதில் 119,000 சிரிய ஆதரவுப் படையினரும் (62 ஆயிரம் சிரியப் படை, 1556 ஹிஸ்புல்லா, 59 ஆயிரம் சிரிய ஆதரவுப் போராளிகள் உள்ளடங்கலாக), 62,200 ஜிகாதிஸ்ட் போராளிகளும் அடங்கியுள்ளனர். அத்துடன் இந்தப் போரில் கொல்லப்பட்ட ஒரு இலட்சத்து 2618 அப்பாவிப் பொது மக்களில் 19 ஆயிரம் குழந்தைகளும், 12 ஆயிரம் பெண்களும் அடங்கியுள்ளனர்.



கடந்த வாரம் எடுக்கப்பட்ட புட்டினும் ஆசாத்தும் கட்டியணைத்திருக்கும் இந்தப் படம், இப்போது பரவலாகப் பேசப்படுகின்றது. சிரியாவிற்கு ரஷ்யாவின் ஆட்சியாளர் ஆசாத்திற்கு புட்டினின் ஆதரவை வெளிப்படையாகக் காட்டும் படம் இதுவென்று உலக ஊடகங்கள் வர்ணிக்கின்றன.

இதேவேளை, சிரியாவின் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் அமைதி மாநாடு ஒன்றை நடத்தும் திட்டத்தை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் வெளியிட்டுள்ளார். ஈரான் ஜனாதிபதி ஹஸன் ரூஹானி மற்றும் துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவானை சந்தித்த பின்னரே புட்டின் இந்த அறிவிப்பை வெளியிட்டார். இந்த மூன்று தலைவர்களும் கூட்டாக வெளியிட்ட அறிவிப்பில், சிரிய அரசு மற்றும் எதிர் தரப்புகளை இந்த மாநாட்டில் பங்கேற்க வலியுறுத்தியுள்ளனர். இந்த மாநாடு நடத்தப்படுவதற்கான திகதி அறிவிக்கப்படவில்லை. இது ரஷ்ய கருங்கடல் நகரான சொச்சியில் இடம்பெறவுள்ளது. எனினும் அடுத்த வாரம் ஐ.நா மத்தியஸ்தத்தில் ஜெனீவாவில் புதிய சுற்று அமைதிப் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறவிருப்பதோடு இதற்கான ஏற்பாடாக சிரிய அரச எதிர்ப்புக் குழுக்கள் சவூதி அரேபியாவில் கூடியுள்ளன.

எனினும், சிரியாவின் இராஜதந்திர எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முக்கிய சக்தியாக, ரஷ்யா மாறியுள்ளதாகக் கூறப்படுகின்றது. சிரிய ஜனாதிபதி பசார் அல்–ஆசாத், ரஷ்யாவுக்கு பயணம் மேற்கொண்டு, சொச்சியிலுள்ள விடுதியொன்றியில் வைத்து, கடந்த 20ம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதி புட்டினைச் சந்தித்திருந்தார். அச்சந்திப்பு இடம்பெற்று இரண்டு நாட்களின் பின்னர், துருக்கி, ஈரான் ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகளை, ஜனாதிபதி புட்டின் சந்தித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதன்போது, சொச்சியிலேயே, சிரியாவின் சமாதானத்துக்கான ஒன்றுகூடலை நடத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

சிரியாவின் தேசிய நிகழ்ச்சிநிரல் என்ற பிரதான பிரச்சினை குறித்து, இந்த ஒன்றுகூடலில் ஆராயப்படவுள்ளது. புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவது, அதன் மூலமாகத் தேர்தல்களை நடத்துவது உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்படும் என ஜனாதிபதி புட்டின் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்த முயற்சிகள் வெற்றியளிக்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. எனினும், சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் கிட்டத்தட்ட முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டுவிட்ட நிலையில், அரசாங்கப் படையின் ஆதிக்கம், உயர்வாகக் காணப்படுகிறது. இது, முன்னரிருந்த நிலைமையை விட வேறானதாகும். எனவே, இம்முறை மேற்கொள்ளப்படும் முயற்சிகள், அதிக கவனத்தை ஈர்த்துள்ளன.

அதைவிட, இதற்கு முன்னைய முயற்சிகளில் பெரும்பாலானவை, ஐ.அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளாலேயே முன்னெடுக்கப்பட்டன. இப்போது இம்முயற்சியை மேற்கொள்ளும் ரஷ்யா, சிரிய ஜனாதிபதி ஆசாத்தின் நெருங்கிய தோழமை நாடாகும். எனவே இம்முறை, இதுகுறித்த எதிர்பார்ப்புகள் காணப்படுகின்றன.

எனினும், இப்பிரச்சினையில் முக்கியமானதொரு தடங்கல் காணப்படுகிறது. சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுததாரிகள் தோற்கடிக்கப்பட்டாலும், எதிர்க்கட்சிகளின் ஆயுதக்குழுவின் ஆதிக்கம் இன்னமும் காணப்படுகிறது. எதிரணிகளைப் பொறுத்தவரை, சர்வாதிகாரி



என அவர்கள் கருதுகின்ற ஜனாதிபதி ப'ார் அல்–அசாட் பதவி விலக வேண்டும். இந்நிலைப்பாட்டிலிருந்து எதிரணிகள் பின்வாங்குமென எதிர்பார்ப்புக் காணப்பட்டாலும், ஜனாதிபதி ஆசாத் விலக வேண்டுமென்ற நிலைப்பாட்டியில் உறுதியாக இருப்பதாக, எதிரணிகள் தற்போது அறிவித்துள்ளன. எனவே, எதிரணிகளைச் சமாளிப்பதென்பது, ரஷ்யாவுக்கும் சிரியாவுக்கும் சவாலாக அமையுமெனக் கருதப்படுகிறது.

இருக்கலாம் என வல்லுநர்கள் கருதுகின்றனர். தொழில்நுட்ப கோளாறு காரணமாக கப்பலை தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. கடந்த ஒரு வாரமாக நீடிக்கும் தேடுதல் பணியில் எந்த முன்னேற்றமும் இல்லாததால், அக்கப்பலில் உள்ள 44 பேர்களின் கதி என்ன என்ற அச்சம் எழுந்துள்ளது. அர்ஜென்ரீனா கடற்படை அதிகாரிகள் கப்பலை தேடும் பணியில் தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர். அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் சிலி நாட்டு அரசுகளும் கப்பலை தேடும் பணியில் உதவி செய்து வருகின்றனர்.

## ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடையே பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்து

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடையே பாதுகாப்புத் துறை ரீதியான ஒப்பந்தம் கடந்த 13ம் திகதி கையெழுத்தானது. ஐரோப்பிய தஒன்றியத்தைச் சேர்ந்த 23 நாடுகளின் பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் இதில் கையெழுத்திட்டனர். உறுப்பு நாடுகளின் பாதுகாப்புப் படைகளிடையே ஒருங்கிணைப்பு, மேம்பாடு ஆகியவை தொடர்பான பேச்சுவார்த்தைகள் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், இதற்கான விதிமுறைகள், முதல் கட்ட நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட விவகாரங்களில் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஸ்பெயின் பாதுகாப்புத்துறை அமைச்சர் மரியா டொலோரஸ் கூறுகையில், இந்த உடன்படிக்கை ஐரோப்பிய ஒன்றிய அமைப்பின் மிக முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாகும். பாதுகாப்புப் படையினர், தளவாடங்கள், பயிற்சி, பாதுகாப்புக் கட்டுமானங்கள் உள்ளிட்ட துறைகளில் உறுப்பு நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பை அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பு உறுதி செய்கிறது. அந்த ஏற்பாடு தொடரும். அதற்குத் துணையாக இந்த ஒப்பந்தம் செயல்படும் என்றார்.

இவ் ஒப்பந்தம் குறித்து அவர் மேலும் கூறுகையில், பாதுகாப்புத் துறைக்காக உறுப்பு நாடுகள் ஒதுக்கும் நிதியில் 20 சதவீத தொகை புதிய தளவாடங்கள் வாங்குவதற்காக செலவிடப்படும் என்றும், தொழில்நுட்ப ஆராய்ச்சி–மேம்பாட்டுக்கு 2 சதவீதம் ஒதுக்கப்படும் என்றும் அந்த உடன்படிக்கை தெரிவிக்கிறது.

பல்வேறு உறுப்பு நாடுகளிடம் ஆளில்லா தாக்குதல் விமானங்கள், பீரங்கிகள் உள்ளிட்ட சில வகை பாதுகாப்பு தளவாடங்கள், தொழில்நுட்பங்கள் தற்போது இல்லை. ஆனால் இந்த ஒப்பந்தம் மூலம் எதிர்காலத்தில் பாதுகாப்புத் தேவைகளை முன்னிட்டு அதிநவீன தொழில்நுட்பங்களும் தளவாடங்களும் கிடைக்கச் செய்ய முடியும். இதன்படி, இராணுவ மருத்துவமனைகள் போன்ற வசதிகளும் உருவாக வாய்ப்புள்ளது. ஒப்பந்த விதிமுறைகளை அனைத்து உறுப்பு நாடுகளும் பின்பற்றுகின்றனவா என்று ஆண்டுதோறும் ஆய்வு மேற்கொள்ளப்படும். டென்மார்க், அயர்லாந்து, உள்ளிட்ட சில நாடுகள் இதில் இன்னும் கையெழுத்திட முடிவு செய்யவில்லை. ஆனால் அந்த நாடுகள் பின்னர் இதில் இணைந்து கொள்ளலாம். உறுப்பு நாடுகள் அல்லாத நட்பு நாடுகளும் குறிப்பிட்ட தேவைக்கு ஏற்ப ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்பில் தங்கள் பங்களிப்பைச் செய்ய முடியும் என்றார் அவர்.

ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு பிரித்தானியா வெளியேறுவதாக அறிவித்துள்ளது. ஆயினும் பாதுகாப்பு விவகாரங்களில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு பிரித்தானியாவின் பங்களிப்பு தொடரும்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கென தனி பாதுகாப்புப் படையை உருவாக்கும் விதத்தில் எந்த உடன்படிக்கை ஏற்படுவதையும் பிரித்தானியா விரும்பியதில்லை. எனவே ஐரோப்பிய இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை ஆரம்பம் முதலே பிரித்தானியா எதிர்த்து வந்தது.

ஐரோப்பிய ஒன்றிய அமைப்பில் உக்ரைன் அங்கமாகச் சேர்க்க பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. வர்த்தக ஒப்பந்தம் போன்ற ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், உக்ரைனின் கிரீமியா பகுதியை ரஷ்யா 2014 இல் இணைத்துக் கொண்டது. மேலும், ரஷ்ய எல்லையை யொட்டிய உக்ரைன் பகுதிகளில் நடைபெற்று வரும் கிளர்ச்சிக்கு ரஷ்யா உதவி வருகிறது. இந்தச் சூழ்நிலையில், தற்போதைய இராணுவ ஒப்பந்தம் முக்கியத்துவம் பெறுகிறது.

## யோகா ஒரு விளையாட்டு

யோகாவை விளையாட்டில் ஒரு பகுதியாக சவுதி அரசு அதிகாரபூர்வமாக அங்கீகரித்துள்ளது. இந்தியப் பிரதமர் மோடி பதவியேற்ற முதல் யோகாவுக்கு பெரும் முக்கியத்துவம் அளித்து வருகிறார். அவரது கோரிக்கையை ஏற்று யூன் 21ம் திகதியை சர்வதேச யோகா தினமாக ஐ.நா. அங்கீகரித்துள்ளது. சீனா,



அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் யோகாவை மக்கள் ஆர்வமாக செய்து வருகின்றனர். இந்நிலையில், சவுதி அரசும், யோகாவை சிறந்த பயிற்சியாக ஏற்றுள்ளது. இதனால், யோகா விளையாட்டில் ஒரு பகுதியாக அங்கீகரித்துள்ளது. சவூதி அரேபியாவில் வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சின் கீழ் யோகா ஒரு விளையாட்டு நடவடிக்கையாக அங்கீகரிக்கப்பட்டது.

## அமெரிக்காவில் இன வெறுப்புக் குற்றங்கள் அதிகரிப்பு

அமெரிக்காவில் இன வெறுப்பின் அடிப்படையிலான குற்றங்கள் தொடர்ந்து 2வது ஆண்டாக அதிகரித்துள்ளதாக, அந்நாட்டு மத்திய புலனாய்வுத்துறையான எஃப்.பி.ஐ. தெரிவித்துள்ளது. ஆபிரிக்க வம்சாவளி அமெரிக்கர்கள், முஸ்லிம்கள், யூதர்கள் மற்றும் எல்ஜிபிடி எனப்படும் ஒருபால் ஈர்ப்பு கொண்டவர்களுக்கு எதிராக, வெறுப்பின் அடிப்படையில் இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்த புள்ளிவிவரங்களை எஃப்.பி.ஐ. வெளியிட்டுள்ளது. 2016ம் ஆண்டில் 6 ஆயிரத்து 100 வெறுப்புக் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளன என்றும், இது முந்தைய ஆண்டைவிட 5 சதவீதம் அதிகம் என்றும் எஃப்.பி.ஐ. புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. மேலும் 2016ல் முஸ்லிம்களுக்கு எதிரான சம்பவங்கள் சுமார் 20 சதவீதம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## உலகில் இப்படியொரு தொடருந்துச் சேவை!

ஜப்பானிய தொடருந்துகள் அனைத்தும் நேரம் தவறாமைக்கு உலக அளவில் புகழ்பெற்றவை. இந்நிலையில், புறப்பட வேண்டிய நேரத்துக்கு 20 விநாடிகளுக்கு முன்னதாகவே தொடருந்து புறப்பட்டுச் சென்றதற்காக ஜப்பான் தொடருந்து சேவை நிறுவனமொன்று பயணிகளிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியது. டோக்கியோ நகர இணைப்பு தொடருந்தான சுகுபா எக்ஸ்பிரஸ் வடக்கு புறநகர் பகுதியில் உள்ள மினாமி நகரியமா தொடருந்து நிலையத்திலிருந்து அட்டவணையில் தெரிவிக்கப்பட்டிருந்த 9:44:40 மணிக்கு புறப்படுவதற்கு பதிலாக 20 விநாடிகளுக்கு முன்னதாக 9:44:20 மணிக்கே புறப்பட்டுவிட்டது. இந்த நிலையில், பயணிகளை மிகப்பெரிய தொல்லைக்கு ஆளாக்கி, சிரமம் உண்டாக்கியதற்காக மிகவும் மன்னிப்பு கேட்டுக் கொள்வதாக சுகுபா எக்ஸ்பிரஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## தாயகத்திலேயே....

சொந்தத் தொகுதி சிங்களவர்களின் ஆக்கிரமிப்பிற்குள் வரும்போது பார்த்துக்கொண்டிருப்பவர், கன்னியாய் வெந்நீரூற்று சிங்களமயமாகும் போது பார்த்துக்கொண்டிருப்பவர், கோணேசர் கோயில் படைத்தளமாகும்போது பார்த்துக் கொண்டிருப்பவர்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி கொடுக்கப்பட்டபோது சிங்கள மக்களுக்கும் தான் எதிர்க்கட்சித் தலைவர் எனக் கூறி தமிழ் மக்களின் வேணவாவைத் தட்டிக்கழித்தவர். சிங்களவர் கூட தனது இனத்திற்கு காட்டாத விசுவாசத்தை அந்த இனத்திற்காகக் காட்டிக்கொண்டிருப்பவர். இவ்வாறான ஒருவர் எப்படி தமிழ் மக்களுக்கு சாதகமாக அரசமைப்பு வரவேண்டும் என விரும்புவார்?

சுமந்திரன் யார்? சுமந்திரனை தமிழ்த் தேசிய அரசியலுக்குள் நுழைக்கவேண்டும் என்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார். பல இராஜதந்திரிகளின் திட்டமிட்ட சூழ்ச்சியின் அடிப்படையிலேயே அவர் இந்த அரசியலுக்குள் நுழைக்கப்பட்டவர்.

அவரது வருகையின் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிங்கள மயமானது. கூட்டமைப்பில் உள்ள ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிங்களத் தரப்பினருக்கு ஒத்தூதத் தொடங்கினர். தமிழ்த் தேசிய அரசியலைச் சீர்குலைக்கவேண்டும் என்பதற்காகவே அவர் அரசியலுக்குள் உள்வாங்கப்பட்டார்.

இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சுமந்திரனுக்குப் பின்னால் சுற்றிச் சுழலும் பம்பரம் போல மாறியிருக்கின்றனர். சுமந்திரனை எதிர்த்தால் அடுத்த நாடாளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்புக் கிடைக்காது என்பதற்காகவே அவர்கள் அப்படி மாறியிருக்கின்றனர்.

ஆக, இப்படியானவர்கள்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனக்கூறி, அவர்களைக் கொண்டுதான் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு சிங்களத் தரப்பு துடிக்கின்றது. எந்த ஒற்றையாட்சி - பௌத்தத்திற்கு முன்னுரிமை - அரசமைப்பு தமிழ் மக்களைக் கொன்றொழித்ததோ அதேபோன்று ஒரு அரசமைப்பே மீண்டும் கொண்டுவரப்படவுள்ளது.

**தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தமிழீழம்தான் தீர்வு என்பதில் எந்த மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை. தமிழீழத் தாயகத்தை துளியளவிலும் விட்டுக்கொடுப்பதற்கு தேசியத் தலைவரோ தமிழீழ விடுதலைப் புலிகளோ தயாராக இருக்கவில்லை.**

புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படுமாயின் அது தமிழ் மக்களை, தமிழரின் தாயகத்திலேயே நிரந்தர அடிமைகளாக்கும். அதன் பின்னர் தமிழர் தாயகம் என்ற பேச்சுக்கே இடமிருக்காது. புதிய அரசமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்களாயின் அது முப்பது வருட காலப் போராட்டத்தையும் இலட்சக்கணக்கான உயிர்க் கொடையையும் வீணானதாக மாற்றும்.

சிங்களத் தரப்பு சுமந்திரனை தமிழ்த் தேசிய அரசியலுக்குள் கொண்டுவந்த பலனை அடையக் காத்திருக்கின்றது. அதைவிட, சம்பந்தனை விட்டால் ஒற்றையாட்சியையும் பௌத்தத்திற்கு முன்னுரிமையையும் வழங்கும் அரசமைப்பு ஒன்றை எப்போதுமே நிறைவேற்ற முடியாது என சிங்களப் பேரினவாதிகள் வெளிப்படையாகவே கூறுகின்றனர்.

இவ்வாறான களச் சூழ்நிலைகளின் பின்னணியில், புலம்பெயர் தமிழ் மக்கள் புதிய அரசமைப்பு தொடர்பாக எதுவித அக்கறையும் இன்றி இருப்பது தொடர்பாக தாயகத்தில் உள்ள தமிழ் மக்கள் கவலையடைந்துள்ளனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தமிழீழம்தான் தீர்வு என்பதில் எந்த மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை. தமிழீழத் தாயகத்தை துளியளவிலும் விட்டுக்கொடுப்பதற்கு தேசியத் தலைவரோ தமிழீழ விடுதலைப் புலிகளோ தயாராக இருக்கவில்லை. என்றைக்கும் அதுவே தமிழ் மக்களின் இலக்கு.

ஆனால், அதை சிறீலங்காவின் அரசமைப்பு மூலமாகவோ சிறீலங்கா நாடாளுமன்று மூலமாகவோ பெற முடியாது. சர்வதேச பின்புலத்துடன் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்படும் இராஜதந்திர நடவடிக்கைகள்தான் தமிழீழத்தைப் பெற்றுத்தரும்.

எனவே, இந்தப் புதிய அரசமைப்பு தேவையில்லை என்பதை புலம்பெயர் தமிழ் மக்கள் உரத்துக் கூற வேண்டும். தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் ஒரே நேரத்தில் குரலெழுப்புவதன் மூலம் இந்த அரசமைப்பைத் தோற்கடிக்க முடியும்.

இல்லையேல், புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டு தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்பட்டுவிட்டது என சிங்கள தேசம் உலகின் காதுகளுக்கு பறைசாற்றும். உலகம் அதை நம்பிக்கொண்டிருக்கும். ஏனெனில், தற்போதைய அரசமைப்பு முயற்சியைக்கூட சில நாடுகள் பாராட்டிக்கொண்டிருக்கின்றன. எனவே, காலம் தாழ்த்தாமல் தமிழ் மக்கள் குரலெழுப்பவேண்டும்.

## ஊரு இரண்டு பட்டால்....

அதன் மூலம் கூத்துக்கட்டும் கலைஞர்களுக்கு வருமானம் வரும். அங்கீகாரமும் கிடைக்கும். நன்றாக நடிக்கும் கலைஞர்களுக்கு சிலர் மேடையிலேயே வாழ்த்தி பணமும் தருவார்கள். இப்படி வாழ்க்கைக்குத்தேவையான பொருளாதாரத்துடன் பேரும் புகழும் வந்து சேரும்.

உண்மை இப்படி இருக்க ஊர் இரண்டுப் பட்டு நின்றால் கூத்தாடி எப்படி மகிழ்வான்? முதலில் ஊருக்குள் சண்டை இருந்தால் எந்த விழாவும் ஒழுங்காக நடக்காது என்பதே உண்மை.

இதற்கு உண்மையான பொருள் வாய், நாக்கு. வாய் திறக்காமல் இருக்கும் வரை நாக்கு மௌன சாமியாராக அமைதியாக படுத்திருக்கும். வாய் திறந்து உதடு இரண்டு பட்டால் நரம்பில்லாத நாக்கு கண்டதையும் பேசும். அதற்கு கட்டுப்பாடே கிடையாது கொண்டாட்டமாகி விடும் என்பதைத்தான் இப்படிச் சொன்னார்கள்.

## இறைச்சிகளின் மூலம் மனிதருள்....

கலிபோர்னியா பகுதிகளில் பொதி செய்து அடைத்து விற்கப்படும் இறைச்சிகளின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. வான்கோழி, கோழி, மாடு, பன்றி ஆகியவற்றின் இறைச்சி மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வான்கோழி இறைச்சிகளை ஆய்வு செய்ததில், 73 சதவீதம் இறைச்சிகளில் இ–கோலி கிருமிப் பாதிப்பு இருந்தது. கோழிகளை ஆய்வு செய்தபோது 43 சதவீத இறைச்சிகளில் இ–கோலி இருந்தது. மாட்டிறைச்சியில் 18 சதவீமும், பன்றிக் கறியில் 15 சதவீதமும் பாதிப்பு இருந்தது. மொத்தத்தில் நான்கில் ஒரு பங்கு இறைச்சியில் இ–கோலி கிருமிப் பாதிப்பு இருந்தது.

இ–கோலி கிருமியில் பல வகைகள் உள்ளன. ஆனால் சிறுநீர் பாதை தொற்றுக்கு ஆளானவர்களின் சிறுநீரில் இருந்த இ–கோலி கிருமியும், இறைச்சிகளில் இருந்த இ–கோலி கிருமியும் ஒரே வகை என்பது மரபணு ஆய்வில் உறுதியானது. அதனால் சிறுநீர் பாதை தொற்றுக்கு காரணமான இ–கோலி கிருமி, இறைச்சிகளில் இருந்து பரவியிருக்கலாம் என்ற சந்தேகத்தை ஆராய்ச்சியாளர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

பச்சை மாமிசத்தை சரியான முறையில் பராமரிக்காதது, முறையாக சமைக்காதது போன்றவற்றால் இந்த இ–கோலி கிருமி மனிதனின் பெருங்குடலுக்குள் சென்று பாதுகாப்பாக உயிர் வாழ்கிறது. இந்த இ–கோலி கிருமி மலம் மூலமாக வெளியேறும்போது, மனிதர்களின் சிறுநீர் பாதையிலும் நுழைந்து பாதிப்பை ஏற்படுத்தலாம் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சிறுநீர் பாதை தொற்றுக்கு உள்ளானவர்களிடம் என்ன உணவு சாப்பிட்டீர்கள் என்ற விடயத்தை ஆராய்ச்சியாளர்கள் கேட்கவில்லை. அதனால் சிறுநீர் பாதை தொற்றுக்கு, கோழி இறைச்சி வகைகள்தான் காரணம் என்பதை 100 சதவீதம் உறுதிபடுத்த முடியவில்லை. இந்த ஆராய்ச்சி கட்டுரை கலிபோர்னியா மாநிலத்தின் சான் டியாகோவில் சமீபத்தில் நடந்த தொற்றுநோய் பாதிப்பு கருத்தரங்கில் வெளியிடப்பட்டது.

## புத்திசாலித்...

பிறகு பீர்பால் ஒரு மண் குடத்தை எடுத்தார். ஒரு பூசணிக்கொடியில் காச்சிருந்த பூசணிப்பிஞ்சு ஒன்னை கொடியோட மண் குடத்திற்குள் வைத்தார். வைக்கோலால் குடத்ததை மூடினாரு.

நாளாக நாளாக பூசனிப் பிஞ்சு குடத்திற்குள்ளேயே நன்றாக வளர்ந்து பெருத்தது. குடம் நிறையுமளவிற்கு பூசணிக்காய் பெருத்ததும், பூசணிக்காயைத் தவிர மற்ற வைக்கோல், கொடி, காயின் காம்பு எல்லாவற்றையும் கத்தரித்து விட்டார் பீர்பால்.

இப்போ அந்தக் குடத்தை அக்பரிடம் காட்டினார் பீர்பால். அக்பருக்கு ஆச்சரியம். குடத்தின் வாயோ உள்ளே இருக்கும் பூசணிக்காயைவிட மிகவும் சிறியது. இதனுள் இவ்வளவு பெரிய பூசணிக்காயை எப்படி நுழைத்தார்னு. பீர்பால் அதை விளக்கிவிட்டு, அந்தப் பூசணிக்காய் குடத்தை அப்படியே காபூல் அரசனுக்கு, அதிசயம்னு அனுப்பினாரு.

அதைப் பார்த்த காபூல் அரசன் பீர்பாலோட புத்திக் கூர்மையை எண்ணி வியந்தாராம்.

## கானல்நீராகிப் போன...

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பக்கபலமாக நின்றதற்கான கூட்டுத் தண்டனையாக இரண்டு இலட்சத்து எண்பதுனாயிரம் தமிழ்ப் பொதுமக்களை திறந்தவெளி வதைமுகாம்களில் அடைத்து வைத்து சிங்கள அரசு பாதகச் செயல் புரிந்ததும் உண்மைதான்.

ஆனாலும் இவையெல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான அரசியலை உருவகிக்கவில்லை. கொழும்பைப் பொறுத்தவரையும் சரி, டில்லியைப் பொறுத்தவரையும் சரி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான அரசியல் என்பது இன்றும் கானல்நீராகவே காணப்படுகின்றது.

சிங்கள நாடாளுமன்றத்தில் வைத்துத் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று அழைத்த சம்பந்தராக இருந்தாலும் சரி, அவருக்குப் பரிவட்டம் கட்டுவோராக இருந்தாலும் சரி, தமிழீழ தேசியத் தலைவரையும், அவரது வழிநின்று களமாடி வீழ்ந்த மாவீரர்களையும் புறமொதுக்கி அரசியல் செய்ய முடியாத நிலையிலேயே இருக்கின்றார்கள்.

இதேநிலை தான் தாய்த் தமிழகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும். தமிழீழ தேசியத் தலைவரையும், மாவீரர்களையும் முன்னிறுத்தி எவரும் அரசியல் செய்கின்றார்களோ இல்லையோ, தலைவரையும் மாவீரர்களையும் புறந்தள்ளி எவராலும் அரசியல் செய்ய முடியாது என்பதே யதார்த்தமாகும்.

இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இயங்கு நிலையில் இல்லை தான். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயரையும், கடிதத் தலைப்புக்களையும் பயன்படுத்தி நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகக் காகிதப் புலிகளால் அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன தான். எல்லோருக்குமே தெரியும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்திப் பல்வேறு அணிகளின் பெயர்களில் வெளிவரும் அறிக்கைகள் எல்லாம் காகித ஏவுகணைகள் தான் என்று. இந்தியாவிலோ, அல்லது மேலைத்தேய நாடொன்றிலோ ஒய்யாரமாகக் கொய்யகம் புரிந்தவாறு, அவரவர் விரும்பியபடி தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரில் அறிக்கை விடுக்கிறார்கள். இதுவும் ஓர் உண்மையை உணர்த்துகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரசன்னம் இல்லாத காலத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்தான் தொடர்கின்றது என்பதுதான் அது.

இன்று மட்டுமல்ல. எத்தனை தசாப்தங்கள் கடந்தாலும் இதே நிலைதான் தொடரப் போகிறது.

இதனையே தமிழீழ தாயகத்தின் மாவீரர் துயிலும் இல்லங்களிலும், புலம்பெயர் தேசங்களிலும், தாய்த் தமிழகத்திலும் உணர்வெழுச்சியுடன் இவ்வாண்டு நிகழ்ந்தேறிய மாவீரர் நாள் நிகழ்வுகள் எடுத்தியம்புகின்றன.

மாவீரர்களின் நினைவுகளை மட்டும் சுமந்து நெய் விளக்குகளையும், மெழுகுதிரிகளையும் நாம் ஏற்றவில்லை. தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும், தனியரசு என்றிடுவோம். எந்த நிலை வரும் பொழுதிலும் நிமிருவோம், உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்? என்று சபதமெடுத்தே இவ்வாண்டும் மாவீரர் நாளை உலகெங்கும் வாழும் மானத் தமிழர்கள் அனைவரும் நினைவு கூர்ந்திருக்கின்றார்கள். தமிழர்களின் இச் இச்சபதம் என்றோ ஒரு நாள் நிறைவேறியே தீரும் என்பது திண்ணம்.

# மரண அறிவித்தல்



**திரு.பொன்னையா திருச்செல்வம்**
(செல்வம்)
பிறப்பு. 07.10.1940 - இறப்பு - 23.11.2017

இளவாலை சிறுவிளானை பிறப்பிடமாகவும் பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா திருச்செல்வம் அவர்கள்23.11.2017 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா மரியம்மா தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற திலசிஞ்யோ பவாநோனா அவர்களின் அன்பு மருமகனும் ஆவார். சோமாவதி (சுமணா) அவர்களின் அன்புக்கணவரும், ஆரோக்கிய நாதர் (செல்வராசா) மற்றும் காலஞ் சென்ற ஜோசெப் அவர்களின் சகோதரரும், ராணி, சிறீமா ஆகியோரின் மைத்துனரும், யேக்கர் புளுகில் (ஜேர்மனி), அன்ரனி ஸ்ரீபன்(அன்ரன் – பிரான்ஸ்) பற்றிமா கிறிஸ்ரின் (லதா – வவுனியா), அன்ரனி ஜோன்சன் (சிறி – முல்லைத்தீவு) அன்ரனி றொபேட (மொறிஸ் – பிரான்ஸ்) சுலக்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகா, தர்மினி, அன்ரன், கொலின், ராஜி, றெக்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். பிரியங்கா, பிரவீன், தனுசன், சியா, ஏஞ்சல், சீனு, ஜஸ்வன், அனோஜன், ஆர்திகா, அனுஸ்ரிகா, ஸ்மித், கிஷாந்த், கியூசிகா, றொஜின், அகேனன், ஓவியா, துவாரகன், நம்ருதா, செலஞ்சர் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்**

அன்னாரின் பூதவுடல், 25.11.2017 தொடக்கம் சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களில் மாலை 2:00 மணி தொடக்கம் 4:00 மணிவரை HOPITAL SAINT-ANTOINE,23 Rue de chaligny 75012 Paris எனுமிடத்தில் பார்வைக்கு வைக்கப்படும்.

இறுதிக் கிரியைகள் 29.11.2017 அன்று மாலை 2:30 மணிக்கு Église St. MARTHE (118 avenue jean jurés 93500 PANTIN) தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு Inhumation au cimetière de pantin parisien (164 avenue jean jaurès 93500 pantin) மயானத்தில் மாலை 15:30 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல் மற்றும் தொடர்புகளுக்கு :
0049 01773269163 – புளுகில் (ஜேர்மனி )
0033 6 37 93 85 05 – அன்ரன் (பிரான்ஸ்)
0033 6 68 81 13 39 – றொபேட (பிரான்ஸ்)
0033 6 14 35 85 07 – றெக்ஸ் (பிரான்ஸ்)
0094 7765 38 401 – லதா (இலங்கை)






























# Mohan Jewellery Mart



பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

VISA | Aurore

**3/4 Fois sans Frais**
(Piéce d'identité + Rib + C.B)

201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82

Mo: La Chapelle / Gare du Nord

# Professeur de Soutien Scolaire

## Maths et Sciences Physiques (CP à la Terminale)
## Français, His-Géo, Science (CP à CM2)

**Cours au domicile de l'élève !**

Déplacements possibles dans le département 95 autour de la ville de Saint Gratien mais également dans les départements (75, 92, 93).
Tout dépend des distances, du temps de parcours, etc.
Il faut voir avec le professeur pour les cas particuliers.



Pour plus d'informations, consulter le site internet !

பிரெஞ்சு மொழியில் CP-CM2 வரை எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படும். Collége – Lycée வகுப்புக்களுக்கு Maths – Sciences - Physiques பாடங்கள் அவரவர் தராதரங்களுக்கு ஏற்ற வகையில் கற்றுக்கொடுக்கப்படும். உங்கள் வீடுகளுக்கும் குறிப்பிட்ட தூரத்திற்கு வந்து பாடங்கள் எடுக்கலாம். Saint Gratien அதைச் சுற்றியுள்ள ஊர்களுக்கு (75, 92, 93) வந்து வகுப்புகள் எடுக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு
இணையத்திலும் தொலைபேசியிலும் தொடர்பு கொள்ளவும். 12 ஆண்டுகள் அனுபவம் உடையவர்.

http://soutienscolaire-m-sp.sitego.fr
Email : chinniah_anuraj@hotmail.fr

**Port : 06.23.69.21 58**

# ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!

## உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்




DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107

- எலிகள் - சுண்டெலிகள்
- கரப்பான் பூச்சிகள்
- தொல்லைகொடுக்கும் பூச்சிகள்

Tél.: 01 60 07 34 29

அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம்
ஒரே தடவையில்
பயன்பெற்றிட நாடுங்கள்

14 Rue Charles V,
75004 Paris.

சுதா / விமல் : 06 34 18 80 04